# ஆலயங்கள் உண்மை விளக்கமா?
# வாழ்வின் அர்த்த மண்டபமா?



ஆக்கியோன் சி. இரட்ணராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

# ஆலயங்கள் "உண்மை" விளக்கமா?



# வாழ்வின் அர்த்த மண்டபமா'


உலகநிலையில்

ஆக்கியோன். சி. இரட்ணராஜா

(ஓய்வுபெற்ற பொறியியலாளர்)


**இது ஒரு ஞான சிந்தனை ஓட்டம்**

நுண்ணறிவைக் கிளறுவது இதன் நோக்கம்.

கதையுமல்ல, காப்பியமுமல்ல, உபபிரிவுகள் கொண்ட புத்தகமுமல்ல.

உள்ள உணர்வுகளின் அன்பு ஊற்று.

'ஆன்ம' ஒருமைப்பாட்டின் 'ஆலயத் தென்றல்'

வாழ்வின் குறிக்கோள் என்ன? என்பதன் 'அர்த்த மண்டபம்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்பு விபரம்

| | | |
|---|---|---|
| பதிப்பு | : | ஜூன் 1999 |
| பதிப்புரிமை | : | ஆசிரியர் |
| நூற்தலைப்பு | : | **ஆலயங்கள் உண்மை விளக்கமா? வாழ்வின் அர்த்த மண்டபமா?** |
| நூல் அளவு | : | 142 mm x 195 mm |
| பக்கங்கள் | : | 70 + ii |
| கணனி வடிவமைப்பு | : | *திருமதி. சு. கிருஷ்ணமூர்த்தி* |
| அச்சுப்பதிப்பு | : | *சக்தி என்றர்பிறைஸஸ்*<br>31 A, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை<br>கொழும்பு - 13 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓ்

# ஆலயங்கள் "உண்மை" விளக்கமா?
# வாழ்வின் அர்த்த மண்டபமா?

இறைவன் திருவருள் உலகம் முழுவதும் நிறைந்து, எல்லாப் பன்மைத் தோற்றங்களையும் ஊடுருவி, எல்லாமாக நிற்கிறது. இந்தப் பிரபஞ்ச சக்தி அத்திவாரமாக இல்லாவிட்டால் இங்கு எதுவுமே இல்லை. இந்த பிரபஞ்ச சக்தியே இறைவனின் பேரன்பு. இங்குள்ள பல அமைப்புகளையும் எந்த வித்தியாசமும் அற்று இயக்குகின்றது. இவற்றிற்கு சக்தி ஊட்டி தான் மாற்றமில்லாமல் மிளிர்கின்றது. எல்லாம் இங்கு மாற்றநிலையில் மாறுகின்றன. மனிதர் உண்மை தெரியாமல், உண்மையற்றதை நம்பி உழல்கின்றனர். இப்பேரன்பு இவ்வுலகில் மக்களிடையே நிறைந்து பந்தபாசத்தை காட்டி, வித்தியாசத்தையூட்டி நிற்கின்றது. இதனால் வெறுப்பு ஏற்படுகின்றது. எத்தனை சமயங்கள் உலகில் பெரும் வளர்ச்சியடைந்திருந்தாலும், எத்தனை ஞானிகள் தங்கள் வாழ்க்கையில் வாழ்ந்துகாட்டி, எடுத்துக்கூறியிருந்தாலும் மக்கள் இந்தப் பந்தபாசங்களிலிருந்து விடுபட முடியவில்லை. மக்கள் எப்படி சுருக்கமாக, குறுக்குவழியில் பணம் சம்பாதிக்கலாம் என்று வாழ்வில் பெரும்பாலும் செயற்படுகின்றார்கள். அவர்கள் எவ்வளவு கூடுதலாக பணம் சம்பாதிக்கலாம் என்று மட்டும் சிந்தித்து வாழ்கின்றார்கள். இந்த நிலை "உண்மையில்" இருந்து பிரிந்த நிலை. ஆகவே இந்த நிலை மாறவேண்டும். இதை நாம் எல்லோரும் சிந்தித்து செயற்படவேண்டும். மக்கள் இங்கு எழுதப்படும் கருத்துகள் தங்கள் நுண்ணறிவைப் பாவிக்கவும், தட்டி எழுப்பவும், இங்கு குறிப்பிட்ட வழிமுறைகள், நித்திய வாழ்வில் கடைப்பிடிப்பதற்காகவும் என்று சிந்தையில் கொள்ள இறைவன் திருவருள் என்றும் எல்லோர் உள்ளத்திலும் மிளிர்கின்றது. பணம் உழைக்கவேண்டாம் என்பது கருத்தல்ல. அது ஆத்மீக வளர்ச்சிக்கு, சுயநலத்தைக் குறைக்க எவ்வளவு உதவுகின்றது என்பதே முக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருளில் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற குறளின் கருத்துப்படி உண்மையை மட்டும் இந்த ஞானசிந்தனை ஓட்டத்தை படித்துச் சிந்திப்போம். மக்கள் இன்றைய விஞ்ஞான உலகிலும் ஆலயங்களையே கூடுதலாக நாடிச் செல்கின்றார்கள். ஆலய விளக்கங்கள் எத்தனையோ புத்தகங்கள் மூலம் வெளியிடப் பட்டுள்ளன. எத்தனையோ அறிஞர்கள் சொற்பொழிவுகள் மூலம் உண்மைப்பொருளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள், கூறுகிறார்கள். ஆனால் மக்கள் நம்பிக்கையில் மட்டுமே ஆலயம் செல்கிறார்கள். அவர்கள் இறைவனை விளங்கியதாகவோ ஆலய அறிவைப் பெற்றதாகவோ, தன்னை விளங்கியவர்களாகவோ தென்பட-வில்லை. பெரும் இன்னல்படுகின்றார்கள். ஆகவே, உண்மையை, அத்வைத பொருளை பன்மையில் உணர்வோம். விஞ்ஞானம் முன்னேறிய நிலையில், இக்காலத்தில் மிகப் படித்த மேதைகள், விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் இறை நம்பிக்கையை பெரிதும் இழந்துவிட்டார்கள் என்றே கூறலாம். ஆனாலும் எவரும் ஆலயங்களையோ, பள்ளிவாசல்களையோ, புத்த கோவில்-களையோ உலகில் இல்லாமல் செய்துவிட முடியவில்லை. ஏன்? எங்கு உண்மை இருக்கின்றதோ அது கால மாற்றத்தால் அழியாதது. இன்றும், அன்றும், என்றும் ஒரு இராமாயணம், திருக்குறள், பைபிள், குர்ஆன், புத்தசாசனங்கள் நிலைத்து நிற்குமாயின் அது அழிவற்ற உண்மை தத்துவத்தை, உயிருக்கு உயிரான பொருளை நிலைநிறுத்தி நிற்கின்றது, அதை பரப்புகிறது என்பதுதானே அர்த்தம்!

விஞ்ஞான காலத்திலும் மேற்கூறியவை மாற்றமடைய-வில்லை. ஆனால் விஞ்ஞானம் காலத்திற்கு காலம் மாறுகின்றது. பொருட்களை ஆராய்ந்து, வசதிகளை மனிதனுக்கு ஏற்படுத்து கின்றது. உதாரணமாக "நியூட்டன் விதிகள்" இன்று "ஐன்ஸ்டீன்" (Einstein) வகுத்த "தியரி ஒவ் றிலேற்றிவிற்றி" (Theory of Relativity) விதிகளினாலும் பின் வளர்ந்த பௌதீக விஞ்ஞானத்தினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல மாற்றங்களை அடைந்துள்ளன. இதுதான் உலக அமைப்பின் விதிமுறைகள் என்று விஞ்ஞானத்தினால் இதுவரை கூற முடியாததினால் மேலும் பல மாற்றங்களை அடையும். இது நிச்சயம் என நமக்கு விளங்குகின்றது. ஆகவே மாற்றமடையாத உண்மைப்பொருளை நாம் அறிவது மிக முக்கியம். ஆலயங்களும், மற்றைய வழிபாட்டு இடங்களும் மக்களுக்குத் தேவையா? இவற்றின் உண்மைப்பொருள் தத்துவ விளக்கங்கள் முதலியவற்றை எப்படி வாழ்வில் உபயோகித்துப் பயன்பெறலாம் என்று ஆராய்வோம். எம்முடைய வினைப்பயனுக்கேற்ப நாம் எல்லோரும் ஒவ்வொரு அறியாமையின் விகிதாசார நிலையில் செயற் படுகின்றோம். இந்த அறியாமை மனிதரில் ஒவ்வொரு வகையானதல்ல. இதுவே உண்மை நிலையை, எமது உட்பொருளை விளங்க முடியாததற்கு முக்கிய காரணம் ஆகின்றது. அதனால் முயற்சித்து இவ்வாழ்வில் தேவையற்ற உலக சிந்தனையைக் குறைத்து இறை நினைவிலேயே நாம் செயற்படவேண்டும்.

அறியாமையில் நின்று நீங்கிய ஞானிகள் அமைத்த ஆலயங்களை நோக்குவோம். மக்கள் இறை வழிபாட்டிற்காக ஆலயங்களை நோக்கிச் செல்லும்பொழுது அங்கு இறைவனிடம் தங்களது பிரச்சனைகளை சமர்ப்பிக்கிறார்கள். இதற்குத் தங்களால் தீர்வு காணமுடியாத நிலையில் மனம் அமைதி பெறும் என்று மக்கள் பரிபூரணமாக நம்புகின்றார்கள். ஞானிகளைத் தவிர எந்தப் படித்தவனுக்கோ, கோடீஸ்வரனுக்கோ ஏதோ ஒரு கவலை, திருப்தியின்மை வாழ்வில் இருந்துகொண்டே வருகின்றது. ஆகவே, இன்றுவரை சமூகக்கல்வி அமைப்பு, அவை கொடுத்த பட்டங்கள் மனிதருக்கு அமைதியை கொடுத்ததாக இல்லை. வீட்டில் நாட்டில், உலகில் எங்குமே அமைதியின்மை ஆகவே கல்வித்துறை தொழிலை எதிர்பார்த்து, வெளி அமைப்பையே காட்டுவதனால் அது மனிதரின் உள்ளுணர்வை வளர்க்கத் தவறிவிட்டது. வெளி ஆராய்ச்சியில் பன்மை அமைப்பில் ‘மதம் கொண்டு அறியாமையில் இருக்கும் மக்களுக்கு மதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்ளுணர்வை" வளர்த்தன. மக்கள் ஆத்மீக நிலையில் மிகவும் குறைந்திருப்பதால், ஆலயங்கள் மக்கள் தங்கள் உள்உணர்வை வளர்க்க, சிந்திக்க இவ்வழியில் வாழுங்கள் என்று கூற அமைக்கப் பட்டன. ஒரு அமைப்பிலும் இப்பிரபஞ்சத்தில் காணமுடியாத பகுத்தறிவைப் பெற்றவன் மனிதன். பகுத்தறிவென்பது ஞானம். இது மனம் 'ஆன்மாவை', உள்ளுணர்வை உணரத் தொடங்கும் பொழுது ஏற்படும் அறிவு. இந்த ஆத்மசக்தி அறிவுதான் உண்மை எது, பொய் எது என்று இவ்வுலகில் ஈடுபட்டிருக்கும் மனிதருக்கு பகுத்து கூறக்கூடிய அறிவு. மனிதருக்கு உள்ள அறிவு இரண்டு வகைப்படும். இவை புலன்களினால் மனதில் ஏற்படும் அறிவு நிலைகள். இங்கு ஆன்மாவில் ஒளியூட்டப்பட்ட மனம், அந்த ஆன்ம சிந்தனையற்று செயல்படுகின்றது.

இந்த அறிவுகள் இரண்டும் பொருள்களைப் பற்றியது. ஒன்று சாதாரண அறிவு. இது மேசை, இது கதிரை என்று கண்களால் பார்த்து அறியும் அறிவு. இதைப்போலவே மற்ற புலன்களால் பன்மைப் பொருளை மனதில் பதிக்கும் அறிவு. இது பொதுவாக மனிதர்களுக்கு நேரில் விளங்கும் அறிவு (நொலேட்ஜ் - knowladge) மற்ற அறிவு "அறிந்து ஆராயும் தன்மை" (இன்ரலெக்ட் - Intellect) விளக்கம் உள்ளது. இந்த அறிவில் தான் படித்தவர்கள் முதல் விஞ்ஞானிகள் வரை செயற்படுகின்றார்கள். இவர்கள் மேற்கூறிய விதத்தில் உண்மைப்பொருளை பகுத்து அறியவில்லை. நிரந்தரமற்ற பொருட்களை மட்டும் ஆராய்ந்து பல வசதிகளை தற்காலிக நிலையில் இவ்வுலகில் மக்களுக்கு ஏற்படுத்தும் அறிவு உள்ளவர்கள் இன்றுவரை விஞ்ஞானம் எதனாலும் அழியாத, நிரந்தரப் பொருளை இவ்வுலகில் கண்டிருக்கிறதா? சிந்தனை சிற்பிகளே நீங்களே சிந்தியுங்கள். நிரந்தரப் பொருள் ஒன்று இருந்தால்தானே நிரந்தரமற்ற பொருட்கள் உண்டு என்று சிந்திக்கலாம். இங்கு எல்லாம் மாறுகின்றது, இறக்கின்றது என்று எல்லோரும் அறிவர். ஆகவே இப்படிப்பட்டவை நிரந்தரம் அற்றவை என்றும் நாம் உணர்கின்றோம். ஆகவே ஏன் நாம் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தரப் பொருளைப் பகுத்து உண்மையை அறியாமல் வாழ்கின்றோம்? நாம் ஆலயங்களை விளங்குவோம். "முயற்சி திருவினையாக்கும்" என்று செயல்பட்ட வீரன். அது சறுக்கியதும் ஆலயத்திற்கு விளக்கம் தேடி ஓடுகின்றான். தன்னை மிஞ்சிய சக்தி ஒன்று இருக்கின்றது என்று ஆலயத்தில் அடி பணிகின்றான். முயற்சியால் வெற்றி பெற்றவனோ, "எனது முயற்சியால் வெற்றி பெற்றேன்" என்று "எனது" என்ற இறுமாந்த நிலையில் உண்மையை விளங்காமல் செயற்படுகிறான்.

முயற்சிக்கவேண்டாம் என்று எவரும் கூறவில்லை. உலகில் பிறந்தவை செயற்பட்டே ஆகவேண்டும். முயற்சி உலகில் பலனை எதிர்பார்க்கும்பொழுது அங்கு தோல்வியும் தலை தூக்குகிறது. "பலனை" விளைவை எதிர்பார்த்தநிலையே எமது முயற்சிகள் எல்லாம். எமது கல்வித் திட்டம் வேலை வாய்ப்பை உலகில் எதிர்பார்த்து செயல்படுகின்றது. படித்தவனுக்கும்,, வேலைத்திறன் உள்ளவனுக்கும் பெரும்பாலும் இன்று மூன்றாந்தர நாடுகளில் வேலை வாய்ப்பின்மை கூடுதலாக உள்ளது. மேல்நாடுகளிலும் படித்தவருக்கு தகுந்த வேலை இல்லை என்ற நிலையும், வேலையின்மையும் ஏற்படுகின்றது. ஆகவே வாழ்வில் எமது முயற்சி பலனை எதிர்பாராது செயற்படவேண்டும். படிக்கின்ற நிலையில் அறிவைப் பெற படிக்கவேண்டும். தன்னுடைய ஆற்றலுக்கு (சுவதர்மா) ஏற்ப அதைச் செயல்படுத்த முயற்சிக்க வேண்டும். பலனை இறைவன் அருள் என்று விட்டுவிட வேண்டும். "உண்மையை உணர முயற்சிக்க வேண்டும். தோல்வியால் கவலை ஏற்படும், எல்லாம் இறைவன் அருளே என்று சிந்தித்து மீண்டும் முயற்சிக்கவேண்டும். தனது ஆற்றலுக்கு ஏற்றதாய் முயற்சிக்க வேண்டும். இல்லாவிட்டால் வேறு வழிகளை நாடவேண்டும். "பகவத் கீதை" பலனை எதிர்பார்த்து செயற்படாதே என்று ஆணித்தரமாக கூறுகின்றது. "நீ செயற்படாமல் இருக்கமுடியாது. தர்மத்தை நிலைநாட்ட உனது ஆற்றலுக்கு ஏற்ப செயல்படு" என்று விளக்குகின்றது. ஆகவே நாம் உலகில் "தர்மத்தை" செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களை பாதிக்கும் முயற்சியை கைவிட்டு, உலகிற்கு உதவும் முறையில் எமது ஆற்றலை பாவிக்க அதனால் நாமும் வாழ்வோம் என்பது நிச்சயம். வாய் பலனை எதிர்பாராதே என்று கூறினாலும், மனம் எதிர்பார்க்கின்றது. அதற்கு ஒரே வழி, அந்த நேரத்தில் மனது இறைவனை "எல்லாம் இறை செயலே" என்று சிந்திக்க பழக்க வேண்டும். இந்தப் பழக்கத்தை நித்திய வாழ்வில் செயல்படுத்த ஆலயம் வழிகாட்டுகின்றது.

"எல்லாம் இறை செயலே" என்ற அர்த்தத்தையும் மனதில் பதிக்கவேண்டும். அடிக்கடி சிந்திக்க அது மனதில் நன்கு பதிந்து விடும். வாழ்க்கையில் பிடரி அடி விழுந்தவர்களில் சிலர், ஏன்? என்று சிந்திக்கத் தொடங்குகிறார்கள். பெரும்பான்மை மக்கள் "ஐயோ இப்படி நடந்து விட்டதே" என்று குழறுகின்றார்கள். சிந்திக்கத் தொடங்குபவர்கள் வாழ்க்கையில் ஆத்மீகத்தில் முன்னேறுகிறார்கள். மற்றவர்கள் கவலைக்குள்ளாகி அதனால் வீட்டில் உள்ளவர்களையும் பாதித்து தங்களையும் அழித்துக் கொள்கின்றார்கள். "கவலை" ஒரு தீர்வா? அல்லது மருந்தா? அன்பு நிறைந்தவர்களே சிந்தியுங்கள்! எமது மனம் மறக்கக்கூடியதும், பழிவாங்கக்கூடியதும். எதை நாம் வாழ்க்கையில் மனதில் ஏற்படுத்தவேண்டும்? மறந்து மன்னிப்பது தெய்வீகம். பழிவாங்கல், கர்வம் வைத்தல் அசுர மனநிலையின் உச்சக்கட்டம். ஆகவே நாம் அத்தன்மையைக் குறைத்து, முற்றாக நீக்கவேண்டும். இதற்கு ஆலயம் செல்லவேண்டும். தெய்வீகக் கருத்துக்கள் மனதில் வேரூன்ற வேண்டும். மனம் எப்பொழுதும் "ஒரு உருவத்தில் மட்டும்தான்" பதியும் ஆகையினால் ஆலயங்கள் உருவஅமைப்பாக மனம் இறைவனில் பதியும் நிலையில் அமைந்துள்ளன. உருவங்களை வணங்கக்கூடாது என்ற நிலையில் உள்ள முஸ்லிம் மக்கள்கூட கற்பனையில் தங்கள் மனதில் சவுதி அரேபியாவில் உள்ள அமைப்பை ஏற்படுத்தி அந்த நினைவில் தொழுகின்றார்கள். கற்பனையிலும் ஓர் உருவமே அமைகின்றது. ஆகவே உருவ மூலமே மக்கள் இறைவனை விளங்கி உருவமற்ற, எங்கும் நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபூரண ஆனந்தத்தை அனுபவிக்கமுடியும் என்று வாழ்வில் இறை தத்துவமாக ஆலயங்களை அமைத்தார்கள். ஆனால மனிதன் கண்ட விஞ்ஞானம், மாற்றம் இல்லாநிலையை மக்களுக்கு இதுதான் என்று எடுத்துக்கூற முடியவில்லை. அதனால் நிலையற்ற மாற்றத்திற்குரிய பொருட்களை மட்டும் ஆராய்ந்து அந்த பொருளாதார வளர்ச்சியில் மனிதனை, ஆத்மீக நிலைக்குச் செல்லாமல் மயக்கி வைத்திருக்கின்றது. மயக்கம் தெளிய "உண்மையை" பகுத்து அறிந்து "பொய்மையை" நாம் நீக்க முயற்சிப்போம்.

"ஆன்மா" இலயிக்கும் இடம் ஆலயமாகும். இந்த ஆலயங்கள் கிழக்கு (ஈசானம்) நோக்கி கட்டப்பட்டிருக்கின்றன. அட்ட திக்குகளான வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, தென்மேற்கு, வடகிழக்கு, தென் கிழக்கு, வடமேற்கு என்ற அட்டதிக்குகளையும், கணித்து அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வுலகில் நாம் பார்க்கக் கூடிய திசைகள் இந்த எட்டும்தான். இந்த எட்டுத் திசைகளாலும் சக்தி ஆலயத்திற்குக் கிடைக்கின்றது. இதை அட்டதிக்குப் பாலகராக இந்து மதம் கூறுகின்றது. இந்த ஆலயங்களைக் கட்டும் தொடக்கத்தில் எட்டுக் கற்களை திசைகளைக் குறித்து வைப்பதாக கூறப்படுகின்றது. இவை ஆலயங்களைப் பாதுகாக்கின்றன. ஆலயங்கள், மனித உடல் அமைப்பை எடுத்துக்காட்டுகின்றன.

"உள்ளம் பெருங்கோயில், ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளாமணி விளக்கே"

திருமூலர் - திருமந்திரம்

இந்த திருமந்திரம், ஆலய அமைப்பே இவ் உடல் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. மனிதனின் உள்ளமே பெரும் கோயில் என்றார். கோயிலில் உள்ள மூர்த்தி எப்படி கோயில் முழுவதும் அருள்பாலித்து இருக்கிறாரோ அதே போல் மனித உள்ளத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சியாகிய திருவருள் இறைவனால் மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. இறை அருள் நிறைந்த உள்ளம், இதழ் இதழாக தாமரை மலர்வதுபோல படிப்படியாக உணர்வலைகளை மலர விடுகின்றது. இந்த உயர்ந்த உணர்வு அலைகள் சுயநலமற்று, மற்றவர்களின் துன்பத்தைப் போக்க, அறியாமையை நீக்க எண்ணுகின்றது. பாடுபடுகின்றது. தன்னுடைய ஆன்மாவை உணர்ந்து அதுவே இப்பிரபஞ்ச நிலைகள் எல்லாம் மிளிர்கின்றது என்று கருத வைக்கின்றது. இந்த அன்புக்கு எந்தப் பாகுபாடும் இல்லை. உயர்வு தாழ்வும் இல்லை. இது பேரன்பு. இந்த அன்பு மற்றவர்களின் உள்ளத்திலும் இந்த நிலையை ஏற்படுத்தப் பாடுபடும். இது ஆன்ம சிந்தனையை மட்டும் வளர்க்க பாடுபடும் நிலை. இங்கு வெறுப்பு, கோபம், பன்மநிலை, பொறாமை, ஏற்றத்தாழ்வு, அவாஞ்சை, தன் உடலை பெயரை, புகழை பெரிதாக எண்ணும் எந்த தன்மையும் இல்லை. பரிபூரண ஆனந்தநிலை. இங்கு நிறைவைத் தவிர குறைவு இல்லை. இந்த உணர்வுகள் எல்லா உள்ளங்களிலும் இருந்து பிறப்பதால் "உள்ளம் பெருங்கோயில்" என்றார். ஆலய அருள் இந்த திருவருளே. இரண்டும் தெய்வீகம் ஆனது, ஒரு கருத்துடையது. இந்த உள்ளம் சதையால் அமைந்த உள்ளம் அல்ல. இது வலது பக்கத்தில் எழும் உள் உணர்வாகும். இது இரத்தத்தையே உறையப்பண்ணும் உணர்ச்சி அன்பு. இது எல்லாரிலும் உள்ளது. ஆனால் அதை நாம் சிந்திப்பதும் இல்லை; செயற்படுத்துவதும் இல்லை. ஆகவே உள்ளுணர்வை மதிப்போம்; செயற்படுத்துவோம்.

அடுத்ததாக "ஊன் உடம்பு ஆலயம்" என்றார். இந்த உடல், தசை, எலும்பு, குருதி, நரம்புகள், தசைநார்கள் போன்ற ஊன்களால் ஆனவை. ஆகவே ஊன் இந்த உடம்பு என்றார். இப்படியான சக்தியின்றி இயங்காத பிண்டங்கள் அந்த உள் அமைந்த சக்தியால் 'ஆன்மாவால்' ஆலயம் ஆகின்றது, இயங்குகின்றது என்றார். ஆன்மா இலயிக்கும் இடம் ஆலயம். இதனால் உடல் அமைப்பை ஆலயம் என்று விளக்கினார். ஆலய அமைப்பில் மூன்று வீதிகள் அமைந்த கோவில்களும், ஐந்து அமைப்பு வீதிகளும் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களும் உள்ளன. இந்த மூன்று வீதிகள் எமது உடல் காரண, சூக்கும, பௌதிக, சரீரங்களைக் குறிக்கின்றன. எந்தக் காரணத்தால் இந்த உடல் அமைந்தோ அது கண்ணுக்குப் புலப்படாத நுண் அலைகளினால் அமைந்த 'காரண' சரீரமாகும். மனம் ஆன்மாவை மட்டும் நேசிக்கும்பொழுது வினைப்பயன் அனுபவித்து முடிந்த நிலையில் ஆன்மாவை மேல்நிலைக்கு அனுமதிக்கின்றது. இது நினைவுகளின் அசைவு நிலையே. இந்த நிலையில் வினைப்பயன், சஞ்சித, பிராரப்த, ஆகாமிக நிலைகளில் முற்றாகத் தீராவிட்டால் அடுத்த பிராரப்த உடலமைப்பை அந்தக் காரணத்தால் கொடுக்கப் பட்டதை எடுக்கின்றது. 'சஞ்சிதம்' என்பது பல பிறவிகளில் எமது மனம் பதிந்த கர்மங்கள். 'பிராரப்தம்' இந்த சஞ்சித வினையில் ஒரு பகுதியை இவ்வுலகில் அனுபவிக்கப்பெற்ற இந்த உடல் அமைப்பு. 'ஆகாமியம்' என்பது இந்த உடலில் இருந்துகொண்டு பகுத்தறிந்து ஆன்மாவை உணராமல் ஆணவத்தில் வாழ்ந்து, புலனறிவுகளால் செயற்பட்டு இப்பிறவியில் நாம் சேகரிக்கும் கர்மம். சூக்கும சரீரம் முதல் வீதியையும் (subtle body), இரண்டாவது வீதி, காரண சரீரத்தையும் (causal body) குறிக்கின்றன. இதுவும் நுண் அலைகளினால் ஆக்கப்பட்டவையே. எமது கனவுகள், இந்த சரீரத்தால் ஏற்படுகின்றன. இதை யாரும் வாழ்வில் உணர்வதில்லை. அது கனவு என்று விட்டு விடுவார்கள். அல்லது நல்ல கனவு, கெட்ட கனவு என்று ஆராய்வார்கள் இவைகள் மனதில் ஏற்பட்ட பல பிறவிப் பதிவுகள். ஆகவே அதை ஒரு உள்ளமைப்பு சரீரம் காட்டுகின்றது என்று ஞானிகள் காரண சரீரமாக (causal body) எடுத்து விளக்கினார்கள். இதை விஞ்ஞானம் ஒருவர் புலன்களை மற்றவர் மனோதிடத்தால் மயக்கி அவரது அடிமனத்தை காரண சரீர நிலையில் அறிகின்றது. இதை விஞ்ஞானம் 'கிப்னொடிசம்' (Hypnotism) என்று அழைகின்றது.

மூன்றாவது வீதி எங்கள் வெளி உருவத்தை பௌதீக உடம்பை (Physical body) குறிக்கின்றது. இது புலன், கர்ம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புகளைக் கொண்டது. ஐந்து ஞானேந்திரியங்களான (sense Organs of Perception) *1. உடல் 2. வாய் 3. கண் 4. மூக்கு 5. செவி*-யையும் ஐந்து கர்மேந்திரியங்களான 1. உடல் 2. கால் 3. யோனி 4. நாக்கு 5. மூலத்தையும் தன்னகத்தே வைத்திருக்கின்றது. இந்தப் புலன்கள் பிரபஞ்சபன்மை அமைப்பை மனத்திற்கு வித்தியாசமாக காட்டி பௌதிக உடலை தற்காலிக சந்தோஷத்தில் ஆழ்த்து-கின்றது. கர்மேந்திரியங்கள் (Organs of action) இந்த புலனறிவுடன் பொருட்களை மட்டும் அறிந்து ஆராய்ந்து வசதிகளை உலகில் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இதை மக்கள் கதைக்கும் பொழுது பகுத்தறிவென்று நினைக்கிறார்கள். இதனால்தான் மக்கள் ஆன்மீகத்துடன் கூடிய ஞானஅறிவை பகுத்து உண்மையை அறியும் அறிவை, சிந்திக்காமலே வாழ்க்கையில் அல்லல் படுகின்றார்கள். கர்மேந்திரியங்கள் புலனறிவுடன் உலகில் செயற் படுகின்றன. அவை ஞானஅறிவுடன் செயற்படவேண்டும் என்பதே வாழ்வில் முக்கியம். இதை நமது நித்திய செய்கைகளில் கடைப் பிடிக்கவேண்டும்.

ஐந்து அமைப்பு வீதிகள் ஆன்மாவைச் சுற்றி அமைந்த உடல் நிலை கோசங்களாகும். வெளி உடல் உலக உணவுப் பொருட்-களினால் ஆன உடல். கூடிய நீர் கொண்டது. நீரும் உணவே. இதனை “அன்னமயகோசம்” என்றார்கள். ஆலயத்தில் இது ஐந்தாவது வெளி வீதி. அடுத்த கோசம் வாயுவினால் அமைந்தது. இதை ‘பிராணமய கோசம்’ என்பார்கள். இது உடலில் மிக முக்கிய சுற்றி அமைந்த பகுதியாகும். ஆலயத்தில் இது நான்காவது வீதியாகும். மனதினால் அமைந்த உடற்பகுதியை ‘மனோமய கோசம்’ என்றார்கள். இது ஆலயத்தில் மூன்றாவது வீதியாகும். அடுத்ததாக மனதில் புத்தியைக் கொண்ட உடல் அமைப்பு. இதனை ‘விஞ்ஞானமயகோசம்’ என்று கூறினார்கள். இது ஆலயத்தில் இரண்டாவது வீதியாகும். முதலாவது உள் வீதியாக ஆலயத்தில் அமைந்த நிலை ஆன்மாவைச் சுற்றி அமைந்த உள் உறையான ஒளி பெற்ற “ஆனந்தமயகோசம்” ஆகும். ஆன்மா ஒளி உள்ளது அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த கோசங்களினால் உள் உறைகின்றது. அதற்கு இந்த கோசங்களிலிருந்து விடுதலைவேண்டும் என்பதே மூலமூர்த்தியின் கருவறையைச் சுற்றி அமைந்த ஆலயவீதிகளின் விளக்கமாகும். ஆனந்த மயகோசம் ஆன்மாவிற்கு அண்மையில் அமைந்து ஒளியூட்டப்பட்டதால் "ஆனந்தம்" என்று பெயர் பெற்றது. உள்உடல், வெளிப்புலன் அமைப்புகள் எல்லாமே ஆன்மாவினால் ஒளிபெற்று நரம்புமண்டலத்தின் சேதன இரசாயன மின்சக்தியினால் (Electro chemical discharges) இயக்கப்படுகின்றன. ஆகவே திருமூலர் இந்த ஊனால் ஆக்கப்பட்ட உடலை "ஆலயம்" என்று கூறினார். ஆன்மாவைச் சுற்றியுள்ள கோசங்கள் ஆலய ஐந்து வீதி அமைப்பு என்று விளக்கினார்.

அடுத்ததாக "வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்" என்றார். மூலஸ்தான மூர்த்தியை கண்குளிர கண்டு வணங்க செல்வது "ஆலயவாசல்" ஆகும். இதுகோபுரமாக அமைந்து எம்மை உள்ளே அனுமதிப்பதால் இதை "கோபுரவாசல்" என்றார். எமது உடல் ஆலய அமைப்பில் கோபுரம்போல உயர்ந்து நிற்கின்றது. உடலுக்குள் புகுவதற்கு வாய் வாசலாக அமைந்து உள்ளது. ஆகவே இந்த உடல் கோபுரத்திற்கான நுழைவாசல் "வாய் மிகவும் புனிதமாக இருக்க வேண்டும். அதற்கு நாக்கு (கர்மேந்திரியம்) புனித சொற்களைக் கூற வேண்டும். முக்கியமாக வாழ்வில் எவரையும், எதையும் குறை கூறக்கூடாது. புலன் அறிவால் உண்மை விளங்காமல், சுயநலத்தால் மற்றவரைப் பற்றியே கதைத்து நேரத்தைக் கழிப்பதைத் தவிர்க்க வேண்டும். எல்லாவற்றையும் எல்லோரையும் போற்றவேண்டும். வாய் வாழ்த்துவதற்குத்தான் பழக்கப்படவேண்டும். தன்னை தூற்றுபவர்களை போற்றுபவன் தெய்வம். தன்னையே, தன் நினைவுகளையே தெய்வமாக்குகின்றான். இதை நாம் சிந்தித்து வாழ்வில் செயற்படவேண்டும். நாம் ஏன் வாழ்வில் மற்றவர்களைப் பற்றியே கதைக்கவேண்டும்? இப்படி நாம் எம்மையே கேட்டு மற்றவர்களுடன் கதைக்கும்பொழுது இவைகளைக் குறைத்து, நிறைவாகப் போற்றிக் கதைக்கலாமே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையுள்ளவர்கள் வேலையைப் போற்றி, ஆர்வத்தைக் காட்டி முன்னேறவேண்டும். வேலையைத் தூற்றவோ, அது அதிகமாகி விட்டது என்று மற்றவர்களுடன் கதைக்கவோ ஏன் போவான்? சிந்திப்போம். செயற்படுவோம். இதற்காகவே எமது "வாயை" கோபுர வாசல் போன்று புனிதமாக்கவே நாம் சிந்தித்து வாழ்வில் நித்தியம் செயற்படவேண்டும். இதில் வெற்றிகாணமுடியும். முயற்சிப்போம் இதை இன்றே நடைமுறை ஆக்குவோம். இதுவே நம்மை, நம் செயல்களை தெய்வீகமாக்கும் முறை. இதற்காகவே "ஆன்மா" ஆகிய எமக்கு உடலையும் பிரபஞ்சத்தையும் இறைவன் காட்டி அனுபவம் தந்திருக்கிறார். கூடிய மக்கள் இப்படி வாழவில்லை. அது பிழை. இது கர்மங்களுக்கு வித்தாகின்றது என்று இந்த நிமிடமே உணர்வோம். தேவையற்றதை விடுவோம். "எல்லோரும் வாழ்க, இன்பமே சூழ்க" என்று மனம் நினைக்க வாய் போற்றட்டும். மனந்தான் எல்லாவற்றிற்கும் காரணம்.

மாணிக்கவாசகர் "சிந்தை மகிழ சிவபுராணம்தன்னை முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்" என்றார். எம்முடைய மனம் சிவபுராணத்தை என்ன வேலை செய்யும் போதும் சிந்திக்கலாம். வேலையில் நுணுக்கமாக ஈடுபட்டிருப்பவருக்கு மனம், புலன் எல்லாமே அதில் ஈடுபட்டிருக்கும். மனஓட்டம் குறைவாகவே இருக்கும். சில சமயங்களில் மன ஓய்விற்காக சிந்தனைகள் மாறக்கூடும். எந்த நிலையிலும், காய்கறி வெட்டுவது போன்ற சாதாரண செயல்களிலும் படுக்கைக்குச் சென்று, நித்திரை வராத நிலையிலும் 'வாழ்க வாழ்க', 'வெல்க வெல்க', 'போற்றி போற்றி' என்று மனம் போற்றவேண்டும் வாய் கூறவேண்டும். வாயை மௌனமாக வைத்து மனம் எல்லாவற்றையும் வாழ்த்திக்கொண்டே இருக்கலாம். இப்படி செயற்படுவது எமது மனத்தில் பதிந்த கர்மங்களை நீக்கி, நாம் தற்போது செய்யும் கர்மங்களையும் தெய்வீகமாக்கும். ஆகவே ஆலயங்களில் மட்டுமல்ல எமது நித்திய வாழ்வில் இந்த தெய்வீக வாழ்த்துக்கள், அக்கருத்துக்களை விளங்கி மனத்தில் பதிய வேண்டும். வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனமாக ஓதுவதும் தெய்வீகமே. ஆகவே இப்படி சிந்தையை தெள்ளத் தெளிந்து வாழ்பவர்களுக்கு, செயற்படுபவர்களுக்கு எமது சீவன் ஆலயத்தில் இருக்கின்ற மூலமூர்த்தி போன்றது என்ற கருத்தில் திருமூலர் "தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்" என்றார். ஆகவே ஆலய கற்பக்கிரகத்தை "சங்தம் சங்தூறியம்" புனிதமாக வைத்திருப்பது போல எம்முள் அமைந்த சீவனை, அந்தச் சிவலிங்கத்தை, அதன் ஒளியினால் நம் உடலை, உள்ளத்தை, நம் கருவறையை எமது நினைவுகளால், செயல்களால், சொற்களால் புனிதமாக்கவேண்டும். இதற்காகத் தரப்பட்டதே இவ்வாழ்வு என்று இந்த நிமிடமே அதை உணர்ந்து ஒவ்வொரு செய்கையிலும் செயல்பட்டு மிளிர்வோம். இது எமக்கு முடியாத காரியமல்ல. உலக நினைவில் பொய்மையை, உண்மை என்று நம்பிச் செயற்படுவதனால் ஏற்பட்ட வினை. இறப்பதுதான் நிச்சயம் என்று தெரிந்த நாங்கள் மேற்கூறிய வழிமுறைகளில் சிந்தித்து செயல்படுவோம். இச்சிந்தனைகளும் செயல்களுமே கர்மங்களை நீக்கி, பிறவிகளை இல்லாமல் செய்யும்.

ஆலயங்களில் ஏன் பஞ்சபுராணம் படிக்கின்றோம்? ஏன் திருமுறைகளை ஓதுகின்றோம்? ஏன் நாயன்மார்கள் இவ்வளவு இலட்சக்கணக்கான தேவாரங்களை எமக்குத் தந்திருக்கின்றார்கள்? நாம் இறைவனை போற்றி வாழ்த்த, இறைவனை மனத்தில் சிந்தித்து இவற்றைப் பாட அவர்களின் மனமோ, வாயோ அந்த நேரத்தில் போற்றுமே தவிர தூற்றாது. கேட்பவர்களும் கூட எவரையும் தூற்ற மாட்டார்கள். இதேபோல் நாம் எமது செயலில் ஈடுபட வழிகாட்டுவது ஆலயமுறைகளே. அறுபத்துமூன்று நாயன்மார்களும் முக்கியமாக ஆலயங்கள் எல்லாம் சென்று தேவாரங்களால் பாடினார்கள். போற்றினார்கள். அடியார்களைச் சேவிப்பதே சிறந்த தானம் என்று செயலில் எடுத்துக் காட்டினார்கள். அடியார்கள் சிவனாக விளங்குபவர்கள். இவ்வுலகில் எதையும் எதிர்பார்க்காதவர்கள். அவர்கள் உணவின்றி உடலை நீத்தால் மக்களுக்கு உண்மையை விளக்க அந்த நிலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை உயர்த்திவிட இவ்வுலகில் ஆன்ம அறிவுள்ளவர்கள் இல்லாமல் போய்விடுவர். ஆகையால் அந்த ஞானிகளின் சேவையே உயர்ந்தசேவை என்று உலகிற்கு எடுத்துக் காட்டியவர்கள். அதை நாம் முக்கியமாக கடைப்பிடிப்போம். சிவநிலையங்களை, அதை எடுத்து விளக்கும் அமைப்புகளை நாம் வளர்க்கவேண்டும். இதுவே இறைவனைப் போற்றும் சேவை. உண்மையை செயல்படுத்தும் நிலை. இதே நிலையில்தான் ஆலயங்களில் வழங்கப்படும் அன்னதானமும் மிளிரவேண்டும். எல்லா உடல்நிலைகளிலும் "சீவனை" சிவலிங்கமாகக் கருதி இச்சேவையை இயலுமான முறையில் நாம் வாழ்வில் கைக்கொள்ள வேண்டும். ஒருவருக்கு உணவு கொடுப்பதை மனம் குறைவாக யோசிக்கும். அதை நிறைவாக நினைக்க நாம் பழக்க வேண்டும். முயற்சிப்போம்.

வேத, ஆகம முறைப்படி அமைந்த கருவறை மூர்த்தியே எல்லாவற்றிலும் அமைந்த இறை தத்துவம். மனித உடல்நிலையை அமைந்த இறைவன் விடுதலையை விரும்பும் "ஆன்மா" என்பதை நன்கு உணர்ந்தோம். உணரமுடியாத நிலையில் அந்த சீவனை மட்டும் உடல்-பெயர் நிலைகளைக் குறைத்து சிந்திக்கப் பழகுவோம். வித்தியாசத்தை, எனது, உனது, அவரது என்ற நிலைகளைக் குறைப்போம். இதற்கு முயற்சிப்போம். பின்பு அது முற்றாக எம்மில் இருந்து தானே நீங்கி விடும். இதுவே பேரன்பு. இப்படி ஆலயத்தை விளங்கி தம்மை பேரன்பு நிலைக்கு உயர்த்தியவர்களுக்கு "கள்ளப் புலன் ஐந்தும் காளா மணி விளக்காகி விடும்" என்று திருமூலர் மக்களுக்கு எடுத்துக்காட்டு கின்றார். புலன்கள் மூலமே மாற்றமுள்ள, நிலையற்ற பிரபஞ்ச தோற்றத்தை எங்கள் மனம் அசைவு நிலையில் பதிக்கின்றது. ஆன்மாவை, ஒளியூட்டும் சக்தியை, புலன்களை, மனதை இயக்கும் சிவனை எமது உள்ளப்பெருக்கை பார்க்கவோ, உணரவோ முடியாமல் இந்தப் புலன்கள் முற்றாகத் தடுக்கின்றன. ஆதலால் இவைகள் "கள்ளப் புலன்கள்" என்றார். ஆன்மாவை மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து புலன்கள் மூலம் உள்ள அமைப்பிலும் அமைந்த அத்வைத சீவனை மட்டும், பன்மை நிலைகளைத் தவிர்த்து பிரபஞ்ச நிலைகளை நடவடிக்கைகளாக நோக்கிக் காணும்போது இந்தப் புலன்களெல்லாம் மணிவிளக்காகி விடும். ஆன்மாவை உணர்ந்த மனதிற்கு புலன்கள் இறை சோதியே என்று மட்டும்தான் விளங்கும். ஆகவே ஆலயங்களில் எம் புலன்களால் காணும் ஜீவன்கள் எல்லாம், இறை சோதியே இப்பிரபஞ்சம் என்பதை உணர்த்துகின்றது. நம்பிக்கையில் மட்டும் ஆலயம் செல்லும் மக்கள் இப்படி விளங்கி ஆலயத்தை விளங்குவது சரியோ என்று ஆத்ம சிந்தனையுடன் சிந்தித்து வாழ்வில் செயற்படவேண்டும். விஞ்ஞானம் இன்று தனது பொருள் ஆராய்ச்சியினால் வழங்கி உள்ள சேவைகளை வைத்து நாம் “ஆத்ம” சிந்தனையை வளர்க்க வேண்டும். இந்த ஆலயங்கள் கூறும் ஆத்ம விளக்கங்களை நாம் செயல்படுத்த விஞ்ஞானத்தை உபயோகிக்க அணுகுண்டுகளும், நைதரசன் குண்டுகளும் ஏவாயுதங்களும் குறைந்து அற்றுப்போய் விடும். “பன்மையில் ஒருமையை” காண்போம் என்று எழுத்தாலோ வாயாலோ மட்டும் கூறி எந்த பிரயோசனமும் இல்லை. ஆலயம் கூறும் முறையில் நாம் செயற்பட்டு வாழ்வதே முக்கியம். “ஆன்மாவை” எல்லாவற்றிலும் காணுதல் பன்மையில் ஒருமையை காணும் நிலை.

ஆலயம் சென்று மக்கள் இறைவன் ஆலயத்தில்தான் இருக்கிறான், அவனென்று பிரித்து எட்டாத தூரத்தில் வைத்து வணங்குகின்றார்கள். பல தெய்வ விக்கிரகங்கள் ஆலயத்தில் இருப்பதனால் பல தெய்வங்கள் என்றே இன்றும் வழிபடுகின்றனர். சரியான விளக்கங்கள் கொடுக்கப்படவில்லையோ, மக்கள் அதை அறிய விரும்பவில்லையோ தெரியவில்லை. ஆனால் இந்துமத கருத்துகளை மக்கள் புரியவில்லை என்பது உறுதியாக விளங்குகின்றது. ஆகையால் பிற மதத்தவரும், எம்முடைய மதத்தவர் சிலரும் ஆலயங்களை, விக்கிரகங்களை தமது மூட அறியாமையினால், மூட நம்பிக்கை என்று இகழ்வதையும் காண,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கக்கூடியதாக இன்று இருக்கின்றது. இந்துமத புனித விளக்கங்களை இவர்கள் விளங்கவேண்டும். இகழ்வதிலிருந்து புகழ்வதற்கு வருவதற்கு இவ்விளக்கங்கள் தேவை. விளக்கங்கள் மூலம் இவர்கள் அறிவதற்கு விரும்பவில்லை என்றால் அவர்களின் இந்த மூடநிலை பல பிறவிகளில் அனுபவித்தே திருந்தவேண்டும். அந்த நிலையே பிறவி அனுபவமாகின்றது. "உண்மை" விளங்கும்வரை பிறவிகள் தொடரும்.

ஆலயங்களில் அமைந்த ஒவ்வொரு விக்கிரகங்களும் ஒவ்வொரு உண்மைப் பொருளின் தத்துவங்களே. முழுமையை, இப்பிரபஞ்சத்தை ஒருவராலும் புலன் அறிவில் உணர்த்த முடியாது. அந்த பரபிரம்ம சிவத்திற்கும் பெயரும் இல்லை. உருவமும் இல்லை. நாம் இப்பிரபஞ்சத்தைப் பார்க்கும்பொழுது எம்மை விட்டுத்தான் மற்றவைகளை நோக்குகின்றோம். ஆகவே இப்பிரபஞ்சத்தில் ஒரு சிறு பகுதியை விட்டே பார்க்கின்றோம். இப்பிரபஞ்சத்தில் நாம் ஒரு அங்கமாக இருந்துகொண்டு எப்படி முழுமையை பார்ப்பது? சற்று சிந்தியுங்கள். விஞ்ஞானியும் தன்னை ஒரு பார்வையாளராகப் பிரித்து வைத்து பிரபஞ்சநிலையை ஆராய்கின்றார். அவருக்கும் இந்த பிரபஞ்ச ஆராய்ச்சி பொருட்களுக்கும் இடையே எப்பொழுதும் ஒரு கண்ணாடி (lens) நுணுக்குக்காட்டி (Microscope) ஆகவோ, தொலைகாட்டி (Telescope) கண்ணாடி ஆகவோ இருக்கின்றது. இப்படி தன்னைப் பிரித்து பார்க்கும் விஞ்ஞானி எப்படி முழுமையை அறிவார்? நீங்களே சிந்தித்து விளங்குங்கள். இதை என்றோ உணர்ந்த பெரிய விஞ்ஞானி, விஞ்ஞானம் தோன்றாத காலத்து மெய்ஞானி மாணிக்கப் பெருந்தகை பின்வருமாறு இறைவனை விளக்குகின்றார். "ஒன்றும் நீ அல்லை, அன்றி ஒன்றில்லை" என்கின்றார். இப்பிரபஞ்சத்தில் நீ இல்லாமல் எதுவும் தோற்றமளிப்பதாகத் தெரியவில்லை. அதே நேரத்தில் இங்கு ஒரு பொருளை குறித்துக்காட்டி இதுதான் இறைவன் என்று கூறவும் முடியாது என்று காட்டியுள்ளார். ஏனெனில் இப்பிரபஞ்சப் பொருட்கள் எல்லாம் முழுமையின் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி என்பதாலும் இப்பிரபஞ்சசக்தியே எல்லாவற்றிக்கும் அத்திவாரம் என்பதாலும் இப்படி இறைவனைக் கூறினார். மேலும் "யார் உன்னை அறியகிற்பாரே" என்றார். இந்த பிரபஞ்ச முழுமையில் வெளிக்கும், நேரத்திற்குள்ளும் அமைந்து ஒரு அங்கமாக இருந்து கொண்டு எப்படி முழுமையை அறியமுடியும். அந்த ஞானி இதை உணர்ந்து எந்த விஞ்ஞானியாலும், எவராலும் இறைவனை, முழுமையை, எல்லையற்றவனை அறியவோ, விளக்கவோ முடியாது என்று கூறிவிட்டார். இந்த நிலையில் இந்துமதம் பல விக்கிரகங்களை வைத்து முழுமையின் பகுதிகளை மக்களுக்கு ஆலய மூலம் விளக்குகின்றன. முழுமையை இவ்வுலகில் விளக்கமுடியாது. "நிர்விகல்வசமாதி" நிலையில் மட்டுமே அனுபவிக்கமுடியும். இந்த நிலையையும் ஆலயங்கள் விளக்கு-கின்றன என்பதை பின்பு நோக்குவோம். ஆலயங்களில் தத்துவ உண்மைப்பொருள் விளக்கங்கள் ஒவ்வொரு நாளும் கொடுபட வேண்டும்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் பெருந்தகை தமது சமாதி படிமுறைகளை சீடருக்கு விளக்கும்பொழுது இதை எடுத்துக் காட்டி உள்ளார். அவரது ஆத்ம, குண்டலனி சக்தி மூலாதாரத்தில் இருந்து மேலெழுந்து சுவாதிட்டான "நாரி" நிலைக்கு வந்தது, பின் "மணிபூரணமாகிய" தொப்புள் வரை வந்து அங்கிருந்து "அநாகதம்" என்ற நெஞ்சுநிலைக்கு எழுந்து பின் தொண்டை வரை, "விசுக்தி" க்கு வந்தவுடன் எதுவும் பேசமுடியாத, விளக்கமுடியாத நிலையில் சமாதி அடைந்தார். இதன்மேலான இடை, பிக்கலை, வந்து இணையும் புருவ மத்தி, சூக்குநாடியுடன் சேர்ந்து சக்திநிலையான "விசுக்தி" இடம் ஆகின்றது. அதன்மேல் இந்த ஆறு கேந்திரங்களையும் தாண்டி உச்சியில், சகஸ்ரதனத்தில் ஒன்றாக சிவனுடன் இணைகின்றது.

இந்தப் புருவமத்தி "ஆஞ்ஞை" இடத்தை ஆலய முறையின்மூலம் குங்குமம், சந்தனம், விபூதி, தெற்பை எரித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுத்த பொட்டு வைத்து இந்துமதம் அதன் முக்கியத்தை எடுத்துக் காட்டுகின்றது. ஆகவே இந்த ஞானி தனது சமாதி நிலை தொண்டை நிலைக்கு மேல் விளக்கமுடியாத நிலை என்று இறைவன் நிலையை எடுத்துக்காட்டுகிறார். இந்த நிலைக்கு மக்கள் வந்து மேலான "ஆஞ்ஞை" நெற்றி புருவநிலை, சகஸ்ரதளமாகிய சிவன் அமைந்த, சிரசுநிலைக்குத் தங்கள் குண்டலனி சக்தியை மேலெழுப்பி அதை அனுபவிக்கலாமே தவிர அதை விளக்க முடியாது என்பது தெளிவாகின்றது. புருவமத்தியில் பொட்டிட்ட பகுதியில் தான் தியானிக்கவேண்டும் என்பது ஆலய விளக்கம் ஆகும். பரமஹம்சர் எதையும் நோக்காமல் காளிமாதாவையே எல்லாமாகப் பார்த்து அந்த சலிகல்ப சமாதியில் நிலைத்து நின்றவர். அவருடைய குரு கோதாபுரி, அவருடைய நெற்றி புருவத்தின் பக்கத்தில் கிடந்த கண்ணாடி துண்டால் குத்தி இதில் தியானி என்றார். அவர் புருவமத்தியில் சிந்தித்து ஐந்து நிமிடத்தில் "நிர்விகல்ப" சமாதியை அடைந்தார். அவருடைய குருவேதான் நாற்பது வருடங்களின் பின் பெற்ற நிலையை இவர் ஐந்து நிமிடத்தில் பெற்றார் என்று இறைவனைப் போற்றினார்.

மேலும் நாம், தாயின் கற்பத்தில் இருக்கும்பொழுது எமது சிரசு மிக மெல்லிய சவ்வு அமைந்த முக்கோணமாக இருக்கின்றது. இது துவாரம் போன்ற அமைப்பு. இங்குதான் அந்த பரபிரமம் தனது தளத்தை அமைத்து அது சகஸ்ரதளம் என்று பெயர் பெறுகின்றது. இந்த இடம் நாம் உலகிற்கு வந்ததும் இறுகுகின்றது. ஆகையினால் இவ்விடத்தில் நாம் இறுக்கி அமத்தக்கூடாது. மிக முக்கியமான குழந்தையின் சிரசு மிக மென்மையானது. ஆகையால் இவ்விடத்தில் கைகூப்பி கும்பிட மக்களைக் கூறுகின்றது. தங்கள் சிரசுமேல் கைவைத்து கும்பிடும் மக்கள் இதுவே சிவன், அவரது தளம் இந்தத் தொடக்க நிலைக்கு ஆன்மாவாகிய எமது குண்டலனி சக்தி எழுந்துவரவேண்டும் என நினைக்கவேண்டும். ஆலயங்கள் எவ்வளவு நுணுக்கங்களை எடுத்துக் கூறுகின்றன என்பதை நாம் உணரவில்லை. இது விளங்காதது மிகவும் வருந்தத்தக்க நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கி செயற்படுவோம். இந்த தளத்தில் அமைந்த பரப்பிரம்ம சிவம் தனது சக்திநிலையில் புருவமத்திக்கு -"ஆஞ்ஞை"க்கு இறங்குகின்றது. பௌதிக சதை நிலையில் மூளையின் முன் பகுதி இது. இங்குதான் "நினைத்தல்", "மறத்தல்" போன்ற விஞ்ஞானம் இப்படி நிலைகள் எப்படி ஏற்படுகின்றன என்று விளக்கமுடியாத நுண்ணிய நிலைகள் அமைந்திருக்கின்றன. இந்த புருவ மத்தியில்தான் சக்தி தனது அமைப்புக்களைத் தொடங்குகின்றது. "நிர்குண பிரமம்"; அமைப்புகள் ஆகத சக்தி, அமைப்புகளை ஏற்படுத்தும். "சகுனபிரம" சக்திமட்டம் ஆகின்றது. இங்கு பன்மையைக் கிரகிக்கும் மனம் ஏற்படுகின்றது. இதன்கீழ் தொண்டை மட்டத்திற்கு வருகின்றது. இங்குதான் மூளை, முன்னாண் (Spinal cord) ஆகின்றது. இந்த இடந்தான் மூளையையும் முன்னாணையும் தொடுக்கும் நீள்வளையமைய விழையமாகும் (Medula oblongeta). இந்த இருதயத்துடிப்பு, தேவையற்றவைகளை வெளியேற்றும் வாந்திகள் போன்ற தன்னியக்க சேவைகளை செய்ய உதவுகின்றது. இங்கிருந்து, இருதய நிலையிலிருந்த குண்டலினி சக்தி முன்னாண் அடி அத்திவாரம் ஆகிய மூலாதாரத்திற்கு, அநாகதம், மணிபூரகம், சுவாதிட்டானம் நிலைகளில் கீழ் இறங்குகின்றது. இப்படி இறங்கும்பொழுது, ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் மற்றும் உடல் அமைப்பு-களையும் ஏற்படுத்துகின்றது. இந்த அமைப்புகள் எல்லாம் முன்னாணைத் தாங்குகின்றன. இந்த சக்தி மூலாதாரத்தில் இருந்து கீழிறங்க முடியாத நிலையில் தடைப்பட்டு நிற்கின்றது. முன்னாண் 33 முள் எலும்புகளால் பாதுகாக்கப்படுகின்றது.

இப்பொழுது இது மூன்றரை சுற்றுவட்டத்தில் பாம்பு போல் சுருண்டு, குண்டலனி சக்தியாக, மன அமைப்பில் அடங்கி ஆன்ம சக்தியாக விளங்குகின்றது. இந்த குண்டலனி சக்தி மேலெழுந்து தனது தொடக்கநிலையை தான் அடைய முடியும். அதுதான் ஆன்ம விடுதலை. ஆகவே இந்த நிலையை உணராமல் ஆன்மாவாகிய நாம் மனம் ஏற்படுத்திய புலனறிவில் ஏதேதோ இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் திருப்திக்காக மட்டும் செய்கின்றோம். இப்படிப்பட்ட நிலையில் எமக்கு எப்படி உலகில் திருப்தி ஏற்படும், எப்படி நிம்மதி ஏற்படும். நிம்மதி எங்கே? நன்கு பகுத்து மக்களே உண்மையை அறியுங்கள் செயற்படுங்கள்.

•

இப்படியான ஆன்ம விடுதலையை நாடாத நாம் இறுதியில் இறக்கிறோம். இந்த இறக்கும்நிலையில் ஆன்ம நிலையை உணர்ந்த சீலர்களின் ஆன்மா உச்சியால் சிவமயமாக மற்ற உடல்நிலை விழுகின்றது, இறக்கின்றது. மற்றும் ஆன்மாக்கள் மனதில் கட்டுபட்டு ஒன்பது வாசல்களால் நீங்க உடல்கள் விழுத்துகின்றன. இவை சிரசால் இறைநிலை சகஸ்ர தளத்தை அடையாததனால் மீண்டும் மனநிலை இறக்காததால், அதன் பதிவுக்கு ஏற்ப உடல்களை அமைக்கின்றன. இதை உணர்பவர்கள் பிறவித் துன்பத்திலிருந்து நீங்குவர். ஆகவே ஆலயத்தை மேலும் விளக்குவோம். சிவம் அமைந்த சிரசே கற்பக்கிரகமாகின்றது. அந்த மூலமூர்த்தியே சிரசில், சகஸ்ரதள சிவமாகும். குடை வடிவில் மூலஸ்தானம் மண்டையோட்டைக் காட்டுகின்றது, பிரபஞ்ச குடை அமைப்பு வெளியை உணர்த்துகின்றது இதற்கு முன் அமைந்த சிறு மண்டபம் எமது நீள்வளையமையவிழையப் பகுதியை காட்டுகின்றது. அதற்கு முன் அமைந்த முன் மண்டபம் எமது நெஞ்சுப்பகுதியை காட்டுகின்றது. விநாயகர், முதல் விக்கிரகங்கள் பல வைத்து வணங்கப்படுகின்றன. இது முன்பு விளக்கிய உள்ளம் அமைந்த இடம். மேல்நிலை உணர்வு பிறக்கும் இடம் என்பதை விக்கிரகங்கள் வைத்து பூசிப்பதன் மூலம் ஆலயம் எமக்கு சுட்டிக்காட்டுகின்றது. ஆகவே மக்கள் ஒவ்வொரு-வருடைய உள்ளத்தையும் வாழ்வில் பூசியுங்கள். அங்கு எழும் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுங்கள். இந்த உள்ள உணர்வு ஒவ்வொன்றைக் கூற, நாம் மனம்போன போக்கில் செயல்களைச் செய்கின்றோம். உள்ளுணர்வு கூறுவதை நாம் சிந்திப்பதும் இல்லை, செயற்படுத்துவதும் இல்லை. எவ்வளவு தவறு? இந்த நிலையில் நாம் எப்படி மனநிம்மதி பெறமுடியும்? வீடும், நாடும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமும் எப்படி அமைதி பெறும்? நன்கு சிந்தியுங்கள். ஆன்ம ஈடேற்றமே உண்மை, நிரந்தர அமைதி. இதைத்தான் இந்த ஆலய இடமும் அதன் பூசையும் உணர்த்துகின்றன. இப்பொழுது நுழைவாயிலை ஆலயம் அமைந்த நிலையில் பார்ப்போம். "ஆலயம் இல்லா ஊர் பாழ்" என்றார்கள் சான்றோர்கள். ஆலய நுழைவாயில் தோற்றம் இராஜகோபுரமாக அழகிய சிற்பங்களைக் கொண்ட மிக உயர்ந்ததாக ஊர் முழுவதும் பார்க்கக்கூடியதாக அமைந்து "எல்லோரையும் வாருங்கள்" என்று அழைக்கின்றது. வேதக் கோயில்கள், புத்தவிகாரைகள், பள்ளிவாசல், மசூதிகள் எல்லாமே உயர்ந்த கட்டிடங்கள். இராஜகோபுரத்தை தூரத்தில் கண்ட உடனேயே கையைத் தூக்கி சிரசில் வைத்துக் கும்பிடுகிறார்கள். நேரம் இல்லாத மனிதன் தன் உழைப்பிற்குச் செல்லும் போது சைக்கிளில், வாகனங்களில் செல்லும்போது ஒரு கையை நெஞ்சில் வைத்து கும்பிட்டு அப்படியே இறங்காமல் சென்று கொண்டிருக்கின்றான். மற்றவர்கள் இறங்கிக் கும்பிட்டுச் செல்கின்றார்கள். சிலர் உள்ளே சென்று வணங்கி செல்கின்றார்கள். ஆகவே இராஜகோபுரங்கள் மக்களுக்கு எந்த நிலையிலும் இறை உணர்வை ஏற்படுத்துகின்றன. சிரசைத் தொடுபவர் சிவ சகஸ்ரதளத்தை இறைவனாக நினைக்கவேண்டும் நெஞ்சை ஒரு கையால் தொடுபவர்கள் இறைவனின் புனித உணர்வு நிலையே உள்ளம் அதை தொடுகிறேன் என்று விளங்கவேண்டும். ஆனால் இதை அறியாமலே ஆலயத்தைப் பார்த்து வணங்கியதாகச் செல்கின்றார்கள். ஆலயம் இப்படி விளக்கிய நிலையை சிந்தித்தாகக்கூட தோற்றவில்லை. கும்பிடும் நிலையில் எமது கைப் பெருவிரல்கள் எதைச் சுட்டிக்காட்டுகின்றன என்று நாம் சிந்திக்க வேண்டும். இப்படி எல்லோரையும் கவர்ந்து நிற்கும் இராஜ கோபுரத்தின் உட்செல்வோம்.

அங்கு உள்வீதியில் கொடிக்கம்பம் தோற்றுகிறது. திருவிழாக் காலங்களில் முதல்நாளில் கொடி ஏற்றப்படுகின்றது. இந்தக் கொடியில் நந்தியின் படமும் அத்திரதேவரின் படமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன. இந்த கொடிச்சீலை கீழ் கம்பம்வரை நீள்கின்றது. இங்கு நந்தி - அசைவு நிலை இறைவன். அத்திரதேவர் திருவருட் சக்தி. சைவசித்தாந்தம் பதி, பசு. பாசம் என்ற நிலையில் இப்பிரபஞ்சத்தில் முப்பொருள் நிலையில் உண்மையை விளக்குகின்றது. இங்கு "பதி" இறைவனாகும். கொடிக்கம்பம் "பதி" என்ற நிலையில் அமைந்திருக்கின்றது. கொடி "ஆன்மா" ஆகிய அசைவுநிலையில் திருவருட்சக்தி, (இறைவன்) நிற்கும் நிலையை பசுவாக காட்டுகின்றது. இந்த ஆன்மா பிரபஞ்ச அமைப்பில் பாசத்தால் கட்டுப்பட்டு உழல்கின்றது என்பதை கயிறு - திரோதான சக்தி காட்டுகின்றது. பாசத்தில் கட்டுப்பட்ட நிலை திரோதான சக்தி நிலை. கொடியேற்ற காலத்தில் கொடிமரத்தை சுற்றி தெற்பை நெருக்கி கட்டப்படுகின்றது. தெற்பை இந்த உலகப்பொருட்கள். இதில் வைத்த ஆசை குறிப்பிடப்பட்ட மஞ்சள் கயிற்றினால் பாசமாக உணர்த்தப்படுகின்றது.

இந்த தெற்பைகளை கொடிமரத்தை சுத்திக் கட்டும்பொழுது இந்த உலக பாசத்தை தளைகளை "பதி"யாகிய இறைவனிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பது அர்த்தம். உலக பந்தங்களை, இச்சைகளை தெற்பை கொடிமரத்தைச் சுற்றிக்கட்டி, காட்டிய வழியில் சமர்ப்பித்ததும் திருவருள் சக்தி மேல் எழ திரோதான சக்தி கீழ் இறங்க வேண்டும். இதற்காக மஞ்சள் கயிறு கீழ் இழுக்கப் படுகின்றது. கொடி மேல் எழுகின்றது. கயிறு கீழ் இழுப்பதற்காக கொடிக்கும் கொடிக் கம்பத்திற்கும் இடையில் இரண்டையும் பிரித்து தூங்குகின்றது. பதியையும், பசுவையும் இவ்வுலகில் பிரித்து வைத்திருப்பது பாசமே என்று நன்கு விளக்குகின்றது. இந்தப் புலனறிவு மனதினால் ஏற்படும் பாசம் எம்மை உயர் நிலைக்கு, ஆன்மாவைப் பகுத்து, பொய்மையை விடுத்து உண்மையை விளங்க விடாமல் தடுக்கின்றது. ஆகவே இந்தப் பாசம். கீழிறக்கப்படவேண்டும். திரோதானசக்தி கீழ் இறங்க திருவருட் சக்தி மேல் எழும். கயிறை கீழ்நோக்கி இழுப்பதை இது காட்டுகின்றது. மேல் எழுந்த கொடி இந்த உயர்நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தப்பட்டு கொடி மரத்தைச் சுற்றிச் சுற்றி அடித்தளம் வரைக்கும் கயிற்றினால் கட்டப்படுகின்றது. பசு மேல் எழுந்த நிலையில் பதி ஆகின்றது. கட்டுண்ட ஆன்மா கட்டை நீக்கியதும் தனது தொடக்கநிலையை அடைகின்றது. ஆன்மா விடுதலை பெற்று ஈடேற்றம் அடைந்து அந்த பதியே ஆகின்றது. கயிறும் கொடிவாலும் சுற்றிக்கட்டப்பட்ட நிலையில் கொடியாகிய பசு (ஆன்மா), ஈடேற்றம் கண்டதனால் அது தனது தொடக்கநிலை அடைந்து, பதியாகிய இறைவனே ஆகிவிட்டது என்று அர்த்தம். கயிறு பாசமாகிய திரோதானசக்தியானதால் ஆன்மா இறைவனாக திரோதான சக்தி தனது தொடக்க திருவருள் சக்தியாகின்றது. பதியுடன் சேர்கின்றது என்பது அர்த்தம். கொடிமரமே 33 முள்ளந்தண்டுக்குள் அமைந்த முன்நாண்.

ஆகவே ஒவ்வொரு நிலையும் கொடியேற்றத் திருவிழாவில் மூலாதாரத்தில் இறங்கியுள்ள ஆன்மா முன்நாண் மூலம் மேலும் கீழ் இறங்கமுடியாமல் ஆறு நிலைகளில் முன்பு விளக்கிய கேந்திரங்களில் மேல் எழுந்து சகஸ்ரதளமாகிய சிரசை அடைய வேண்டும் என்பதை மூலாதாரத்தில் குண்டலனி சக்தியைக் கொண்ட மக்களுக்கு எடுத்துக் காட்டுகின்றது. கொடி இறக்கத்தை விளங்கி எப்படி உயர்நிலை சக்தி தளத்திற்கு குண்டலனி சக்தியை மேல் எழ செய்யமுடியும் என்ற ஆலய விளக்கத்தை அறிவோம். திருவிழாக்கள் முடிந்து ஏற்றிய கொடி ஆலயத்தில் இறக்கப் படுகின்றது. தெற்பைகள், கயிறு, கொடியின் வால் எல்லாமே கொடிமரத்தில் இருந்து பூசை நிகழ்ச்சியுடன் கழட்டப் படுகின்றன. இது திருவருள் சக்தி கீழ் இறங்கி திரோதான சக்தி ஆகும் நிலை. மனம் நெற்றி புருவத்தில் பாசத்தை ஏற்படுத்தி புலனறிவில் ஆன்மாவை மூலாதாரத்திற்கு குண்டலனி சக்தியாக அமர்த்துகிறது. இது பதியில் நின்று நீங்கிய நிலை. கொடி, கம்பத்தை விட்டுப் பிரிந்து பாசத்துடன் தூங்கும் நிலை. இந்த நிலையில் கயிறு, திரோதானசக்தி பாசம் மேல் எழுந்து பதியில் இருந்து கழற்றப்படுகின்றது. கொடிமரத்தில் இருந்து கொடியும் கயிறும் பிறிதாக்கி திருவிழா நிகழ்ச்சிக்காக சேமித்து வைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது. கொடி இறக்கமும் ஏற்றமும் பஞ்சகிருத்திய நிலையில் படைத்தல் தொழிலைக் குறிக்கின்றது. இறக்கத்தின்போது ஆன்மாவாக பல தோற்றங்களை காட்டும் நிலை, ஏற்றத்தைக் காட்டும்போது எப்படி படைத்தவை மேல் எழ முடியும் என்பதையும் காட்டுகின்றது. முதலாவது திருவிழாவாக ஏற்றத்தைக் காட்டுவது மக்களாகிய நாம் கீழ்நிலையில் இருப்பதால் நாம் ஈடேற்றம் பெறவேண்டும் என்பதை முதலில் காட்டுகின்றது.

மேலும் ஆன்ம ஈடேற்றம் பெறவேண்டும் என்று கொடி மரத்தைப் பார்த்து விளங்கிய மக்கள் மேலும் ஓரடி முன்வைத்து பலிபீடத்தைக் காண்கிறார்கள். இந்தப் பீடம் தட்டையாக அமைந்த பீடம். இதில் எதையும் வைத்து வெட்டி நீக்கலாம், இந்த நிலையை ஆலயம், பூசையின் பொழுது புக்கை உருண்டையாக வைத்து பூசித்து பூசை முடிந்ததும் அதை தள்ளி இல்லாமல் செய்து தீர்த்தத்தால் கழுவிக் காட்டுகின்றது. எமது உலக ஆசைகள் எல்லாவற்றையும் பலிபீடத்தில் சமர்ப்பிக்கவேண்டும், அதை முற்றாக வெட்டித் தள்ளி, ஆசைகளைப் பலி செய்து ஆன்ம ஈடேற்றம் பெற முன்னேறவேண்டும் என்பதை இது குறிக்கின்றது. புக்கை உருண்டை அரிசி, இவ்வுலக ஆசை பொருட்களைக் குறிக்கின்றது. அதை பலிபீடத்தில் வைப்பது உலக இச்சைகளை எமது மனதில் இருந்து இல்லாமல் செய்யவேண்டும். பொருள், சுயநலம் முற்றாக பலி செய்யப்படவேண்டும் என்பதை இது நமக்கு நன்கு விளக்குகின்றது. இப்படியாக மனதில் (ஆஞ்ஞை) தளத்தில் இருந்து ஏற்பட்ட உடல்நிலை, சுய இச்சைகள், உடலால் ஏற்பட்ட "நான்" என்ற அகங்காரம் பெயர்களால் எல்லாவற்றையும் வேறாக்கி நோக்குதல், பன்மையில் ஒருமையை காணாமல் இருக்கும் குணநிலைகள் ஆன்ம சக்தியை சிந்திக்காமல் வாழுதல் சகலதையும் பலிசெய்து, மனதும், உள்ளமும் புனிதமான நிலையில் மேலும் மூலஸ்தானம் நோக்கி ஓரடி எடுத்து முன்னேறுகிறோம். இந்த நிலையில் இறை சிந்தனை மட்டுமே மனதில் இருக்க வேண்டும். வேறு சிந்தனைகள் இருக்கக்கூடாது. பலிபீட பூசையை ஆலயத்தில் கண்குளிரக் காணுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக "நந்தி" எம்பெருமானைத் தரிசிக்கின்றோம். முருகன் ஆலயங்களில் மயிலும், விநாயகர் ஆலயங்களில் எலியும் அமைந்திருக்கின்றன. எல்லாம் வாகனங்கள். வாகனங்கள் அசைவைக் குறிக்கின்றன. எல்லாமே இவ்வுலகில் அசைகின்றன. இது நாம் வாழ்வில் அறிந்த, விஞ்ஞானம் விளக்கிய உண்மை ஏன் நாமே மூப்படைகிறோம். இது அசைவினால் ஏற்படும் மாற்றம். இந்த நிலை "காரண" நிலையாகும். "நந்தி" இறை அசைவு நிலை "காரணம்" கேட்டு தகுதி பெற்றவரா? என்று தடுத்து நிறுத்தி எம்மைச் சோதிக்கின்றார். நாம் அசைவு நிலையை தாண்டுவது மிகவும் கடினம். நந்தி கையில் பிரம்பு வைத்திருக்கிறார் என்று கூறுவதை புராணங்கள், கதைகள் மூலம் நாங்கள் அறிந்திருக்கிறோம். கையில் பிரம்பு வைத்திருப்பது தடுத்து சோதிக்கும் தன்மை. இது எங்களில் காரண சரீரமாகவும், பிரபஞ்ச நிலையில் காரண பகுதியாகவும் அமைந்து அசைவு நிலையை இறை நிலையே ஏற்படுத்தி மிளிர்கின்றது. ஆகவே நாம் காரண சரீரத்தையோ, காரண பகுதியையோ, எல்லா ஆசைகளை விட்டாலும் உடல் நிலையில் தாண்டுவது மிகக் கடினம் என்பதை ஆலயம் இதனால் நன்கு எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இந்த நிலையைத் தாண்டி நாம் மூல மூர்த்தியை வணங்க முன்செல்கிறோம். அங்கு திரை தொங்குகின்றது. மூலமூர்த்தியை தரிசிக்க முடியவில்லை. ஆம்! எல்லா ஆசையையும் விடுத்து காரண அசைவு நிலையைத் தாண்டி பக்தியுடன் இறைவனை கண்குளிரக்காணவேண்டும் என்றாலும் அது அரிது என்பதை திரை காட்டுகின்றது. இவ்வுடலில் இருந்து குண்டலனி சக்தி மேலெழுந்து இருதயம் வரை வந்தாலும், முன்னாண் மூலம் உடலை சமாதி நிலையாக்காமல், அந்தப் பற்றே இல்லாமல் சகஸ்ர தளம் வரை உயர்த்துவது மிகக்கடினம் என்பதை திரைச்சீலை மறைப்பு மூலம் ஆலயம் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. நாம் முக்கூட்டுநிலையில் வாழ்கின்றோம். படைத்தல், காத்தல், அழித்தல்; திண்மம், திரவம், வாயு; விழிப்பு நிலை, கனவு நிலை, ஆழ்ந்த நித்திரை நிலை இப்படி எத்தனையோ முக்கூட்டுநிலைகள். இப்பிரபஞ்ச அமைப்பு இதை நாம் நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கவேண்டும். விழிப்புநிலையிலேயே நாம் இவ்வுலகில் வாழ்கிறோம். இந்த நிலையில் இருப்பதை, தோன்றுவதை உண்மை என நம்பி இன்னல்களுக்கு இவ்வுலகில் ஆளாகின்றோம். கனவை, கனவென்று விட்டுவிடுகின்றோம். நல்ல கனவு, கெட்ட கனவு என்று கதைக்கின்றோம். ஏதோ நல்லது நடக்கப்போகிறது என்று சிலர் கனவு கண்டவரை சந்தோஷப்படுத்துவார்கள். ஏதோ கெட்டது நடக்கப் போகிறது என்று சிலர் பயமுறுத்துவார்கள். அவ்வளவுதான். ஏன் கனவு ஏற்படுகின்றது? என்று எவரும் சிந்திப்பதில்லை.

அப்படி சிந்திப்பவர்கள் இது அடிமனதில் பதிந்த நிலை என உணர்வார்கள். எமது கர்ம செயல்களெல்லாம் பல பிறவிகளில் அலை நிலையில் பதிவாகி மூன்று (முக்கூட்டு) நிலைகளில் உள்ளன. ஒன்று: பதிவுகள் வெளிவராத நிலை (Unconscious State). அடுத்ததாக எமது அடிமனம் (Subconscious State) இதுவே காரண சரீரமாக, கனவுகளாக அடிமனப்பதிவைக் காட்டுகின்றது. அடுத்தநிலை விழிப்புநிலை (Conscious State). இந்த நிலையில் தான் நாம் கூடுதலாக மாறுகின்ற பன்மை நிலைகளை உண்மை என்று நம்புகிறோம். ஆகவே இந்த மூன்று நிலைகளிலும் நாம் இறைவனைக் காணமுடியாது என்று ஆலயசீலை மறைக்கின்றது. ஆனால் இந்த நிலை பூசையின்பொழுது நீக்கப் படுகின்றது. மூலமூர்த்தியை நாம் தரிசிக்கிறோம். திரைநீக்கம், மேற்கூறிய நித்திய மூன்று நிலைக்கு மேலான நாலாவது நிலையான "தூரிய" நிலைக்கு எம்மை இட்டுச் செல்கின்றது.

இந்த மூன்று நிலையில் வாழும் நாம், முதல் விழிப்பு நிலையை மட்டும் நம்பி, இரண்டாவது கனவுநிலையை கனவாகக் கழித்து, மூன்றாவது நிலையான "ஆழ்ந்த நித்திரையை" சிந்திக்காமலே விட்டுவிடுகின்றோம். எந்த சமயமும் இதை உணர்த்தியதாகவும் எடுத்துக் கூறுவதாகவும் தெரியவில்லை. விஞ்ஞான உலகம் இதை பொருளற்ற நிலை (Non Matter) என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுவிட்டது. ஆனால் இந்துமதம் இதை அழகாக எடுத்துக் கூறுகின்றது. "மாண்டுக்யா" உபநிடதம் இதன் விளக்கமாகின்றது. ஒருவர் நன்கு உறங்குகிறார், காலையில் எழுந்து "நான்" நன்கு உறங்கினேன் என்கிறார். இங்கு "நான்" என்பது யார்? ஆழ்ந்த நித்திரையில் எதுவுமே தெரியாது, கேட்காது. கட்டிலிலா, பாயிலா படுத்திருக்கிறோம்? தெரியாது. வேட்டியா, காற்சட்டையா போட்டிருக்கிறோம்? தெரியாது. ஆகவே இங்கு புலனும், அதனால் பெறும் அறிவும் இல்லை. இங்கு கனவும் இல்லை. ஆகவே மனமும் இல்லை. ஆழ்ந்த நித்திரையில் மூச்சு விடுகிறோம். இந்த நிலையில் "பிராண" சக்தி மட்டும் இருக்கின்றது. இதை உயிர் போகாததால் "பிரக்ஞை" நிலை என்று ஞானிகள் விளக்குறார்கள். இதுவே எமது சூக்கும சரீரமாகும் (Subtle Body). எதுவுமற்ற நிலையில் "நான்" என்று அந்த தூக்கத்தை அனுபவித்தவர்தான் இந்த "பிரக்ஞை", "ஆன்மா". இந்த "ஆன்மா" மட்டும் உடலில் கட்டுப்பட்டு இருப்பதை நாம் தினமும் பார்க்கிறோம். ஆனால் "ஆன்மாவை" நாம் எந்த நிலையிலும் விளங்கியும் விளங்காமலும் அதில் அக்கறை செலுத்தாமலும் வாழ்கிறோம். எதனால் "எம் உடல் இயங்குகிறது" அந்த உயிருக்கு உயிரானது எது? நாம் சிந்திப்பதில்லை.

திரைநீக்கம் நாலாவது நிலையாகிய துாரிய நிலையில்தான் ஏற்படுகிறது என்பது ஆலயவிளக்கம். இந்த நிலை முன்னாண் மூலம் தொண்டை வரை வந்து பின்பு நெற்றி புருவத்திற்கு தியானத்தால் எழுந்து சகஸ்ரதளத்தில், சிரசில் ஒன்றானதும் அத்வைத சிவனாகிறது. இங்கு உடல்நிலை இல்லை, பிறவி நிலைகளும் இல்லை. திரை மறைப்பை மாணிக்கவாசகர் எப்படி விளக்குகின்றார் என்பதைக் கவனிப்போம். " வேண்டத்தக்கது அறிவோய் நீ" எல்லாம் அறிந்ததால் எங்கள் பரிபக்குவம் அடையாத அறியாமை நிலைக்கு என்ன தேவை என்று அறிந்தவர் இறைவன். ஓம் (Omnicient) என்னும் "பிரணவப்பொருள்." "வேண்ட முழுதும் தருவோய் நீ" (Omnipotent). எல்லாம் வல்லவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமையில் நாம், எம்மால் முடியாத நிலையில் இறைவனை புலனறிவில் எல்லா ஆசைகளையும் வைத்து கேட்கிறோம். ஆன்ம சிந்தையுள்ளவர்கள் இறைநிலையடைய வேண்டும், இனி பிறவி வேண்டாம் என்று தொழுது கேட்கிறார்கள். அவரவர் நிலைக்கு ஏற்ப எல்லாம் பல பிறவிகள் மூலம் அவர்களுக்கு வழங்கும் வல்லவன் இறைவன். ஆசைகளை அனுபவிக்க உடலை அமைத்து இறைவன் எம்மை பல பிறவிகளில், பலநிலைகளில் அனுபவிக்க வைக்கிறார். அடுத்ததாக "வேண்டும் அயன்மார்க்கும் அரியோய் நீ" என்றார். இறைவனை மட்டும் இறைஞ்சி நிற்கும் அடியார்-களுக்கும் புலனறிவால் காணமுடியாதவனாக இருக்கிறாயே என்று இறைவன் புலனறிவிற்கு எட்டாதவன் என்று எடுத்துக் கூறுகின்றார். இதுதான் ஆலய திரை மறைப்பு. புலன்களுக்கு அப்பாற்பட்டவன் என்று எடுத்துக்காட்டுகின்றது. மாணிக்க வாசகர் திருவாசக திருபடைஆட்சியில், எதுவுமே இல்லை, ஆகாது என்று சகஸ்ரதள அத்வைத நிலையைக் கூறுகிறார். இது நிர்விகற்ப சமாதி நிலை. இது திரை நீங்கியதும் ஏற்படும் நிலை. இப்பொழுது ஆலய பூசையின்போது திரையை நீக்கிக் காட்டுகிறார்கள். சில ஆலயங்கள் கதிர்காமம் போன்று திரை நீக்காமலே இறைவனோடு, ஆன்மா ஐக்கியமான நிலையை விளங்கப்படுத்தவோ, காணவோ முடியாது என்பதால் அதை இரகசியமாக வைத்திருக்கிறன. "சிதம்பர ரகசியம்" என்பதும் இதுவே. சிதம்பரத்தில் ஒரு அறை திரை மூடியே இருக்கும். அதற்குப் பெரிய பஞ்சாரத்தி காட்டுவார்கள். மக்கள் அறையின் உள்ளே என்ன இருக்கிறது என்று அறியமுடியாத நிலை. ஆன்மா, இறைவனுடன் ஐக்கியமாகிய நிலை, ஒன்றான நிலை. இரண்டறக் கலந்த நிலை. இவ்வுலகிற்கு இரகசியம். ஆலய "திரைநீக்கமும்" "திரை மறைப்பும்" மக்களுக்கு இந்த நிலையில் அமைந்தவர்தான் "சிவம் என்று பார்க்கக்கூடிய அமைப்பில் விளக்குகின்றது.

ஆலய பூசையை கர்ப்பக்கிரகத்தை திரை நீக்கியதும் மக்கள் பார்க்கிறார்கள். புலன்கள் அறியமுடியாத கருத்துப்பொருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுக்குத் தெரிந்த உருவம் மூலம் அதை சிந்திக்க ஆலயம் செய்கின்றது. பெயரற்ற பிரப்பிரம்ம சிவத்திற்கு பல பெயர்கள். "ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி" உண்மைப்பொருள் ஒன்றுதான். ஞானிகள் பல பெயர்களால் அழைக்கின்றார்கள் என்பது இதன் அர்த்தம். இறைவனை தூரிய நிலையில் இல்லாத மக்கள் அறிய முடியாது என்பதற்காக அவரின் "தடத்த" பிரபஞ்சமாகிய நிலையையும்,"சொரூப" பிரபஞ்சமாகாத நிலையையும் ஆலய பூசை எடுத்துக்காட்டுகின்றது. வேதாந்தம் இதை "நிர்குணப் பிரம்ம நிலை" "சகுண பிரம்ம நிலை" என்று கூறுகின்றது. மூலஸ்தான மூர்த்தி அருவம், அருவுருவம், உருவம் என்ற முக்கூட்டு பிரபஞ்ச தோற்றத்தைக் காட்டுகின்றது. அருவநிலையை கருவறை அமைப்பு காட்டுகின்றது. குடைவடிவில் தோற்றும் மேல்முகடு குடை வடிவான ஆகாயவெளியை, சகலதும் இதற்குள் அமைந்ததே எனக் காட்டுகின்றது. இந்த விளங்கமுடியாத தொடக்கம் எது, முடிவு எது என்று கூறமுடியாத அருவ அமைப்பில் அமைந்ததே நட்சத்திரங்கள் போன்ற விளங்கியும், முழு விளக்கமும் அறிய முடியாத அருவுருவ அமைப்புக்களும் (Macro Cosam) உருவங்கள் ஆகிய, புலன்களுக்கு அமைந்த அணுவாலான (Micro Cosam) பன்மைத் தோற்றங்களும் ஆகும். குடைவடிவில், அருவ அமைப்பில் உள்ள மூலமூர்த்தியே உருவ அமைப்பாகும். அதன்கீழ் வைக்கப்பட்டிருக்கும் இயந்திரத் தகடு அருவுருவ அமைப்பாகும். இயந்திர தகடு விக்கிரகத்தின் கீழ் வைக்கப்பட்டிருப்பது மக்களுக்குத் தெரியும். இந்த தெரிந்த நிலை, தெரியாத நிலையில் மருந்து சாற்றி மூடப்பட்டிருக்கிறது. எமது உடலில் இந்த அமைப்புகளை முன்பு விளங்கினோம்.

இப்பொழுது முதல் காட்டப்படும் விளக்கு அடுக்குத் தீபமாகும். இது சில ஏழு அடுக்கிலும், சில ஐந்து அடுக்கிலும் காட்டப்படுகின்றது. இப்பிரபஞ்சமாகவும் அதற்கு ஆதாரமாகவும் இருக்கும் அத்வைத நிலையை ஏழு நிலைகளில் ஞானிகள் சிந்தித்து எடுத்துக் காட்டினார்கள். இந்த ஏழு இறைநிலைகளுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு அடுக்கு கொண்ட தீபமாக மக்களுக்கு கண்குளிர ஆலயம் காட்டுகின்றது. மக்கள் இதை சிந்தையில் வைத்து போற்றியறிய வேண்டும். முதலாவதாக பிரபிரம்ம சிவ நிலை. இதை இவ்வுடல் அமைப்பிலிருந்து விளக்கமுடியாது, விளங்கவும் முடியாது. நான்காவது "தூரிய நிலையில்" அத்துடன் "அத்வைதமாகி" இரண்டறக் கலக்கும் நிலையில் அதை அனுபவிக்கலாமே தவிர அதை விளங்கப்படுத்த முடியாது. உண்மையை எவர் இவ்வுலகில் எடுத்துக் கூறினாலும் அது முழு உண்மைப் பொருளாகாது. அது அவரவர் ஆத்மீக நிலைகளில் கூறிய உண்மையின், உயிருக்கு உயிரான பகுதிகளே ஆகும். சைவசித்தாந்தம் ஆன்மா படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மீட்டல் என்ற பஞ்ச கிருத்தியங்களைச் செய்யும் பரப்பிரம்ம சிவமாகாது என்று கூறுகிறது என்று சில சைவ அறிஞர்கள் எடுத்து விளக்குகின்றார்கள். சிவத்திற்கு அண்மையிலிருந்துஅந்த திருவருளில் ஆன்மா இலயித்திருக்கும் என்கிறார்கள். இந்தக்கருத்தை கூறுபவர்கள் இவ்வுலகில் இருப்பவர்கள். சிவநிலைக்கு அண்மையில் இருப்பவர்களே தவிர சிவமானவர்கள் அல்ல என்பதை அவர்கள் தாங்கள் கூறிய கருத்தாலே எடுத்துக் காட்டுகிறார்கள் என்பதை நாம் நன்கு உணர வேண்டும். சிந்தியுங்கள், ஆன்ம சிந்தனையாளர்களே, நிர்விகற்ப சமாதியில் மட்டும் உண்மையை அனுபவிக்கமுடியும். அதை எவராலும் இவ்வுலகில் எடுத்துக்கூற முடியாது என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். ஆகவே மற்ற எந்தக் கருத்துக்களை கூறும் நிலையும் "நிர்விகற்ப சமாதி நிலை" அல்ல. இந்த கருத்துக்களை நீங்களே சிந்திக்க, ஆன்ம சக்தியைப் பெற ஆராயுங்கள். இராமகிருஷ்ண பரமஹம்ச பெருந்தகை தமது நிர்விகற்ப சமாதி நிலையை தமது சீடருக்கு எடுத்துக்கூற விரும்பினார். தமது குண்டலனி சக்தியை மூலாதாரத்தில் இருந்து சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம் என்ற நிலைகளில் மேலெழுப்பி தொண்டை மட்ட "விசுத்தி" நிலைக்குக் கொண்டுவந்தார். அதன்மேல் அவர் சமாதி அடைந்தால் அதைப்பற்றி விளக்கமுடியாத நிலையை அடைந்தார். இதன் அர்த்தம் அவரவர்கள் தாங்களே தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டலனி சக்தியை மேலெழுப்பி "ஆஞ்ஞை" சகஸ்ரதளம் மூலம் இறைவன் ஆகலாம். அவரை அனுபவிக்கலாம்; விளங்கப்படுத்த முடியாது என்பதே ஆகும். மேலும் இப்பரப்பிரம்ம சிவநிலையை மாணிக்கவாசகர் மூலம் அறிவோம்.

•

"மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடர்" "அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவு" என்று சிவபுராணத்தில் கூறினார் அந்த அத்வைதத்தை எடுத்துக்கூற முடியாத நிலையில் ஞானச்சுடர் என்று பகுத்து உண்மையை அறிந்து பொய்ம்மையை விடுக்கும், அந்த அத்வைத ஆன்ம பகுத்தறிவை மெய்ஞானம் (wisdom) என்றார். மக்கள் நிலையில் புலனறிவில் போற்றும் பொருள்களை நம்பி உண்மை என்று வாழும் வாழ்வை அறியாமை என்றார். அந்த அஞ்ஞானத்தை அகற்றி உண்மையை விளக்கக்கூடியது இந்த பரப்பிரமமாகிய பகுத்தறிவே என்றார். திருவாசகத்தில் "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி" என்று இறைவனின் சொரூப நிலையை ஒளியும் ஒலியும் கலந்த சோதிச் சுடருக்கு ஒப்பிடுகிறார். இந்த நிலையில்தான் இவ்வுலக்கில் இடி முழக்கம் ஆகிய ஒலியும், மின்னலின் ஒளியும் சோதியாகத் தோன்றி இங்கு நாம் பார்க்கக்கூடிய நிலையில் மின்னல் ஒளியாக முதலிலும் முழக்கமாகப் பின்பும் அறிகின்றோம். ஒளி, ஒலியைவிட வேகம் கூடியதென்பதை விஞ்ஞானம் விளக்குகின்றது. இவற்றை எல்லாம் விட மேலான நிலையில் அங்கு ஒன்றும் "ஆகாதே" இங்குள்ள நிலைகள் எதுவுமில்லை என்றார். "ஒன்றோடு ஒன்றும், ஓர் ஐந்தினோடு ஐந்தும் உயிர்ப்பதும் ஆகாதே" என்று ஒன்றையும், ஒன்றையும் கூட்டுதலும், ஐந்தையும் ஐந்தையும் கூட்டுதலும் நேரத்திற்கும் வெளிக்குள்ளும் அமைந்த பூவுலக கணக்கு முறைகள். ஆனால் அப்பாற்பட்ட அத்வைத நிர்விகற்ப நிலையில் எந்தக் கணக்கிற்கும் இடமில்லை அங்கு வித்தியாசமற்ற இறைவனாகிய ஆன்மாவே எல்லாம் என்ற நிலையில் இங்குள்ள நிலைகளுக்கு இடமேயில்லை என்றார். மேலும் இந்த விஞ்ஞான மேதை, விஞ்ஞானம் என்பது என்னவென்று தெரியாத காலத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை "அணுவணுவாய் தேய்ந்து ஒன்றாம் திருப்பெருந் துறையுறை சிவனே" என்றார். இறைவன் இப்பிரபஞ்ச நிலையில் எல்லாம் அணுக்களாக்கி தோற்றி அவற்றில் உறைந்து நிற்கின்றார் என்பதைக் கூறுகின்றார். திருப்பெருந்துறையில் நின்று பாடியதால் "திருப்பெருந்துறையுறை சிவனே" என்றார். "திருப்பெருந் துறையுறை சிவனே" என்பது இப்பிரபஞ்சத்தில் (திருப்பெருந் துறை) உறைகின்ற, எங்கும் அது தத்துவமாக நீக்கமற நிறைந்த சிவனையும் கருதலாம். "நீ அல்லால் பிறிது மற்று இன்மை" இறைவன் இல்லாமல் பிரபஞ்சத்தில் ஒரு பொருளும் இல்லை என்பதைக் கண்டு கூறுகின்றார். இறைவனே எல்லாவற்றிற்கும் காரணம், அத்திவாரம் என்பது விளக்கம். "ஒன்றும் நீ அல்லை, அன்றி ஒன்றில்லை யார் உன்னை அறியகிற்பாரே" என்று மேலும் விளக்குகின்றார். இந்த பிரபஞ்ச உருவ, அருவுருவப் பொருள்களை சுட்டிக்காட்டி இதுதான் இறைவன் என்று கூறுவதற்கு எதுவும் இல்லை. ஆனால் இறை திருவருள் சக்தி அத்வைதம் எங்கும் நிறைந்து ஊடுருவி நிற்காவிட்டால் இங்கு தோற்றமோ பொருள்களோ இருக்கமுடியாது என்று கூறி உறுதியாக இப்பிரபஞ்ச நிலையில் உள்ள பூவுலக மக்கள் தமது புலனறிவு ஆராய்ச்சிகள் மூலம் இறைவனை அறியமுடியாது என்று கூறி விட்டார்.

அத்வைத பரஞ்சோதியை அடுக்குதீப முதலாம் தட்டு மூலம் நன்கு விளங்கினோம். இரண்டாவது தீபத்தட்டை நோக்குவோம். இது இரண்டாவது நிலையான "அர்த்தநாரீஸ்வரர்" ஓவியம் காட்டும் நிலை. சிவனின் இடப்பாகமாக சக்தி அமைந்து எமக்கு சிவமும் சக்தியும் இரண்டல்ல ஒன்றே என்று காட்டும் நிலை. பாலும் வெண்மையும் பிரிக்கமுடியாமல் கலந்திருப்பது போல சிவசக்தி நிலையை இந்த உவமானம் காட்டுகின்றது. பாலையும் வெண்மையையும் பிரித்தால் அது பால் அல்ல. இந்த பிரபஞ்ச அமைப்பின் இரண்டாவது நிலையை, சக்தி, பரப்பிரம்ம சிவத்தில் அடங்கி நிறைந்திருக்கும் தன்மையை இரண்டாவது தீபத்தட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குகின்றது. மூன்றாவது பிரபஞ்சநிலை அந்த எல்லாம் வல்ல ஆதிபராசக்தியாக எல்லாவற்றையும் ஊடுருவி எங்கும் நிறைந்த சக்தி தளம். இதில் இருந்து மற்றைய நான்கு பிரபஞ்ச நிலைகளும் அமைகின்றன. இந்த சக்தி பிரபஞ்ச பொருட்களை ஆக்காமல், அதை தன்னகத்தே அடக்கிய "சொரூப - நிர்குண" பிரம்ம நிலையாகும். (Unmanifested Energy) நாலாவது தீபத்தட்டு இதனை விளக்குகின்றது. ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது பிரபஞ்சநிலைகள் எல்லாம் இந்த சக்தி தடத்த (சகுண பிரம்ம) நிலையில் எல்லாத் தோற்றத்தையும், காரண காரீயம் (விளைவு) என்ற நிலையில் அமைக்கின்றது. ஐந்தாவது தீபத்தட்டு காரணப்பகுதியை (Causal Region) சக்தி அளவுநிலையைக் காட்டுகின்றது. முன்பு இதை விளக்கினோம் (நந்தி). ஆறாவது நிலை நினைவுகளின் கற்பனை நிலை (Astral Region) மனதின் அமைப்பில் விளங்கினோம். ஆறாவது தீபத்தட்டு இதனைக் காட்டுகிறது. ஏழாவது நிலை இந்தப் பௌதீக பிரபஞ்ச தோற்ற அமைப்பு இதை ஏழாவது தட்டு அடுக்கு தீபம் விளக்குகின்றது. விளங்கமுடியாது இறைவனின் ஏழு நிலைகளையும் ஆலய பூசையில் கண்டோம். விஞ்ஞானம் இப்பிரபஞ்ச பௌதீக மூலகங்களின் (அத்திவாரமான பொருட்கள்) கூட்டங்களை ஏழு நிரல்களில் ஆவர்த்தன அட்டவணையில் (Periodic Table - Periods) காட்டியுள்ளது. விஞ்ஞானம் விளக்கிய ஏழு நிலைகளும் இங்கு மூலகங்களின் ஏழு நிலைகளில் உணருகின்றோம். இந்த மூலகங்களில் இருந்தே எல்லாப் பொருட்களும் திண்மம், திரவம், வாயு என்ற முக்கூட்டு நிலையில் அமைந்துள்ளன.

அடுத்ததாக ஐந்தடுக்குத் தீபம் விளக்குவதைப் பார்ப்போம். ஐம்பூதங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், உடல், வாய், கண், மூக்கு, செவி ஐந்து கர்மேந்திரியங்கள், கை, கால், நாக்கு, யோனி, மூலம் ஐந்து தன்மாத்திரைகள் (உணர்வுகள்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஸ்பரிசம் - ஒரு பொருளை தொடுவதால் ஏற்படும் மன உணர்வு.
2. சப்தம் - ஒலிகளைக் கேட்பதனால் ஏற்படும் மன எண்ணங்கள்.
3. ரூபம் - உருவங்களைப் பார்ப்பதனால் •ஏற்படும் மனஎண்ணங்கள்
4. கந்தம் - மணங்களின் மூலம் ஏற்படும் எண்ணங்கள்.
5. ரசம் - சுவைகளினால் ஏற்படும் மன எண்ணங்கள்.

இப்பிரபஞ்சம் ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் என்ற அமைப்பில் அமைந்திருக்கின்றது. இதற்கு மேல் விஞ்ஞானம் கூறவில்லை. இந்த ஐந்து நிலைகளிலும் 108 மூலகங்களை விஞ்ஞானம் கண்டிருக்கின்றது. தற்பொழுது கண்டுபிடித்த வகைகளில் 110 என விஞ்ஞானம் கூறுகின்றது. ஆனால் உண்மையில் 108 எண்ணை எமது இந்து மதம் கூறியுள்ளது. தற்போது விஞ்ஞானம் கூறும் இந்த இரண்டு மூலகங்களும் ஞானிகள் கூறிய 108 இற்குள் அடங்கியதாக இருந்ததை விஞ்ஞானிகள் அதிகம் நிலையற்ற (Unstable) மூலகங்களையும் ஆவர்த்தன அட்டவணையில் சேர்த்துள்ளார்கள். இது விஞ்ஞானிகளின் கணிப்பு. எப்படி இருப்பினும் ஐம்பூதங்களில் அடங்கிய 108 மூலகங்கள் முக்கியமானவை என்று வேத ஆகமங்களின் முறையில் நடத்தப்படும் ஆலயங்கள் 108 சங்குகளை வைத்து அபிஷேகம் செய்கிறார்கள். 108 அர்ச்சனை செய்கிறார்கள். 108 தரம் ஆலயத்தைச் சுற்றி வலம்வந்து வணங்குபவர்களும் இருக்கிறார்கள். கந்தபுராணத்தில் பரப்பிரம்மசிவம் "108 யுகங்கள் நீ 1008 மண்டலங்களை ஆள்வாய்" என்று சூரனுக்கு வரம் கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது. சூரன் "ஆணவ" மலத்தைக் குறிக்கின்றது. இந்த ஆணவம், 108 முக்கிய மூலகங்களினால் ஆன பொருள் நிலையில் அமைகின்றது. இந்தப் பொருட்களைக் கொண்ட உடல்நிலையில் புலனறிவில் அது இப்பூவுலகில் நிறைந்து ஒருவரில் கூடுதலாகவும் மற்றவரில் குறைவாகவும் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகளில் அறியாமையின் மூல அத்திவாரமாக காணப் படுகின்றது. இந்த "நான்" என்ற சுயநலம் நிறைந்த பொருள் உடலமைப்பு எம்மை விட்டு நீங்காது. "நிர்விகற்ப சமாதி நிலையில்" மட்டுமே இது இறைவனாகும். சூரனுடைய காலம் 108 யுகங்கள் என்ற நிலை, 108 முக்கிய மூலகங்களினால் ஆன உடல், மனம், புலனறிவின், ஆணவம் நிறைந்த எங்கள் உடலமைப்பு. அடிமனமும், புலனறிவும் பல பிறவிகளில்தான் அற்று, வினைகளைப் பொறுத்து ஆன்மாவில் அடங்கி பரப்பிரம்ம சிவமாகும். ஆகவே சூரனுக்கு ஆணவத்திற்கு 108 முக்கிய மூலகங்கள் மூலம் பெற்ற காலம் (யுகம்) 108 யுகமாகும். அது உடல்நிலையில் உன்னத நிலையாகும். அதை ஆலயம் விளக்கும் முறையில் அறிந்தோம்.

இந்தப் பூதங்களின் தன்மாத்திரைகள் மணம் (கந்தம்) என்பது சாம்பிறாணி, சந்தணக்குச்சிகள், ஔடதப் பொருட்-களாலும், விக்கிரகங்கள் தீபங்கள் மூலம் பார்ப்பதாலும் சப்தம் ஆலயமணி ஓசைகளினாலும், ஸ்பரிதம் - நாம் தீபங்கள், விபூதி, குங்குமம், தீர்த்தம், சந்தனங்கள் முதலியவற்றைத் தொடுவதாலும் சுவை, பிரசாதங்கள், பஞ்சாமிர்தம், விபூதி, தீர்த்தம் முதலிய வற்றைச் சுவைப்பதாலும் எமக்கு ஆலயங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஐந்து ஞானேந்திரியங்களும் எம்மை இறைவனை உணரவைக்காத மாயையென்றும், ஐந்து கர்மேந்திரியங்களும் இந்தப் புலன்களின் அறியாமையில் செயற்படும் அங்கங்கள் என்றும், இவைகள் ஐந்தும் தீபமாக முடியும் என்பதை ஆலய ஐந்தடுக்கு தீபம் உணர்த்துகின்றது. இந்த ஐந்து நிலைகளும் பஞ்சாரத்தி தீபம் காட்டி ஆலயத்தில் விளக்குகின்றார்கள். உலக மூலகங்களினாலான கற்பூரத்தை தீபஒளி ஆக்குகிறார்கள். தீபம் இறையொளி - தீ. இந்த ஒளி முழுமையாக கற்பூரத்தை எரித்து சாம்பர் கூட இல்லாமல் தட்டை வெறுமையாக்குகின்றது. கற்பூரம் வெண்மையானது. ஆகவே அதை "ஆன்மாவிற்கு" ஒப்பிடலாம். ஆன்மா முழுமையாக இறைவனால் ஆட்கொள்ளப்படுவதை இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூரத்தை எரித்துக் காட்டுதல் விளக்குகின்றது. இங்கு முகிற் கூட்டங்கள் போல் புகை நீங்குகின்றது. எரித்த தட்டு சற்று கரிப்பிடித்து இருக்கின்றது. இங்கு புகையும், கரியும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய வினைப்பயன் மலங்களாகும்.

இறைவனால் ஆன்மா முழுமையாக ஆட்கொள்ளப் பட்டதும் ஆன்மாவில் இருந்த மலங்கள் நீங்குகின்றன. ஆன்மா இறைவனானதும் மிஞ்சுவது ஒன்றுமில்லை. ஆகவே பஞ்சாரத்தி ஐந்து கரங்களை உடையது. இந்த ஐந்து நிலைகளிலுள்ள எல்லாம் நிர்விகற்ப சமாதியில் அற்றுப்போகின்றன. ஒற்றைத் தீபம் கற்பூரம் எரித்தும், ஒற்றை விளக்காகவும் பூசையின்போது காட்டப் படுகின்றது. இது இறைவன் பல பெயர்களில், பல உருவ விக்கிரங்-களில் ஆலயத்தில் காட்டப்பட்டாலும் இறைவன் ஒன்றே என்பதை எடுத்து நமக்கு விளக்குகின்றது. அது விளங்கமுடியாத பரப்பிரம்ம சிவமே கண்ணுக்குத் தோற்றும் உருவங்கள் மூலம் உருவமற்ற அந்த நிலையை வணங்குகின்றோம் என்பதை நமக்கு உணர்த்துகின்றது. இறைவனை ஏழு நிலையில் பார்த்தாலும், ஐந்து நிலைகளில் பார்த்தாலும் எல்லா நிலைகளையும் ஊடுருவி நிற்பது அந்த அத்வைத (ஒரு) பொருளே என்பது ஒற்றைத் தீபங்களின் விளக்கம். திருமந்திரம் இந்த நிலைகளை விளக்கும்பொழுது "ஒன்றவன் தானே" என்று இறைவனின் அத்வைத நிலையைக் கூறுகின்றது. இந்த கற்பூரம் திண்மம். அது உருகித் திரவமாகி, பின் வாயுவாகின்றது. பிரபஞ்ச முக்கூட்டுநிலை தடத்த, புலனறிவு நிலையில் நிற்கும் மக்கள், புலனறிவில் இறைவனின் வாயுநிலையை, நுண்ணிய அலைவரிசைகளைத் தூரத்தில் இறைவன் இருப்பதாக நோக்குகின்றார்கள். ஆலயத்தில்தான் இறைவன் இருக்கிறார் என்றும், விநாயகர், முருகன் என்று பல தெய்வங்கள் இருக்கிறார்கள் என்றும் மக்கள் நினைத்து ஆலயம் செல்கிறார்கள். ஆலயங்கள் எப்படி பரப்பிரம்ம சிவத்தை விளக்குகின்றன என்பதை நாம் இங்கு எழுதப்படுபவைகளை சிந்தித்துப் பார்ப்போம் நடைமுறைப்படுத்துவோம். ஆலயத்தில் ஒற்றைத்தீபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு தீபங்களாக, ஒன்று கற்பூரத்தை எரித்தும் மற்றையது தீபமாகவும் விளக்கிக் காட்டப்படுகின்றது.

ஆலயத்தில் சாம்பிறாணி, குச்சி வடிவிலும் தூள் வடிவிலும் ஏற்றப்பட்டு தூப வடிவில் காட்டப்படுகின்றது. தூபம் நினைவு அலைகளைப்போல அலை வாயுக்கள்; தூபத்தைக் கண்ணால் பார்க்கலாம். நினைவு அலைகள், உணர்வு அலைகள் மிக நுண்ணியவை. கண்ணால் பார்க்கமுடியாது. இறைநிலைகள் மிக நுண்ணிய அலைகள். அவைகளை மக்கள் கண்களால் காண முடியாது. ஆகவே பூசையில் கண்ணுக்கு புலப்படும் தூபங்களைக் காட்டி இறைநிலை, அலை வரிசைகளை மிக நுண்ணியநிலையில் கொண்டது என்று எடுத்துக் காட்டுகின்றார்கள். மக்கள் ஆலயத்தில் இதைக் கண்குளிரக் காண்கிறார்கள். ஆனால் பலர் விளங்கவில்லை. சாமரை வீசுதல், கொடியை அசைத்துக் காட்டுதல், குடையைப் பிடித்துக் காட்டுதல் எல்லாம் நாம் அந்த இறை சக்தியினாலேயே இயங்குகின்றோம் எல்லா உலக செயல்களுக்கும் இறைவனே அத்திவாரம் என உணருகின்றோம். இறை சக்தி ஆன்மாவை இறைவனாக்குவதை குறிக்கோளாகக் கொண்டு உள்ளோம் என்று இறைவனை ஆதரிக்கும் முறையில் செய்யப் படுகின்றன என்பதை ஆலய பூசை எமக்கு உணர்த்துகின்றது. ஆகவே நாம் இவ்வுலகில் செயற்படும்போது உடலினால் அல்ல. அது கருவி, பிரேதம், சதைப்பிண்டம் இந்த உலக மூலகங்களினால் ஆன பொருளை இயக்குவது ஆன்ம குண்டலினி சக்தியே என்பதை நாம் ஆதரிக்க வேண்டும். ஆலய விளக்கத்தை விளங்கி எமது சுயநலமற்ற செய்கைகளால் எல்லாம் ஒன்றே என்று உணரவேண்டும். அந்த உண்மை அன்பில் வாழும்போது அதையே சிந்தித்து தியானிக்கும்பொழுது அது எமது குண்டலனி சக்தியை மேலெழுப்பும். வினைப்பயனால் இந்தப் பிறவியில் அத்வைத நிலை கிடைக்காவிட்டாலும் அடுத்த பிறவி ஆன்மீக முன்னேற்றமே என்பதை நாம் அறியவேண்டும். இன்றே எமது செயல் இதற்காக தெய்வீகமாக வேண்டும். இதுவே எமது பிறவியின் காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலையை விரும்பும் ஆன்மாவை விடுத்த சிந்தனைகள் எம்மை பல பிறவிகளில் ஆழ்த்தும் என்பது நிச்சயம் நாம, தீப, தூபம் என்ற முக்கூட்டுநிலையில் பூசைகள் நடைபெறுகின்றன. தூப, தீப பூசைகளை நாம் ஏற்கனவே விளங்கினோம். இப்பொது "நாம" அர்ச்சனைகளை பூசையின் போது காண்கின்றோம். இவை சப்த நிலையில் அலைகளாக மூலஸ்தானத்தில் விக்கிரகங்களால் கவரப்படுகின்றன. விக்கிரகங்களுக்கு பாவிக்கும் கற்களும் உலோகங்களும் ஒலி அலைகளை தன்னகத்தே வைத்திருக்கக் கூடியவை. சில நிமிடங்களுக்குத் தன்னும் தன்னுள் வைத்திருக்கக் கூடிய நிலையில் சப்தங்கள் மந்திரங்கள் மூலம் பலநிலை அலைவரிசைகளில் அதை கூடுதலாகக்கொண்ட சமஸ்கிருத மொழியால் உச்சரிக்கப் படுகின்றன. இந்த மந்திரங்கள் அக்காலத்தில் வேதங்கள், ஆகமங்களின் மூலம் எழுதப் பட்டிருந்ததால் இன்றும் ஆலயத்தில் ஒலிக்கின்றன. பல கோவில்களில் தமிழாலும் பூசைகள் நடைபெறுகின்றன. அபிஷேகங்கள் நடக்கும்பொழுது நாம் கண்குளிரக் காண்கிறோம். அபிஷேகங்கள் மூலம் நாம் ஔடதங்களையும் இந்த மந்திர அலைகளையும், தீர்த்தம் மூலமும், அதில் அப்பி எடுக்கும் பஞ்சாமிர்தம் மூலமும் நாம் பெறுகிறோம். இவைகள் எங்கள் உடலிலுள்ள நோய்களை மட்டும் கண்டிப்பதோடு மட்டும் அல்லாமல் எங்கள் உடலிலும் உள்ளத்திலும் இந்தப் பலநிலை சப்த அலைகள் பக்தியைத் தூண்டுகின்றன. ஆலயத்தில் மக்கள் பக்தியை இதன்மூலம் இறைவனில் அதிகரிக்கின்றார்கள்.

மேலும் அபிஷேகங்கள் தொடங்குமுன் கும்பங்கள் வைத்து ஓமம் வளர்த்து பூசைகள் நடைபெறுகின்றன. இவைகள் வேதங்கள் கூறும் முறையில் நடைபெறுகின்றன. இவைகளுக்கு வேத கருத்துக்கள் நிறைய உண்டு. நாம் வாழ்க்கையில் இந்த கும்பங்களை விளங்கி எப்படி வாழவேண்டும் என்பதைப் பார்ப்போம். கும்பங்கள் என்பது நிறைகுடங்கள் நிறைவு என்பது ஆனந்தம். குறைவு ஆனந்தமாகாது. கும்பங்கள் நீர் நிறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவில்லாது இருக்கும். இங்கு எமது மனம் நிறைவாக, ஆனந்தமாக இருக்கவேண்டும் என்பதை "நிறைகுடம் தளம்பாது" என்ற நிலை விளக்குகின்றது. எமது மனம் நிறைவு பெறாததால் எப்பொழுதும் தளம்பிய நிலையிலேயே இருக்கின்றது. ஆசைகள் ஒருபோதும் நிறைவாகாது. அது மேலும் வளர்ந்து மனதில் பேராசையாகும். மனம் திருப்தி அடைந்தது, நிறைவு பெற்றது என்று இவ்வுலகில் கூறுவதற்கு எதுவும் இல்லை. நாம் நிறைவேறாத ஆசை மனத்துடன் இந்த உடலை நீத்து அடுத்த உடல் அமைப்பை அதற்கேற்ப பெறுகின்றோம். பத்துரூபா வைத்திருந்தால் அதை மேலும் பெருக்கி ஒரு இலட்ச ரூபாய் ஆக்குவோம். அத்துடன் எமது மனம் திருப்தி அடையாததால் ஒரு கோடி ரூபாய் ஆக்க முயற்சிப்போம். இந்தப் பணத்தை அனுபவிக்காமல் அதை அனேகமாக இழக்கவும்கூடும். அந்த ஆசையை மனத்தில் வைத்து இறக்கவும்கூடும். ஆகவே இப்படிப்பட்ட மனம் "போதும் என்ற மனமே பொன் செய்யும்" என்ற நிலையில் நிறைகுடமாக வேண்டும் என்பதையே கும்பங்கள் வலியுறுத்துகின்றன. ஓமம் வளர்க்கும் பொழுது அந்த அபிஷேகம் செய்பவர்கள் தட்டத்தில் தேங்காய், நெல், பூக்கள், தெற்பை முதலிய உலகப் பொருட்களை வைத்து அக்கினியில் இடுகின்றார்கள். இப்படி உலகப்பொருட்களை நாம் அக்கினியில் இடும்பொழுது எமது ஆசைகளை நீக்கவேண்டும் என்பதை உணர தவறக்கூடாது. அதை வாழ்க்கையில் உணர்ந்து எமது பேராசைகளை முதலில் விடவேண்டும். இருப்பதோடு வாழ்வில் திருப்தி அடையவேண்டும். இருக்கும் ஆசைகளை படிப்படியாகக் குறைத்து அதை முற்றாக விடவேண்டும். காசுள்ள நிலையில் தேவைக்கு அதிகமான பொருட்களை தவிர்க்க வேண்டும். அப்படி வாங்கினாலும் அதைப்பற்றி மனதில் சந்தோஷத்தையோ, அதனால் ஏற்பட்ட செலவையோ பதிக்கக் கூடாது. வாங்கமுடியாத நிலையில் அதைப்பற்றி கவலைப்படக் கூடாது, சிந்திக்கக்கூடாது, கதைக்கவும் கூடாது, எமது சிந்தனைகள் வேறு கவனத்திலும் மேல்நிலை ஆராய்ச்சிகளிலும் ஈடுபட இந்த ஆசைகள் தானே அகலும் அவை வாழ்வைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சனைப்படுத்தமாட்டாது. உதாரணமாக சிறுவர்கள் பாவைகளுடன் விளையாடுகிறார்கள். பின் அதைவிட்டு ஓடி விளையாடுகிறார்கள், வயது கூடக்கூட இந்த ஆசைகள் படிப்பில் தொழிலில் என்று ஈடுபட விளையாட்டுகளும் குறைகின்றன. ஆத்மீகத்தில் ஆன்மாவை உணர்ந்த மக்கள் கவனம் செலுத்தி மேல் எழ ஆசைகள் குறைந்து முற்றாக நீங்கிவிடும். ஒவ்வொரு ஆசைகளும் எப்படி விடுபட்டு ஒவ்வொன்றாக மாறுகின்றதோ அப்படி வாழ்வில் நாம் முயற்சிக்க மேல்நிலை சிந்தனைகளுக்கு பழக்கப்பட்டு ஆசையை நிச்சயம் குறைக்கமுடியும். ஆத்மீக சிந்தனையில் இது முற்றாக நீங்கும்.

தெற்பையை உபயகாரர் கையில் அணிந்திருக்கிறார். அவர் விரலில் தெற்பையை அணிந்ததும் தான் இறைவன் முன் தெற்பை என்று யோசிக்கவேண்டும். அதை விட்டு இது எனது பணம், எனது உபயம் என்று தெற்பையை எல்லோரும் பார்க்க இறுமாந்து நின்றால் அந்த மனம் இருக்குமானால் அதில் எந்தப் பிரயோசனமும் இல்லை அந்த மனமும் தட்டிலுள்ள பொருட்-களுடன் அக்கினியில் இடப்பட்டு இறுமாப்பு அழிந்து எந்த நினைப்பும் இல்லாமல் ஆன்ம சிந்தனையில் இறைவனைத் தியானிக்கவேண்டும். அதை முயற்சிக்கவேண்டும். திருவிழா செய்யும் உபயகாரர் மாலையிடப்பட்டு மேளத்துடன் ஆலயத்தை வலம் வருகிறார். அப்படியான நிலையில் இறுமாப்புள்ள மனம் அந்த நிலையில் மாலை இடுதலை இறைசேவைக்குக் கொடுக்கப்பட்ட வெகுமதி இது. அதைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்று அந்த ஆத்ம சிந்தனையுடன் வீதியை வலம் வரவேண்டும். அந்த மேள ஓசை மனதில் இறைசேவையின் முக்கியத்துவத்தை ஏற்படுத்த வேண்டும். கும்பங்களை வீதிவலமாக கொண்டுவந்து ஆலயத்தில் மூலமூர்த்திக்கு ஒவ்வொரு குடமாக அபிஷேகம் செய்கிறார்கள். அபிஷேகம் மூலமூர்த்தியைக் கழுவுகின்றது. புனிதப்படுத்துகின்றது. அதேபோல் எமது மனதையும் உள்ளத்தையும் அந்த அபிஷேக பார்வையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைசிந்தையால் கழுவி புனிதப்படுத்தவேண்டும். இதுவே எமது வாழ்க்கையின் குறிக்கோள். நிர்க்குண பிரமம், சகுண பிரம்ம நிலையை எய்தும்பொழுது "ரஜஸ்" என்ற ஆக்க, தாக்கங்கள் உடைய வெறிநிலையையும், "தாமஸ" என்ற இறை சிந்தனையோ, மற்றும் மேலான ஆக்கங்களை ஒருபோதும் உணராத நிலையையும் "சாந்தம்" என்ற இந்த இரண்டிற்கும் அப்பாற்பட்ட நிலையான "அமைதியையும்" ஏற்படுத்துகின்றது.

இந்த நிலைகள் எமது உடல்நிலையிலும், ரஜஸ், தாமஸ், சாத்விக் என்ற முக்குண நிலைகளை ஏற்படுத்தியுள்ளன. நாம் முழிப்பு நிலையில் "ரஜஸ்" நிலையை அடைகின்றோம். உறக்க நிலையில் "தாமஸ" நிலையையும், காலையில் எழுந்த நிலையில் "சாந்த" நிலையிலும் இருக்கிறோம். இது பொதுவாக எல்லோருக்கும் சமமாக இருந்தாலும் அவரவர் வினைப்பயன் அமைப்பு நிலையில் சிலருக்கு "ரஜஸ்" நிலை கூடுதலாகவும், வேறு சிலருக்கு "தாமஸ" நிலை கூடுலாகவும், மற்றும் சிலருக்கு "சாந்த" நிலையும் கூடுதலாக வாழ்க்கையில் அமைந்திருக்கின்றது. காலையில் சாந்த நிலை எல்லோருக்கும் பொதுவாக இருப்பதனால் அந்தப் பிரம்ம முகூர்த்தத்தில் "ஆருத்திரா தரிசனம்" நடராஜ விக்கிரகத்திற்கு நடைபெறுகின்றது. சாந்தமான மனதில் இறைவனின் பஞ்ச கிருத்தியங்கள், அந்த அசைவு நர்த்தன நிலையில் ஏற்படும் இறை தொழில்களை விளக்குகின்றன. விஞ்ஞானம் இந்தப் பிரபஞ்ச கதிரியக்கங்கள் ஒவ்வொரு செக்கனும் இங்குள்ள எல்லா நிலைகளையும் ஊடுருவுகின்றன என்று கூறுகின்றது. இதுவே நடராஜ நர்த்தனம். ஆகவே இந்த அபிஷேகம் சாந்த நிலையில் எம் மனதை இறை சிந்தனையால் புனிதமாக்கி அதில் மட்டும் பதிய வைக்கின்றது. முக்கிய கும்பத்தை (விநாயக) சிரசில் வைத்து வீதிவலம் கருத்து. அந்த நிறைகுடமான நிலையில் மனம் ஆத்மனாகி புருவமத்தியில் பின் சிரசில் ஆன்மா என்ற பெயர் அற்று சகஸ்ரதளம் இறைவன் உட்புகுந்த இடமாகையில் இரண்டறக்கலந்து இறைவனாகின்றது. விநாயகர் கும்பம் "ஓம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பிரணவப் பொருள் எமது சிரசில் அமர்ந்து ஊடுருவுகின்றது.

கும்பாபிஷேக நிகழ்ச்சியில் வேத முறைப்படி நடக்கும் யாகங்களும் திருவிழாக்களில் யாகசாலைகளில் நடக்கும் யாகங்களும் அக்கினியாக இறைவனைப் பாவித்து இவ்வுலக அறிவுகள், புலன்கள், ஆசைப்பொருட்கள், எம் சிந்தனைகள் பலவற்றை வித்தியாசமாக பார்க்கும் தடத்த நிலை மனம் எல்லாவற்றையும் அந்த அக்கினி சொரூபத்தில் முழுமையாக எரிக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. பலனை எதிர்பாராது எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்து ஆத்மாவை மட்டும் சிந்தித்த நிலை இந்த யாகசாலை ஆகும். ஒரு தட்டின் நடுவில் கும்பவிளக்கை வைத்து அதைச் சுற்றி பித்தளை சுட்டி விளக்குகள் வைத்து தீப ஆராதனை செய்கிறார்கள். இறைவன் ஒளி வடிவானவன் என்ற நிலையில் மக்களுக்கு இவைகளை ஆலய பூசை உணர்த்துகின்றது. "ஓம்" என்ற நாதம் தொடக்க ஒலிக்காத நிலையில் "அமாத்திர பிரணவமாகவும்" ஒலிக்கின்ற நிலையில் "மாத்திர பிரணவம்" ஆகவும் அமைகின்றது. இந்த "மாத்திர பிரணவமாகிய" மந்திரங்களை ஓதும்பொழுது மேளதாள மணி ஓசைகள் எல்லாம் நிறுத்தப்பட்டு மந்திர ஓசை மட்டும் கேட்கச் செய்கிறார்கள். மற்றும் நேரம் எல்லா ஆலயஒலிகளும் கேட்டு வெளியுலக ஓசைகளைக் கேட்காமல் செய்கின்றார்கள். மக்கள் ஆலய நிகழ்ச்சிகளைக் கவனிக்கிறார்கள். ஆலய பூசையின்போது மார்பிற்கு அருகே கைகளைக் கூப்பித் தொழுகிறார்கள். இவர்களுடைய "சிவமாகிய" கைப்பெருவிரல்கள் அவர்கள் நெஞ்சைத் தொட்டு உள்ளத்தை அந்த மூலமூர்த்தியாக நினை என்கின்றது. சில சமயங்களில் சிரசில் கையைத் தூக்கி கைப்பெருவிரல்கள் சிரசைத் தொட வணங்குகின்றார்கள். இந்த நிலை அவர்கள் சிரசே பிரதானம். சகஸ்ரதளம் என்று இறைவன் இங்குதான் என்று நினைத்து மூலமூர்த்தியை வணங்கு என்கிறது. சிலர் கைகள் இரண்டையும் தூக்கி பின் நிற்பவர்களையும் மறைத்து மூலமூர்த்தியை வணங்குகின்றார்கள். இதில் எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமும் இல்லை. சிரசை நெஞ்சைத் தொடும்வகையில் மூலமூர்த்தியை எப்பொழும் வணங்கவேண்டும். இந்த முறைகள் மேற்கூறிய அர்த்தத்தைக் கொண்டவை. மேலும் விநாயகரை வணங்கும்பொழுது கையைக் குறுக்காக வைத்து செவியைப் பிடித்து இருந்து எழும்புகின்றார்கள். ஆனால் உண்மையில் செவியைக் குறுக்காகப் பிடித்த நிலையில் முழங்கால் மடங்கி நெற்றியுடன் நிலத்தில் தொட வணங்கவேண்டும். இடை பிங்கலை நாடிகள் குறுக்காக ஒன்றைப் பலதடவைகள் கடந்து நெற்றி புருவத்தில் இருந்து மூலாதாரத்திற்கு வந்து ஒளியூட்டுகின்றது. இந்த புலப்படாத நிலை ஞானிகள் மட்டும் உணர்ந்த நிலை. இப்படி ஒளியூட்டுதல் இறைவனே ஆன்மா என்பதைக் காட்டி புருவ மத்தியே எமது மூன்றாவது கண், இங்கு இறைவனை சிந்திக்க வேண்டும் என்று காட்டுகின்றது. இப்படி கையைக் குறுக்காக அமைத்து செவியைப் பிடித்து வணங்கும் நிலை இடை, பிங்கலை நாடிகள் செல்லும் வழியைக் காட்டுகின்றது. வளைந்து நிலத்தைத் தொட்டு வணங்குதல் அந்தப் புருவமத்தியே பிரதானம் இவ்வுலகில் (நிலம்) என்பதைக் காட்டுகின்றது. இது சற்றுக் கடினமானது ஆனால் தேகாரோக்கியமானதாகும்.

இதை செய்யமுடியாதவர்கள் முழங்காலை மடித்து, குறுக்காகச் செவியைப் பிடித்து இருந்து, எழும்பி கும்பிடுவார்கள். இது இடை பிங்கலை நாடிகளுக்கு முக்கியமான வணக்கமாகும். "பிரணவப் பொருள்" வணக்கத்தில் மிக முக்கியம்.

பூசையின்பொழுது திருமுறைகள் "பஞ்சபுராணம்" என ஆலயங்களில் பாடப்படுகின்றன.

1. தேவாரம்
2. திருவாசகம்
3. திருவிசைப்பா
4. திருப்பல்லாண்டு
5. திருத்தொண்டர் புராணம் (பெரியபுராணம்) அல்லது திருப்புகழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண மக்கள் இறைவனை தங்கள் ஆத்மனை விளங்க முடியாத நிலையில் ஆலயங்கள் எல்லாம் சென்று போற்றி வாழ்த்தி ஞானிகள் காட்டினார்கள். இந்த மனம், வாய் போற்றுதலையும், வாழ்த்துதலையும் தான் முதலில் சாதாரண அறிவுடன் செய்ய முடியும். அதை செய்யவேண்டும், மற்றவர்களைப் போற்றி, வாழ்த்தி, குறைகளைத் தவிர்த்து இறைவனிடம் துன்பம் செய்பவர்களை, அவர்கள் அறியாமையை மன்னிக்கும்படி இறைஞ்சவேண்டும். இதனால்தான் திருமுறைகள் ஆலயங்கள் தோறும் பாடப்படுகின்றன. இதைப் பாடுகின்றபொழுது பாடியவர் தான் நல்ல குரலில் பாடுகிறேன் என்ற நினைவில் பாடக்கூடாது. கேட்கின்றர்களும் அவர் நன்கு பாடுகின்றார் என்று நினைக்கக் கூடாது. அந்த இனிமையில் நாம் மயங்கும்பொழுது பாடியவரும், அதைக் கேட்பவரும் அந்த இறைவனே நாதமாக அமைந்துள்ளான் என்று அந்த "நாதத்தை" நினைத்து மனதில் போற்றி அந்தப் பாடலின் கருத்தைப் பாடுபவர்களும், கேட்பவர்களும் நன்கு உணர்ந்து சிந்தையில் பதிக்கவேண்டும். மாணிக்கவாசகப் பெருந்தகை சிவ புராணத்தில் இதை நன்கு எடுத்துக் கூறியுள்ளார். முதலில் 'வாழ்க வாழ்க', 'போற்றி போற்றி', 'வெல்க வெல்க' என்று கூறி ஆரம்பிக்கின்றார். முக்கியமாக "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்" என்று அதிலுள்ள தத்துவக்கருத்தை ஆத்ம சிந்தனையுடன் உணர்ந்து படிக்கவேண்டும் என்பதை நன்கு எடுத்து விளக்குகிறார். இது தமிழில் நாம் கூறும் எடுக்கும் கருத்து மட்டுமல்ல. அதிலுள்ள உண்மைப்பொருளின் விளக்கத்தை நாம் அறியவேண்டும். செயற்படவேண்டும். உதாரணமாக "இராமலிங்க சுவாமிகள்" பாடிய பாடலின் ஒரு வசனத்தின் கருத்தை நாம் சிந்திப்போம். "உள்ளொன்று வைத்து புறமொன்று கூறுவார் உறவு கலவாமை வேண்டும்" என்றார். சாதாரணமாக படித்த மக்கள் கூறுவது "மனதில் ஒரு எண்ணத்தை வைத்துக்கொண்டு வாயால் வெளியில் பொய்யொன்றைக் கூறுபவர்களின் சேர்க்கை கூடாது" என்பதாகும். அவர்கள் "பொய்" பேசுகிறவர்கள். உண்மையை மறைப்பவர்கள் என்பது விளங்குகின்றது. அப்படியானவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டவர்கள். அவர்களின் உறவு கூடாது என்று நாம் பொதுவில் விளங்குகின்றோம். இந்தக் கருத்தை தற்போது "ஆத்மஞானி" கூறிய நிலையில் சற்று சிந்திப்போம்; உண்மைக் கருத்தை பகுத்து அறிவோம். "உள்" என்று இங்கு குறிப்பிடப்பட்டது எமது "உள்ளத்தை" இங்கு உணர்வாக, உண்மைப்பொருளாக விளங்குபவன் இறைவன். ஆகவே அந்த இறைவனை உள்ளத்தில் வைத்துக்கொண்டு "புறமாகிய" இந்த உடல், மனம் புலனறிவால் ஆத்ம சிந்தனையுடனான பகுத்தறிவை விட்டு கதைப்பவர்களின் உறவு ஒருபோதும் கூடாது. (வேண்டாம்) அதைத் தவிர்க்க வேண்டும் என்றார். இப்பொழுது எப்படி விளங்குவது நல்லது? நீங்களே சிந்தியுங்கள். இதுவே தத்துவத்தை விளங்கி பகுத்து அறிந்து விளக்குவதற்கும், சாதாரணமாக தத்துவத்தை விளங்காது பார்ப்பதற்கும் உள்ள வித்தியாசம் எதையும், எப்பொழுதும், எவர் கூறியபோதும் ஆன்மாவை சிந்தித்து அக்கருத்தை அறிய எமது பகுத்தறிவைப் பாவிக்க வேண்டும். இப்படி சிந்திக்க உண்மைப் பொருளை சிந்திக்க பிறவிகள் குறையும்.

அறுபத்து மூன்று நாயன்மார்களும் ஆலயங்களுக்கு பூ பறித்து மாலை கட்டிக் கொடுத்தார்கள். ஆலயங்களை இலட்சக் கணக்கான தேவாரங்களினால் பாடிப் புகழ்ந்தார்கள். அடியார்கள் எதையும் எதிர்பார்க்காதவர்கள். அவர்கள் எடுத்துக்கூறுவது இந்த உலக மக்களுக்கு மிகமுக்கியம் என்பதால் அவர்கள் உடலைப் பாதுகாப்பது மிகமுக்கிய சேவையாகும் என்பதை மக்களுக்கு எடுத்து தமது செயலால் காட்டினார்கள். ஆன்மீக சேவை மிக முக்கியம். இறை சேவையை ஆதரிக்கவேண்டும். போற்றவேண்டும். சிவ ஆன்மீக அடியார்களை எப்போதும் குறைவின்றி நிறைவாக வைத்து அவர்களின் ஞானஒளி எங்கும் பரவச் செய்வதே உலகில் முதல் சேவையாகும். அடியார்கள் ஆலயங்கள் தோறும் சென்று தமது சேவையை மக்கள் தங்கள் ஆத்மாவை உணர தங்களால் முடிந்தவரை செய்தார்கள். இந்த ஞானிகள் இல்லாவிட்டால் இந்த விளங்கமுடியாத தத்துவத்தை எப்படி மக்கள் உணர்வது? கும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசையில் விநாயகர் கும்பத்தை பெரிதாக நடுவில் வைத்து சிரசில் காவி மக்களுக்கு "ஓம்" என்ற பிரணவப் பொருளே இறைவன், அதே இப்பிரபஞ்சம், அந்தக் கருத்துப்பொருளே "ஆக்கம், அளவு, இறுதி" இல்லாத பிரபஞ்சப் பொருட்களாக நிற்கின்றது என்று எடுத்துக்காட்டினார்கள். மனித சிரசே இறை தளம் என்பதை ஆலயம் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

இந்த விநாயகர் கும்பத்தை சுற்றி எட்டு திசைகளாக அமைந்த அட்டதிக்கு பாலகருக்காக அந்த சக்திகளுக்காக அந்த பாதுகாப்பு நிலைகளுக்காக எட்டு கும்பங்களை வைத்து பூசிக்கின்றோம். பத்தாவது கும்பம் ஏகமானது. இந்த ஒரு கும்பம் "ஏகன் இறைவன் அவன் அனேகன்" என்பதை காட்டுகின்றது. இறைவன் ஒருவன்தான் அவன் அனேகனாக, பிரபஞ்சமாக, பிரபஞ்சப் பொருட்களாக நமக்கு காட்சி தருகின்றான். ஆகவே இறைவனை "வாழ்க" என்று வாழ்த்த இந்த பிரபஞ்சபொருட்கள் எல்லா-வற்றையும் வாழ்த்துகிறோம். இதை நாம் நம் அறிவில் கொள்ள வேண்டும். ஆலயங்களில் முக்கிய பொருளாக "தேங்காய்" பாவிக்கப்படுகின்றது. ஏன் தேங்காயை கூடுதலாகப் பாவிக்-கிறார்கள்? ஏன் சிதறு தேங்காயாக அடிக்கிறார்கள்? பூசையின் போதும், மகிழ்ச்சி நிகழ்ச்சிகளிலும் ஏன் பாதியாக உடைக்-கின்றார்கள்? சம்பிரதாயம் என்ற முறையில்தான் மக்கள் பின்பற்றுகின்றார்கள். விளங்கியவர்கள் குறைவாகவே தெரிகின்றது. தேங்காய் பொச்சால் மூடப்பட்டிருக்கின்றது. உள்ளே உள்ள வெள்ளைநிறமான உள்உடன் இளநீர் இரண்டுமே வெளியில் தெரிவதில்லை. வெள்ளை உள்உடன் "ஆன்மா" என்று அதன் பரிசுத்தமான வெண்மையால் நாம் உணரவேண்டும். மூடி இறுக்கி அமைந்த நார்த்தன்மையான பொச்சு எமது "வாசனாஸ்" எமது வினைப் பயன்கள். இவை நார்களைப்போல் இறுக்கி ஆன்மாவை உடல் நிலையில் சூழ்ந்திருப்பதை "பொச்சு" காட்டுகின்றது. இதை உரித்து சிறுமுடிபோன்ற பொச்சுடன் ஆலயத்தில் பாவிக்கிறோம்? இந்த முடியில்லாமல் ஆலயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய் பாவிக்கப்படுவதில்லை. ஏன்? இந்த சிறுமுடிப் பொச்சு எமது வினைப்பயன்களை எப்படி நீக்கினாலும் எம்மை சிறிது பீடித்திருக்கும், முற்றாக அதனை நீக்கமுடியாது என்பதைக் காட்டுகின்றது. தேங்காயின் வெள்ளை உள் உடனை கடுமையாக சிரட்டை மூடி இருக்கின்றது. இந்த சிரட்டைதான் எமது இறுக்கமான "நான்" என்ற உடல், மனம் புலனறிவு "ஆணவம்" எமது ஆன்மாவைச் சுற்றிஅப்பி இறுக்கமாக "ஆணவம்" பிடித்திருப்பதை இந்த சிரட்டை அமைப்பு காட்டுகிறது. "ஆணவத்தை" போக்க அதை நாம் சிதற அடிக்க வேண்டும். சிதறடிக்கும்பொழுது எப்படி இளநீர் சிந்தி வெண்மை வெளியில் தெரிகிறதோ, அப்படி ஆணவம் சிதறடிக்கப்பட்டதும் உள்ளத்து வெண்மை அந்த ஆன்மாவின் புனிதத்தன்மை வெளியில் தெரியும். எமது உள்ளத்து வெண்மையை நாம் வெளிப்படுத்த வேண்டும். இதுவே வாழ்வின் குறிக்கோள் என "சிதறு தேங்காய்" உடைத்தல் நமக்கு எடுத்து விளக்குகின்றது. திருவருள் அமுதாகிய இளநீர் எமது விரிவடைந்த உணர்வுகள்.

இந்த சிந்திய இளநீர் எமது "உள-நீர்; உள்ளத்து அமுத நீரானது உணர்வு அலைகள். இந்த உணர்வு அலைகள்தான் "இளநீர்" அன்பு ஊற்று. பன்மை நிலைகளை தன் ஆத்மாவே என்று உணரும் அலைகள். இந்த இறைநிலைகள்தான் "சடப் பொருளுக்கும்" மனிதனுக்கும் உள்ள வித்தியாசம். ஆலயத்தில் தேங்காய் இரண்டு பாதியாக உடைக்கப்படுகின்றது. பின் பொச்சை உரித்து தட்டத்தில் ஒரு பாதியை வைத்து விபூதி, சந்தனம், குங்குமம் முதலிய பிரசாதங்களுடன் வழங்கப்படுகின்றது. திருமணம் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் பாதியாகவே தேங்காயை உடைக்கின்றார்கள். இரண்டு பாதியாக உடைத்தாலும் உள் உடனான வெண்மை தெரிகின்றது. இந்த உள்ளத்து வெண்மை வெளிக்காட்டியதால் சிறிது நிலைத்திருந்த வினைப்பயனும் நீங்குகின்றது. தேங்காய் பொச்சு முற்றாக தேங்காயில் இருந்து நீக்கப்படுகின்றது. பாதியாக உடைத்தல் அந்த ஆன்மா இறைவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று "சிவ-சக்தி" நிலையைக் காட்டுவதற்காக என்பது விளங்குகின்றது. இதனால் ஒரு பாதி ஆலயத்திற்கு - இறைவனுக்குச் சொந்தம். ஒரு பாதியை மட்டும்தான் மக்கள் எடுத்துச் செல்கிறார்கள். உலக பொருளாதாரநிலையில் ஆலய வளர்ச்சிக்காக இறைவனுக்கு அர்ப்பணித்த "தேங்காய்ப் பாதி" உபயோகிக்கப் படுகின்றது. இவற்றை நாம் இறை சமர்ப்பணமாக ஆத்ம சிந்தனையில் சிந்திக்கவேண்டும் என்பது தெளிவு. சிவத்தின் இடப்பாதி சக்தி. அந்த இறைசக்தி இரண்டாக சகுணபிரம்ம (தடத்த நிலையில்) காட்டப்படுவதால் இந்த "ஆன்மாவைக்" காட்டும் தேங்காய் இரு பாதியாக உடைக்கப்பட்டு மேற்கூறியபடி ஒரு "பாதி" ஆலயத்திற்கு சொந்தமாக்கப்படுகின்றது. ஆன்மா "இறைபாதி" என்பதே அர்த்தம். ஆன்மா அறியாமை நீங்கியதும் அந்த முழுமையே பரப்பிரம்ம சிவம்.

திருவிழாக்கள் ஊரில் உள்ள மக்களை எல்லாம் இறை செயலுக்கு ஒன்று திரட்டுகின்றன. எங்கு வேலை செய்தாலும் விடுமுறையில் குடும்பத்துடன் மக்கள் ஊருக்கு வந்துவிடுவார்கள். அந்த ஊரே திருவிழா முடியும்வரை புனிதமாகிவிடும். விரதங்களும் அநேகமானோர் பிடிப்பார்கள். விரதம் என்பது என்ன? மக்கள் அநேகமாக காலையில் தோய்ந்து, எதுவும் உண்ணாமல் ஆலயம் செல்வார்கள். அனேகமாக குடும்பத்துடன் செல்வார்கள். அங்கு இறைவனைப் பூசித்து உணவைப் பற்றிய எந்த சிந்தனையும் இல்லாமல் திருவிழா நிகழ்ச்சிகளில் கலந்து அன்று காலை திருவிழா முடிந்தபின் வீட்டில் வந்து இறைவனை சிந்தித்து எல்லோரும் இருந்து உணவு அருந்துவார்கள்.

விரதம் உணவின் சிந்தனையை குறைக்கின்றது. தின் பண்டங்களில் உள்ள அவாஞ்சை நிச்சயம் குறையும். இருக்கும் உணவோடு திருப்தியடைய செய்கின்றது. ருசியைக் கட்டுப்படுத்தி, அதற்காக அலைந்து அல்லல்படும் நிலையை நீக்கும். ருசி நாக்கு சம்பந்தமானது மட்டும்தான். நாக்கைத் தாண்டி தொண்டையால் உணவுக்குழாய்க்குள் சென்றால் எல்லா உணவும் அதன் சத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்து எமக்கு சக்தியளிக்கின்றது. ஆகவே நாம் நாக்கு ருசிக்காக பொரிக்கிறோம், அதன் உயிர்சத்துகளை விதம்விதமாகச் சமைத்து இல்லாமல் செய்கிறோம். பல இன்னல்களை இதனால் வாழ்வில் அனுபவிக்கிறோம். சுருங்கச் சொன்னால் நாக்கு ருசிக்காகவே வாழ்கிறோம். இது தேவைதானா? ஆகவே ஆலய விரதங்கள் உணவுக்காகவே வாழும் நிலையை அகற்றி வாழ்வதற்காக அவசியமானதை உண்ணச் செய்கின்றது.மேலும் விரதங்கள் உணவைத் தேவைக்கதிகமாக உண்ணாமல் உடலை சுகாதாரநிலையில் வைக்கின்றது. ஒருவர் பசித்தே அளவாய் சாப்பிடவேண்டும். பசியில்லாத நிலையிலும் உண்ண விரும்புவதை "நான் இன்று விரதம்" என்ற சிந்தனையில் தடுக்க வேண்டும் என்பதை விரதம் உணர்த்துகின்றது. மேலும் விரதத்தை அனுசரிக்கும் நேரத்தில் இறை சிந்தனையை மட்டும் கூடிய வகையில் ஏற்படுத்துகின்றது. விரதகாரர் ஆலயம் செல்வார். அல்லது இறைவனையே அன்று கூடுதலாக போற்றிப் பாடுவார். அந்தப் பசியிலும் இறைவனைச் சிந்திக்க விரதங்கள் பழக்குகின்றன. இறை சிந்தனை உடல் பசியை மறக்கச் செய்து மனதை சாந்தப்படுத்துகின்றது. கந்தசஷ்டி விரதம் ஆறு நாளும் எதுவும் சாப்பிடாமல் மிளகு தண்ணியுடன் இருக்கவும் பல மக்களைப் பழக்கியிருக்கின்றது. இந்த நிலையைச் சிந்தித்துப் பார்த்தால் இப்படி விரதம் பிடிக்கக்கூடிய மக்கள் உணவு அவாஞ்சையில் இருந்து முற்றாக நீங்கியவர்கள் என்று நன்கு விளங்குகின்றது. அவர்கள் தேவைக்கு அதிகமாக உண்பதை விரதம் தடுக்கும்.

திருவிழா முதல்நாள் கொடியேற்றத்தை முற்றாக ஏற்கனவே விளங்கினோம். அடுத்ததாக பல வாகனத் திருவிழாக்கள் நடக்கின்றன. இறை விக்கிரகம் வசந்த மண்டபத்தில் உற்சவ மூர்த்தியாக வைக்கப்பட்டு பூசைகள் கண்கொள்ளாக் காட்சியாக நடைபெறுகின்றன. இறை விக்கிரக சோடனை மிக அழகாக தங்க நகைகளாலும் பூமாலைகளாலும் செய்யப்படுகின்றன. ஏன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிச் செய்கின்றோம்? உலக அழகு சாதனங்களை எங்களுக்குப் போட்டு அலங்கரித்து உலகிற்குக் காட்டுவதிலேயே எமது நேரம் செலவாகின்றது. அந்த நிலை எம்மை வாழ்வில் தாழ்த்தும் சேவலநிலை, இதை இறைவனுக்கு அர்ப்பணம் செய்து இறைவனது அலங்காரநிலையை மட்டும் சிந்தையில் கொள்ளுங்கள் என்று எமக்கு கூறாமல் கூறுகின்றது. இதை மறந்து பலர் தம்மை நகைகளால் அலங்கரித்துச் சென்று மற்றவர்களின் புலன்களைத் தங்களில் திருப்புவது மட்டும் அல்லாமல் சிலர் நகைகளைப் பறிகொடுக்கிறார்கள். ஆகவே இங்கு ஆலயம் விளக்குவது முக்கியமாக என்னவென்றால் பலர் தங்கள் ஆசையின் நிமித்தம் அலங்கரித்து வந்தாலும் அவரவர் நிலையில் அவர்களை விட்டுவிட வேண்டும். எதையும் ஒப்பிடக்கூடாது. அது நன்றாக இருக்கிறது. இது கூடாது என்ற சிந்தனையே எழக்கூடாது. என்று வலியுறுத்திக் காட்டுகின்றது. மக்களை உற்சவமூர்த்தி தன்னுடைய அலங்கார நிலையில் அங்குள்ள எல்லோரையும் விடக் கவர்கிறார். அவர் அணிந்திருக்கும் நகைகளோ பூக்களோ அங்கு ஆலயம் வந்த ஒருவரும் அணியவில்லை. அவரைவிட கவரக்கூடியவர்கள் அங்கு எவரும் இல்லை. இதனால் மக்கள் இந்த பொன், பொருள் எல்லாம் இறைவன் எமக்கு அளித்ததே. ஆகவே இவை எல்லாம் இறைவனுக்கே சமர்ப்பணம் என்று சிந்திக்க வைக்கின்றது. ஆலயங்கள் உற்சவமூர்த்தியை இப்படி அலங்கரிப்பது இறை நினைப்பை விட மற்றவை எல்லாம் குறைந்ததும் போலியும் களவு போகக் கூடியதும் என்று உணர்த்தி பொருள் ஆசைகளை இறைவனிடம் சமர்ப்பிக்க எம்மை வலியுறுத்துகிறது. அலங்கார மூர்த்தியை ஒவ்வொரு வாகனங்களில் வைத்து தினமும் வீதியைச் சுற்றி வலமாக வருகிறார்கள். இந்த மரத்தில் கடைந்த வாகனங்கள் கண்ணைக் கவரும் சிற்பங்கள். மக்கள் இந்த வாகனத் திருவிழாக் களில் ஈடுபட்டு பேரானந்தம் அடைகின்றார்கள். எல்லாத் துன்பங்களையும் மறந்து குடும்பத்துடன் திருவிழா நேரத்தில் எல்லோரும் ஆனந்தமாக இருப்பதை நாம் காண்கிறோம். இந்த நேரத்தில் துன்பப்படுகின்றார்கள் என்று அங்கு கூறுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமில்லை என்றே நாம் கருதலாம். இந்த உலகத்தில் பிரச்சனைகளை மறந்து மக்களை ஆனந்தத்தில் வைத்திருக்கும் நாட்கள் இந்தத் திருவிழா நாட்களே. இவை எல்லாம் மூட நம்பிக்கை என்று நினைப்பவர்கள் மக்கள் நிலையையும் மேற்கூறிய கருத்துக்களையும் சிந்திக்காதவர்கள்.

ஆகவே நாம் புலனறிவில் எதையும் குறைகூறக்கூடாது. எல்லாம் ஆன்ம தத்துவம் நிறைந்த நிகழ்ச்சிகளே ஆலய நிகழ்ச்சிகள். வாகனத் திருவிழாக்கள் பஞ்சகிருத்தியங்களில் ஒன்றான "காத்தலை" குறிக்கின்றது. இந்த பிரபஞ்சத்தைப் படைத்த நிலையில் தனது அசைவு (Dynamic Energy) சக்தியினால் எல்லாப் படைப்புகளையும் நிலைநிறுத்தி பார்க்கின்றது. வாகனம் "அசைவை" குறிக்கின்றது. "ஆதிசக்தியே" வீதிவலம் வருகிறாள். ஆதிபராசக்தியே வெளி எங்கும் நிறைந்து தனது அசைவு நிலையால் காக்கின்றாள். விஞ்ஞான முறையில் அணுகும்பொழுது இந்த சூரியமண்டலத்தில் சந்திரன் பூமி இரண்டும் தன்னைத் தானே சுற்றி, சூரியனையும் சுற்றுவதாகக் கூறப்படுகின்றது. இந்தப் பெரும் வெளியில் எல்லா மண்டலங்களும் அந்தரத்தில் தொங்குவதாக நாம் காண்கிறோம். இவை எப்படி அந்தரத்தில் நிற்கின்றன? ஒவ்வொரு மண்டலங்களின் புவியீர்ப்பு சக்தியும் ஒன்றையொன்று கவர்ந்து இழுப்பதனால் அவை விழாது சுற்றிக் கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த புவியீர்ப்பு சக்தியும் அசையும் நிலையுமே எல்லா அமைப்புக்களையும் காக்கின்றன. அவற்றில் அமைந்த பொருட்களில் மாற்றநிலையையும் ஏற்படுத்துகின்றன. நாம் ஆன்ம சக்தியான பகுத்தறிவால் விளங்கும்பொழுது யார் எல்லாவற்றையும் சுழற்றியவன்? என்ற கேள்வியும் இந்தப் புவியீர்ப்பு சக்தி எங்கிருந்து மண்டலங்களுக்குள் வெவ்வேறு வேகத்தில் அமைந்தது என்ற கேள்வியும் பிறக்கின்றன. நீங்கள் விஞ்ஞானத்திடம் கேளுங்கள். பதில் கிடைத்தால் விளங்குங்கள். பதில் கிடைக்காத நிலையில் எங்கும் நிறைந்து அணுசக்தியாக அமைந்து எல்லாவற்றையும் ஊடுருவி எல்லாவற்றிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திவாரமாக அமைந்து ஒரு வலை அமைப்பில் எல்லாப் படைப்புகளுக்கும் தொடர்பை ஏற்படுத்தி பரிபூரண ஆனந்தமாக நிற்கும் பரப்பிரம்ம சிவசக்தி நிலையை விளங்கி அதையே தியானமாக எச்செயலிலும் வாழ்வில் கொள்ளுங்கள். இந்த சக்தியே எமது அசைவு நிலை. உடல், மனம், புலனறிவுக்கு ஒளியூட்டும் ஆன்மா என்று நினைத்து அந்த ஆத்மசக்தியை எல்லா உயிரினங்களிலும், உயிரற்றவையிலும் இருக்கிறது என்று பேரன்பைச் செலுத்துவோம். இந்த வித்தியாசம் அற்ற அன்பே வாழ்வில் முக்கியம். விஞ்ஞானம் "குவான்ரம் தியரி" (Quantum Theory) மூலம் எல்லா பிரபஞ்ச நிலைக்கும் ஒரு வலை அமைப்புத் தொடர்பு இருப்பதை நிரூபிக்கின்றது.

அடுத்ததாக மிக விசேடமான பிரபல்யமான தேர்த் திருவிழாவை விளக்குவோம். இது இறைவனின் "பஞ்சகிருத்தியங் களில்" ஒன்றான "அழித்தலைக்" குறிக்கின்றது. "அழித்தல்" என்பது ஆக்கிய பொருட்களை வினைக்கேற்ப மாற்றியமைத்தல். இந்த அசைவுநிலையிலுள்ள பிரபஞ்ச சக்தியால் உடல் மற்றும் தோன்றிய பொருள்கள் காலத்தால் மூப்பேறி இறந்து மண்ணுடன் ஒன்று கலக்கின்றன. எந்த மனிதசக்தியாலும் அது பெற்ற விஞ்ஞான அறிவினாலும் மூப்பையோ, இறப்பையோ தடுக்க முடியவில்லை. அதற்குரிய மருந்தும் இல்லை. ஏன் இப்படி நடக்கின்றது? உடலை தாழ்ப்பதாலோ, எரிப்பதாலோ மனம் எரிவதில்லை. நுண்ணிய நிலையில் பதிந்த நினைவலைகள் மீண்டும் அந்தப் பதவிற்கேற்ப உடலமைப்பை ஏற்படுத்துகின்றன. இந்த உடலமைப்புகள் அழிந்துதான் புது அமைப்புகள் ஏற்பட வேண்டும். ஆகவே "அழித்தல்" தொழில் மிக முக்கியமானது. சிவனே இதைச் செய்கிறார். புது உடல் எடுக்கும் தன்மை ஒருவர் தனது ஆடைகளை மாற்றி வேறு உடைகளை அணிதல் போன்றது. இப்படி புது உடல்கள் ஆன்மாவிற்கு பல பிறவிகளில் ஏற்படா விட்டால் "வினைப்பயன்" தீராது. அனுபவம் உடல் மூலம் பெற்றால்தான் வினைப்பயன் தீரும் அதைத் தீர்ப்பதற்கு வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கம் இல்லை. மறுபிறவி , பல பிறவிகள் என்பது இல்லை அது நிரூபிக்க முடியாது என்பவர்கள் பின்வருமாறு சிந்தித்து உணர வேண்டும். ஏன் பிறவிச்செவிடு, குருடு வாழ்வில் ஏற்படுகின்றன? ஏன் இரண்டு கைகளும், இரண்டு கால்களும் இல்லாமலே குழந்தைகள் பிறக்கின்றன? விஞ்ஞானம் அது "தற்செயலாக" நிறமூர்த்தங்களின் குறைபாட்டினால் (RNA, DNA, Deficiency) ஏற்படுகின்றது என்று எடுத்துக்கூறுகின்றது. அதே விஞ்ஞானம் "ஆவர்த்தன அட்டவணை" (Periodic Table) மூலமும் "பரிணாம வளர்ச்சி" (Evolution) மூலமும் தற்செயலாக இங்கு எதுவும் அமைந்த நிலை இல்லை. மூலகங்கள் அணுவெண் அதிகரித்துச் செல்லும் வகையில் ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தும்பொழுது ஆவர்த்தனமுறையில் எண்ம நிலையையும், நிரல் வழியே ஏழு நிலைகளையும் கொண்டதாக ஆவர்த்தன அட்டவணையில் பார்க்கிறோம். "பரிணாம வளர்ச்சியில்" ஒரு கல அங்கியிலிருந்து பல கல அங்கியில் பாலூட்டிகள் வரை விஞ்ஞானம் மிருகங்களை அணிவகுத்திருக்கின்றது. இப்படியான ஒழுங்குமுறையை பிரபஞ்ச பொருட்களில் கண்ட விஞ்ஞானம் எப்படி தற்செயலாக உடற் குறைபாடுகள் நடந்ததாக கூறமுடியும். எல்லாமே இப்பிரபஞ்சத்தில் மிகச் சிறப்பாகத் திட்டமிடப்பட்டு ஒழுங்கான கட்டுப்பாட்டு முறையில் இயங்குகின்றன.

ஆகவே எல்லாம் ஒரு காரணத்தினாலேயே நடைபெறுகிறது என்பது நன்கு விளங்குகின்றது. அந்த பரபிரம்ம சக்தியே அந்தக் காரணத்திற்காக விளைவுகளை அனுபவம் மூலம் கொடுத்து தன்னை அத்வைத நிலையில் ஆத்ம உணர்வில் காணச்சொல்கிறது. அதுவரை காரண அசைவு நிலையில் மனம் சகல செயல்களையும் பதித்து பல பிறவிகளில் அனுபவம் உடல்மூலம் பெறச் செய்கின்றது. ஆகவே பஞ்சகிருத்தியங்களில் மிக முக்கியமாக அழித்தல் ஏன் நடைபெறுகின்றது என்று ஆலய தேர்த்திருவிழா நன்கு நமக்கு வாழ்வில் எடுத்துக்காட்டுகின்றது. ஆகவே சுயநலத்தைத் தவிர்த்து பிறர் நலனுக்கு ஆன்மீக நிலையில் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றே என்று நாம் பாடுபடவேண்டும். பேரன்பு செலுத்த வேண்டும். "நான்" என்ற அகங்காரம் ஒழியவேண்டும். வெறுப்பு, பன்மை நிலை, வித்தியாசங்கள் அறவே எம்மை விட்டு நீங்க வேண்டும். இவற்றிற்கே எல்லா செய்கைகளிலும் நாம் முதலில் பாடுபட வேண்டும். தேரில் வரும் உற்சவமுர்த்தி பல பஞ்சாரத்தி பூசைகளுடன் வெளிவீதி வழியாக வடக்கயிற்றினால் இழுத்துச் செல்லப்படுகிறார். ஐந்து குதிரைகள் அச்சுத்தேரில் அமைந்து உள்ளன. இந்தத் தேர் எமது உடலே. அதில் அமைந்த ஐந்து குதிரை-களும் எமது புலன்களாகிய ஐந்து ஞானேந்திரியங்களையும் அதன் தன்மாத்திரைகளான ஐந்து உணர்வுகளையும், கர்மங்களைச் செய்கின்ற ஐந்து கர்மேந்திரியங்களையும் குறிக்கின்றன. இவைகள் எல்லாம் கட்டுப்பாட்டில் உள்ளன என்பதை கடிவாளங்கள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. எமது கண் ஒரு அளவிற்குத்தான் பார்க்கும். எமது காது ஒரு அளவிற்குத்தான் கேட்கும். எமது புலனறிவு ஒரு அளவிற்குத்தான் சிந்திக்கும். முழுமையை அது ஒருபொழுதும் உணராது. ஆகையால் ஆன்மா இப்படியான கட்டுப்பாட்டில் மனதில் இருக்கின்றன என்பதைத் தேர் எடுத்துக்காட்டுகிறது. இந்தக் கட்டுப்பாடுகள் எதனால் ஏற்படுகின்றன? எமது சிந்தனைகளே எம்மை உருவாக்குகின்றன. இந்த சிந்தனைகள் ஆசைகளாக இறை சிந்தையைத் தவிர்த்து ஏற்படும்போது மனதில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துகின்றன. இவற்றிற்கெல்லாம் ஆதாரமான இறைவன்தான் நிமித்த காரணம். ஆகவே அந்த இறைவன் இந்த உடலான தேரில் ஆன்மாவாக அமர்ந்து உடல்களை பல பிறவிகளில் அழித்து மன அமைப்பை இறைவனாக்கி விடுதலை பெற விரும்புகிறார். மக்களாகிய உடல் அமைப்புக்கொண்ட நாம் வாழ்வான வடக்கயிற்றினால் எமது வாழ்க்கையை எங்கோ இழுத்துச் செல்கின்றோம். உண்மை விளங்கினால் ஆத்ம வெளிச்சத்தில் தேராகிய உடல் நேரிய பாதையில் இருப்புக்கு வந்துவிடும். இப்படி இருப்பிற்கு வந்து விடுதலை பெற்ற ஆன்மா இறைவனாகிய நிலையில் அதற்கு பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சனைகளைச் செய்கின்றோம். இதுவே தேரில் வைத்து அர்ச்சனைகளைச் செய்து உற்சவமூர்த்தியை ஆலயத்திற்கு எடுத்துச் செல்வதாகும். உற்சவ மூர்த்தியை இறைவனாக வணங்கும் பொழுது இந்த ஆன்மாவே இறைவன்; அறியாமை இருளை அகற்ற, உண்மை விளங்கும்.

அடுத்ததாக தீர்த்தத்திருவிழா நடக்கிறது. காலையில் நடக்கும் இத்திருவிழா இறைவனின் பஞ்சகிருத்தியத் தொழில்களில் "அருளலை" குறிக்கின்றது. பாசத்தை நீக்கி ஞானத்தில் திகழ வைத்தல் இதன் கருத்தாகும். ஆன்மா தேர்த்திருவிழா காட்டியபடி உடல் பாசத்தை அழித்ததும் ஞானத்தைக் கொடுத்து இறை நிலையில் அமிழ்த்துதலை தீர்த்தத் திருவிழா காட்டுகிறது. இத்திருவிழாவில் உற்சவமூர்த்தியை அலங்கரித்து கேணிக் கரைக்கு கொண்டு வருவார்கள். முன்னால் சண்டேஸ்வரருக்குரிய வேலாயுதத்தை தீர்த்தமாடச் செய்து பூசைகள் முடித்து ஆலயத்திற்கு திருப்பி உற்சவமூர்த்தியுடன் கொண்டுசெல்வார்கள். தீர்த்தம் முடிந்ததும் மக்கள் அந்தத் திருவருள் நிறைந்த கேணியில் இறங்கி, முழுகி நீராடுவார்கள். இங்கு தீர்த்தம் இறைவனின் திருவருள் சக்தி பெருக்கு. விக்கிரகம் கேணியில் அமிழ்த்திய நிலையில் அந்தத் தீர்த்தம் திருவருள் நிறைந்ததாகின்றது. இதில் எமது உடலை அமிழ்த்தி முழுகுதல் பாசத்தினால் ஏற்பட்ட உடலை அந்தத் திருவருள் பெருக்காகிய தீர்த்தத்தில் அமிழ்த்தியதும் பாசம் நீங்கிவிடும். பாசமாகிய அந்த அழுக்கு நீங்கி தூய்மை ஏற்பட அங்கே ஞானம் மிளிரும். எமது மனம் திருவருளாகிய ஆன்மாவில் லயம் ஆனதும் அங்கு பாசத்தை உடைய புலனறிவுகள் நீங்கி பகுத்தறிவு ஏற்பட்டு எது உண்மை என்று பகுத்து விளங்கி அதில் ஞானம் ஏற்பட்டு அங்கு தரித்து விடும். இதுவே நாம் உணரவேண்டிய தீர்த்தத் திருவிழாவாகும். இது இறைவிளக்கமாகும். மாணிக்கப் பெருந்தகை "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்று திருவருள் சக்தியில் இறைவன் எங்களை அமிழ்த்துதலைக் காட்டி அந்த தீர்த்தமாடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில்தான் எங்களால் அவரை வணங்க முடியும். நினைக்க முடியும் என்று மேலும் தெளிவுபட விளக்குகின்றார்.

"மௌன உற்சவம்" அன்று மாலையில் நடைபெறுகின்றது. மௌனம் என்றால் அமைதி. இறைவனாகிய ஆன்மா காலம், வெளியைக் கடந்து கடவுளாகின்றது. எல்லாவற்றையும் கடந்தவர் கடவுள். அதீத நிலை மௌனம். இங்கு எதுவும் இல்லை. இந்த நிலையில் எதுவும் கூறமுடியாது என்பதை "நிர்விகல்ப சமாதி" விளக்கம் முன்பு எடுத்து எமக்குக் காட்டியது. மாணிக்கப் பெருந்தகை திருப்படை ஆட்சியில் "ஒன்றினோடு ஒன்றும் ஓர் ஐந்தினோடு ஐந்தும் உயிர்ப்பதும் ஆகாதே" என்றார். "ஒன்றினோடு ஒன்றும் ஓர் ஐந்தினோடு ஐந்தும்" என்பது இவ்வுலகக் கணக்குகள். ஆனால் அதீதத்தில் நிர்விகற்ப சமாதியில் இரண்டறக் கலந்த காலத்திற்கும், வெளிக்கும் அப்பாற்பட்ட மௌனத்தில் இவைகள் "உயிர்ப்பதும் ஆகாதே" உயிர் பெற்றதாகாது என்று விளக்கினார். அங்கு நிறைகுடமான நிலை எந்த குழப்பமும் இல்லை என்றார். பஞ்சகிருத்தியத்தில் இது "மீட்டல்" ஆகும்.

அடுத்ததாக திருவிழாக்கள் எல்லாம் ஆலயத்தில் முடிந்தபின், இறுதியாக "திருக்கல்யாணம்" நடக்கின்றது. இது இரவு நெடுநேரம் ஆலயத்தில் நடைபெறும். திருக்கல்யாணம் என்பது "பதி"யாகிய சிவனுடன் "பசு"வாகிய சக்தி ஆன்மா இணைந்து அத்வைதம் ஆகுதல். இது சகுன பிரமம். பிரபஞ்சநிலையில் மக்கள் சிவசக்தி நிலையை விளங்கி அந்த ஒன்றாம் நிலையை அடைய சிந்தனையை வளர்த்தலாகும். பாசத்தை விடுத்து ஞானத்தை பெற்ற ஆன்மா "அநாகதம்" இருதய மட்டம் "விசுத்தி" தொண்டை மட்டம் நீள் வளைய மையவிளையப்பகுதி) "ஆஞ்ஞை" (நெற்றி, புருவ மட்டம்) "சகஸ்ரதளம்" (சிரசு மட்டம்) என்ற நிலையில் மேல் எழுந்து அத்வைதமாகின்றது. இப்பிரபஞ்ச இரண்டு என்ற சிவசக்தி நிலையிலிருந்து இரண்டறக் கலக்கின்றது. "மாண்டூக்கிய"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபநிடதம் "தத்வம் அசி" என்று கூறுகின்றது. இந்த வேத வாக்கியத்தின் அர்த்தம் "அதுவே இது" என்பதாகும். "அந்த இறைவனே இந்த ஆன்மா" என்பதை இதனால் நாம் உணர வேண்டும். ஆலயம் திருக்கல்யாண நிகழ்ச்சிகள் மூலம் இந்த அத்வைத அமைப்பை மக்களுக்கு காட்டுகிறது. இந்த ஒன்றான நிலையில் அதுவும் இதுவும் இல்லை. எல்லாம் ஒன்றுதான். அது மௌனம், அங்கு பிரபஞ்ச நடவடிக்கை எதுவும் இல்லை. ஆன்மா இந்த நிலைக்கு மீட்கப்படுவதை நாம் "மௌன உற்சவத்தில்" ஏற்கனவே கண்டோம். நாம் "சத்-சித்-ஆனந்த" நிலைக்கு உயர முடியும். பிறவி அற்ற நிலைக்கு உயர எத்தனை பிறவி என சிந்திக்காமல் எமது ஆத்ம சிந்தனையை இன்றே உயர்த்தப் பாடுபடுவோம். (இதுவே சிதம்பர ரகசியம்) திருவிழாக்கள் எம்மை ஆனந்தத்தில் ஆழ்த்தி எம்மை யார் என்று உணரவைத்து அந்த இறை அமைப்பை புலனறிவில் பார்க்கக்கூடிய நிலையில், கேட்கக்கூடிய அமைப்பில் உணர்த்துகின்றன. மக்கள் புலனறிவு சீர்திருத்த சைவநெறியை வளர்த்த நாயன்மார்கள் ஆயிரக் கணக்கான பாடல்களை இறைவனைப் போற்றி வாழ்த்தி, விளக்கி நமக்கு தந்திருக்கிறார்கள். இவை பன்னிரண்டு திருமுறைகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. முதல் ஏழு திருமுறைகளும் திருஞான சம்பந்தர் (1 இலிருந்து 3 வரை) திருநாவுக்கரசருடையது. (4 இலிருந்து 6 வரை) 7ஆம் திருமுறை சுந்தரருடையது ஆகும். இவைகள் எல்லாம் "தேவாரங்கள்" அடங்கன் முறையாகும். எட்டாம் திருமுறை மாணிக்கவாசகரது "திருவாசகம், திருக்கோவையார்" ஆகும். ஒன்பதாம் திருமுறை திருமளிகைத் தேவர் முதல் சேதிராயர் வரை ஒன்பது பேர் எழுதிய "திருப்பல்லாண்டாகும்". பத்தாம் திருமுறை திருமூலரின் திருமந்திரமாகும். பதினோராம் திருமுறை திருவால உடையார் தொடக்கம் நம்பியாண்டார்நம்பி வரை பன்னிருவர் எழுதிய நாற்பது பிரபந்தங்கள் அடங்கும். பன்னிரெண்டாம் திருமுறை சேக்கிழார் எழுதிய பெரிய புராணமாகும். வேறு, அருணகிரிநாதர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமலிங்க சுவாமியின் பாடல்கள் போன்று உண்மையை விளக்கும் பாடல்கள் நிறைய உண்டு. இவைகளால் தேவையற்ற சிந்தனைகளை எமது மனதிலிருந்து நீக்கி இந்தப் பாடல்களை எமது மனதில் நிறைக்கவேண்டும். இவை நாயன்மார்களின் "முடிந்த முடிபாகும்" இதே சைவசிந்தாந்தமாகும். "சொல்லிய பாட்டின் தத்துவம் அறிந்து" நாம் இறைவனைப் பாடவேண்டும்.

ஆலயம் "பதி"யாகிய பரம்பொருளை "அறிவிக்காமலே அறியும் பொருளாகவும்" "பசு"வாகிய ஆன்மாவை அறிவித்தால் அறியும் பொருளாகவும் "பதி" முழு ஞானமே அதற்கு மேல் எந்த அறிவும் இல்லை. அந்த பரபிரம்ம சிவமே ஞானம் ஆகையால் அதை "அறிவிக்காமலே அறியும் பொருள்" என்று விளங்குகின்றார்கள். அதனால் "தனு" ஆகிய இவ்வுடலுக்கும் கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் போன்ற கருவிகளுக்கும் புவனமாகிய இந்த உலகம் போன்ற மண்டலங்களுக்கும், போகம் - மாயையினால் இவைகளில் தோன்றும் தோற்றங்களை அனுபவிக்கவும் இந்த ஞானமே அடிப்படையாகின்றது. அந்த ஞானத்தை ஆன்மா உணரும் நிலையில் அதைச் சார்ந்த தன்மையில் "சத்" ஆகவும், உடலை பாசத்தால் சார்ந்த தன்மையில் "அசத்ததாகவும்" இருக்கின்றது. ஆன்மாவிற்கு இதனால் "சதசத்" என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. அது இறைவனாகிய ஞானம் "அறிவித்தாலே அறியும்" என்ற நிலையை உடலில் பெறுகிறது. பாசத்திற்குக் கட்டுப்பட்டு அந்த மாயைப் பொருட்களை, உண்மைக்குப் புறம்பான நடவடிக்கைகளை நம்பி உடலில் பற்று வைக்கின்றது.

உண்மையை உணர மனிதன் தனது பகுத்தறிவை வாழ்வில் உபயோகிக்கவேண்டும். உண்மையை விளங்கும்பொழுது இப்பொருள் ஆசைகள், போகம் நீங்கும். அருவம், உருவம், அருவுருவம் என்ற பிரபஞ்ச அமைப்பை ஏற்கனவே மூலஸ்தானம் ஆகிய, புனிதத்திலும், புனிதமான (சங்ரம், சங்தூரியம்) (Sanctum,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sancturium) ஆலய அமைப்பில் விளக்கினோம். மேலும் அருவம் என்பது பரப்பிரமசிவம், அதன் சக்தி, அந்த நாதம். "விந்து" ஆகிய பிரபஞ்ச அணுநிலை என்ற அலைவரிசைகளில் புலனுக்கு எட்டாமல் எங்கும் நிறைந்து எல்லாமாக அமைந்திருக்கின்றது. இறைவன் அருவுருவமாக சதாசிவமாக, சிவலிங்கமாக, இப்பிரபஞ்சமாக இறைவன் தோற்றியும் முழுவிளக்கமும் புலனுக்கு விளங்காத நிலையில் இருக்கிறார். உருவமாக இந்த புலன்களுக்குத் தோற்றிய பிரம்மா (படைப்பு), விஷ்ணு (காத்தல்), உருத்திரன் (அழித்தல்) என்ற நிலையில் பொருள்களாகப் பிரபஞ்சமாகின்றார். சைவசித்தாந்தம் இறைவன் உயிர்களை (ஆன்மாவை) படைப்பது இல்லை அது நித்தியமானது என்கின்றது. இதன் அர்த்தம் மாயையில் அழியக்கூடிய உடல் தோற்றங்களே உண்டாகின்றது. "ஆன்மா" இறைவனே என்ற நிலையில் அது படைக்கப்படும் பொருளல்ல. அது நித்தியமான இறைவனே என்று விளங்க வேண்டும். இவ்வுலகில் நாம் "நல்வினை" "தீவினை" என்ற நிலையில் கர்மங்களைச் செய்கின்றோம். ஆணவத்தில் அடங்காது இறை சிந்தனையில் செய்வதெல்லாம் "நல்வினை" ஆகின்றன. ஆணவத்தில் அடங்கிச் செய்வதெல்லாம் தீவினையாகின்றன. ஆலயசேவையில் ஈடுபடும்போது எமது செயல்கள் சுயநலற்ற நல்வினையாகின்றது. அதற்காகவே ஆலயங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இந்தப் பிரபஞ்ச அமைப்பின் முதற்காரணம் மாயை. இதங்கு இறைவன் நிமித்த காரணமாகவும், சிவசக்தி துணைக் காரணமாகவும் இருக்கின்றார்கள். இவ்விளக்கங்கள் சகுணபிரம்ம - தடத்த நிலை உண்மைப்பொருள் விளக்கங்கள் ஆகும். நாம் இவற்றைச் சிந்திக்க எமது ஆத்மீக நிலை நிச்சயம் வளரும்.

மக்கள் பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், கற்பூரம், பூக்கள் முதலியவற்றைக் கொடுத்து ஆலயத்தில் மூர்த்திகளுக்கு அர்ச்சனை செய்கிறார்கள். இத்துடன் பணமும் கொடுக்கிறார்கள். இந்த உலகப் பொருட்களை, இச்சைகளை எமது ஆசைகளின் விளைவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நாங்கள் முற்றாகவே உங்களிடம் சமர்ப்பிக்கிறோம் என்று இப்பொருள்களை கொடுக்கும்பொழுது எமது மனம் இப்படி சிந்திக்கவேண்டும். 'எமது பெயர், நட்சத்திரம், கூறப்பட்டு அர்ச்சனை செய்யப்படுகின்றது. இது ஆத்மீக துறையில் எமது பரிபக்குவநிலையை இறைவனிடம் எடுத்துக்கூறுவதாக இன்ன பெயர் உடையவர், இன்ன நட்சத்திரத்தில் பிறந்தவர், இவ்வுலகில் பல நிலைகளில் அனுபவித்து, சகல ஆசைகளையும் இறைவனிடம் சமர்ப்பித்து, இறைநிலைக்கு தகுதி பெறுகின்றார் என்று குருக்கள் எடுத்துக் கூறுகின்றார். எமது பகுத்தறிவே குரு. அது இப்பிரபஞ்ச பொருட்கள் எல்லாம் பொய், இவை எம்மை மயக்கத்தில் வைத்து அழிவுக்கு இட்டுச்செல்கின்றன. உண்மைப்பொருளாகிய எங்கள் ஆன்மாவைப் பகுத்துணர்ந்த தன்மையில் இறைநிலைக்கு உயர உமது “திருவருளே” தேவை என்று எமது அடையாளங்களைக் கூறுகின்றோம்; அடிபணிகின்றோம். இவ்வுலகில் ஒருவருக்கு நட்சத்திரம் நிரந்தர விலாசமாக, அடையாளமாக சாத்திரத்தில் கணிக்கப்படுகின்றது. அவர் பிறந்த நேரத்தைக்கொண்டு கணிக்கப் படுகின்றது. இந்த முக்கிய நிலை அவர் எந்த நாட்டில் வசித்தாலும் இறக்கும்வரை மாறாது. உதாரணமாக “அவிட்ட” நட்சத்திரத்தில் பிறந்தவர், இறைவனுக்கு அதைக்கொண்டே அறிமுகம் செய்யப் படுகின்றார். முக்கியமாக கல்யாணங்களிலும் மற்றும் சடங்குகளிலும் நட்சத்திரம் பெயருடன் பாவிக்கப்படுகின்றது. ஆலயம் நாம அர்ச்சனையில் இதைக் குறித்துக்காட்டுகின்றது. பன்மைநிலையில் வேறு வேறாகப் பார்ப்பதற்கு வித்தியாசப் படுத்திக் கூறுவதற்கு இப்பெயர் முக்கியமாகின்றது. அதனால் ஆலயத்தில் நாமம் பாவிக்கப் படுகின்றது. “கால”, “தேச” அமைப்பில் பிறந்த நாங்கள், அந்த “நியமத்தை” பெற்று வாழும் நிலையில் “கால, தேச, நியமம்” என்ற நிலையில் இறைவனை அர்ச்சித்து, அவன் புகழ் பாடி, அவனே எல்லாம் என்ற சிந்தனையில் இறை திருவருளால் பேரன்பு பெற்று, எமது தொடக்கநிலையை - இறைநிலையை அடைகின்றோம். அர்ச்சனை பூக்களால் நடைபெறுகின்றன. இந்தப் பூக்களை சமர்ப்பித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சித்தல் எம்மை, நாம் இறைவனுக்கு அர்ப்பணிப்பது போன்று அமையவேண்டும். எம்முடைய சிந்தனையை அப்படி ஆக்க வேண்டும். இறை விக்கிரகத்திற்கு பூக்களை அவை அவசரத்தில் எறிவது போன்று அமையக்கூடாது. மெதுவாக தட்டில் இருந்து பூவை நெஞ்சுக்கு மேலாக உயர்த்தி, நாத அமைப்பாக மந்திரத்தை உச்சரித்து, இறை விக்கிரகத்தை நோக்கி வில்லாக வளைத்து பாதத்தில் விழும் வண்ணம் போடவேண்டும். அப்பொழுது மக்களின் மனதில் அது தன்னையே இறைவனிடம் சமர்ப்பிக்கக் கூறுவதை நன்கு எடுத்து விளக்கும். நெஞ்சுவரை உயர்த்துதல் எமது உள்ளத்தைக் குறிக்கின்றது. பாதத்தில் பூவைப் போடுதல் எமது உள்ளத்தை இறைவனிடம் அர்ப்பணித்தல் ஆகும்.

ஆனால் இன்று ஆலயங்களில் அவசரமாகப் பூசைகள், அர்ச்சனைகள் நடைபெறுவதனால் இந்த அர்ப்பணம் செய்யும் சிந்தையை மக்கள் மனதில் ஏற்படுத்தாமல் பூக்கள் அனேகமாக எறியப்படுவதைத்தான் காணக்கூடியதாக இருக்கின்றது. மக்கள் அதை ஆலய பூசை, அர்ச்சனை என்ற நடைமுறைகளில் சாதாரணமாக விளங்கி அர்ச்சனைத் தட்டு, பிரசாதம் பெறுவதை முக்கியமாகக் கருதி, அதைப் பெற்றவுடன் ஆலயம் வந்து பூசை, அர்ச்சனை செய்ததாக திருப்தியடைந்து, இறைவனை வணங்கி விட்டதாக எண்ணி வீடு செல்கின்றார்கள். இப்படி ஆலயத்தில் நடக்கின்றதோ, இல்லையோ என்பதை நீங்களே சிந்தித்து எமது சொல்லில், செயலில் தெய்வீகமாகுவோம். பூசையின்போது, அர்ச்சனையின்போது விபூதி, தீர்த்தம், சந்தனம், குங்குமம் பிரசாதமாக வழங்கப்படுகின்றன. விபூதி நீறானது. எருவின் சாணத்திலிருந்து பெறப்படுவதனால் இது உடலுக்கு "சர்வரோக நிவாரணி." (Disinfectant) உடலில் உள்ள சரும வருத்தங்களையும், கிருமிகளையும் நீக்குகின்றன. நீறாகிய தன்மையில் இங்கே எதுவும் நிரந்தரமில்லை. எல்லாம் நீறாகக்கூடியவையே, அதில் நம்பிக்கை வைக்காதே என்று எமக்கு உணர்த்துகின்றது. மூன்று குறியாக நமது உடலில், நெற்றியில் அணியும்போது இந்த உடல் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரபஞ்ச நிலை அமைப்புகள் எல்லாம் முக்கூட்டு நிலையில் அமைந்ததே என்று எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. தீர்த்தம், அபிஷேக ஔடதம். இதை வாய்க்குள்ளும், சிரசிலும், கண்களிலும் ஒற்றுகின்றோம். இது எங்கள் புலன், உடல் முதலியவற்றை துப்பரவுசெய்து புனிதமாக்குகிறது. சகல கிருமிநாசினியான மருந்து கொடியிலைகள், அதிலிருந்து பெறப்பட்டவை. பாலுடன் கலந்து இவ்வுடல் இறைநிலையை வளர்க்க அதன் நோய்களைக் கண்டிக்கின்றது. மந்திரம் ஓதப்பட்ட இத்திரவியங்கள் அந்த நாத அலைகளை எமக்கு அளிக்கின்றன.

மந்திர சப்த நிலையை கவர்ந்த விக்கிரகத்து நீராகையால் அது ஆன்மீக நினைவை வளர்க்கின்றது. சந்தனம், குங்குமம் எல்லாம் எமது புருவமத்தியில் இடப்படுகின்றது. தீர்த்தம் சிரசில் தடவப்படுவதனால் இறை தளத்திற்கு அந்த ஔடத மந்திர தீர்த்தம் ஞானம் பெறும் வகையில் குளிர்மையை ஏற்படுத்துகிறது. குங்குமமும் சந்தனமும் புருவமத்தியில் சிந்தித்து, தியானிப்பதற்காக அந்தஇடத்தை குறித்துக்காட்டி குளிர்மை ஆக்கி, ஞானத்தை வளர்க்குமிடமாகின்றது. பூசைமுறை அந்த பரபிரம்ம சிவத்தை கண்ணுக்குத் தெரியும் விக்கிரகத்தில் உபசரித்தல் ஆகும். இறைவனை அங்கு விளங்கி எம்முள் ஆத்மாவை அதுவாக கண்டு அதே எங்கும் என்று சிந்தித்து வாழ்வில் உயர்தலாகும். "ஆவாகனம்" என்பது இறைவனை விக்கிரகத்தில் மந்திரத்தால் எழுந்தருளப்பண்ணுதல் ஆகும். "திருப்பள்ளி எழுச்சியும்" இதுவே. "ஆசனம்" இறைவனுக்கு ஆசனம் கொடுத்தல். எம்முள்ளத்தில் இறை சிந்தனைக்கு இடம்கொடுத்தல் ஆகும். "பாத்தியம்" - கால், இறைவனது பாதங்களை கழுவுதலாகும். இது இறை அடி வைத்தற்குச் சமம். அவருடைய பாதத்தை, அடியை நினைப்பை, எமது சிந்தையில் கொள்வதாகும். "அர்க்கியம்" - சந்தனம், அரிசி முதலிய உலக பொருட்களை இறைவனுக்கு அதில் பற்றற்று சமர்ப்பித்தலாகும். "உபவீதம்" - இறைவனுக்கு பூணூல் அணிவித்தல். இறைவன் சொரூப நிலையான அத்வைத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையையும், சிவசக்தி என்ற நிலையை பிரபஞ்சமாகக் கொண்டவன் என்பதை பூணூல் அணிவித்தல் விளக்குகின்றது. பிராமணர் இதுபோல் பூணூல் அணியும்போது, இறைசேவை செய்வதனாலும், ஆலயங் களினாலும் ஆலயங்களின் அர்ச்சகர் என்ற முறையிலும் இருநிலை பெறுகிறார்கள். முதலில் இவ்வுலக நிலையில் அமைந்தவர்கள் பின் பூணூல் அணிந்ததும், அடுத்த நிலையான இறைசேவையில் ஈடுபடுகின்றார்கள். இது "ஆன்ம" சிந்தனையை மக்களுக்கு ஏற்படுத்தும் ஆலயசேவை.

அடுத்ததாக "சந்தனம்", இறை விக்கிரகத்திற்கு சாத்துதல் ஆகும். சந்தனம் நறுமணம் உள்ளது, குளிர்மையானது. சரும வியாதிகளுக்கும் நல்லது, அத்துடன் அலங்காரமானதும். இறைவிக்கிரகத்திற்கு சாற்றப்படுவதை நாம் உள்ளத்தில் உணர்ந்து எமது உடலை சந்தனமயமாக்கவேண்டும். உள்ளம் அந்த நறுமணத்தில் திகழவேண்டும். சந்தனம் இறைவனை உபசரிக்கும் பொருள் ஆகையால் எமது நித்திய வாழ்க்கையில் எல்லா மங்கள காரியங்களிலும் மக்களை வரவேற்பதற்காக இதைப் பாவிக்கின்றோம். நெற்றிப்புருவத்தில் பொட்டிட்டு வரவேற்-கின்றோம். சந்தனம், தண்ணீருடன் சேர்த்து அரைக்க கட்டையாக இருந்தபொருள் குழைந்து ஓர் பசைத்தன்மையான பொருளாக எதிலும் அப்பக்கூடிய, படியக்கூடிய தன்மையில் அமைகின்றது. எமது மனம் "நான்" என்று எல்லாவற்றையும் வித்தியாசப்படுத்திப் பார்த்து, தன் உடலைப் பிரித்து, அகங்காரம் கொண்டு இறுக்கமாக கட்டையாக நிற்கின்றது. எமது உள்ளமும் அதன் குழைவும் வெளித்தெரிவதில்லை. எப்பொழுது உள்ளம், அன்பு எனும் (நீர்) ஊற்றில் இறுக்க மனதை குழையச் செய்கின்றதோ அப்பொழுது தெய்வமாகுவோம். இறுக்கமான மனம் தெய்வீக கருத்துக்களை நாம் ஏற்ற நிலையில் மட்டும்தான் வைத்திருக்க வேண்டும். இது "வைராக்கியம்". இதை வேதாந்தம் எடுத்துக் கூறுகின்றது. மற்ற உலகச் செயல்களில் மற்றவர்களை மதிக்கும் தன்மையிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றென்று நினைக்கும் தன்மையிலும் வைராக்கியமாக இருக்க வேண்டும். ஆணவமற்ற, சுயநலமற்ற செயல்களில் உறுதி வேண்டும். சுயநல தேவைகளில் வைராக்கியம் வைத்தல் மனதை அசுரநிலையில் வைத்து உள்ளப்பெருக்கை உணரவிடாமல் அவரையே அழித்துவிடும். ஆகவே வாழ்வில் உள்ளத்தின் குழைவுக்கு எமது மனதை சந்தனம் இறுக்கநிலையில் இருந்து குழைவது போல் ஆக்குவோம். அடுத்ததாக "புஷ்பம்", "தூபம்", "தீபம்", "கற்பூரம்" இந்த உபசாரங்களை ஏற்கனவே விளங்கினோம். "நைவேத்தியம்" அமுது கொடுத்தல். "அமுது" கொடுத்தல் இறைவனுக்கு உணவு கொடுத்தல் ஆகும். ஏன் இதைச் செய்கிறோம் என்றால், அந்த உணவை இறைவனுக்கு சமர்ப்பிக்கும் நிலையில், அந்த நினைவில் சமர்ப்பிக்கப்பட்ட உணவை மக்களாகிய இறை "ஆன்மா"க்களிடம் சமர்ப்பித்துப் பகிர்ந்து உண்ணவேண்டும் என்பதற்காகத்தான் அநேகமாக பிரசாதமாக ஆலயத்தில் இதை வழங்குகிறார்கள். இதை எம் வாழ்வில் எமது பொருளாதாரத்திற்கு ஏற்ப, வீட்டுக்கு வந்தவர்களை உபசரிக்க வேண்டும். கூன், குருடு, நொண்டியாக இருப்பவர்களுக்கு எம்மால் முடிந்ததைச் செய்யலாம். உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்ற நிலையில், அவர்களும் நிறைந்த ஆத்மனே என்று சிந்தித்து தானம் செய்யவேண்டும். வைத்தியசாலைகளில் இரத்ததானம், உணவு வழங்குதலும் மிகச்சிறந்தது. எல்லாவற்றிலும் மேலான தானம் இறையடியார்களைச் சேவித்தலாகும். ஆகவே ஆலயத்தில் நைவேத்தியம் வைத்தல் மேற்கூறிய கருத்துக்களை சிந்தித்து எம்மை மற்றவர்களுக்காக பணிக்கின்றது. "தாம்பூலம்" இறைவனுக்கு ஆலயபூசையில் வழங்கப்படுகின்றது. இறை நினைவில் ஆனந்தமாக இருக்கமுடியும். அதே நிலையில் மற்றவர்களையும் களிப்பூட்டமுடியும் என்பதை தாம்பூலம் வழங்குதல் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. வீட்டிலும் உணவு அருந்தியபின் தாம்பூலம் வழங்கி விருந்தினரை உபசரித்தல் இதன் கருத்தாகும். "சோடச உபசாரம்" செய்தல் என்பது இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரகத்திற்கு கண்ணாடி, குடை, ஆலவட்டம், சாமரம், கொடி முதலிய ஆறுதலை களைத்த நிலையில் கொடுக்கும் பொருட்களால் ஆதரித்தல் ஆகும். அதுவே இவற்றைக் காட்டி பூசை செய்யும் தன்மையாகும். களைத்து வந்த விருந்தினரை ஆறுதலாக காற்றாடியை போட்டு அவருக்கு களைப்பு நீங்கும் உபசாரங்களைச் செய்து, பின் வந்த விடயத்தை கதைப்பதாகும். "சுவர்ணபுஷ்பம்" என்பது உலகயியலில் மிக விலையுயரிந்த பொருளாகிய தங்கத்தை, மிகக்கூடிய ஆசையை, கையுறையாக வைத்து வணங்கல். பணத்தைக் கொடுத்து ஆலயத்தில் நாம் எமது "அவாஞ்சையை" அதில் குறைக்கவேண்டும். "விசர்ஜனம்" - உலகநிலையில் இவற்றைச் செய்து அதன் கருத்துக்களை சிந்தையில் கொண்டு ஆலயத்தில் இருந்து விடை பெறுதலாகும். இது இறை சிந்தனையை மனதில் பதித்து உலகவியலில் நாம் விடைபெற்றுச் செல்லுதலாகும்.

சொரூப நிலையான இறைவனை அப்பர், "சோதி" வடிவானவன் என்று "சொற்றுணை வேதியன் சோதிவானவன்" என்கிறார். இறைநிலையை இப்பிரபஞ்சத்தில் சோதியாகவும், ஞானமாகவும் உணரலாம். இந்த நிலையை மக்கள் இலகுவில் ஏன் விளங்க முடியவில்லை? சற்று சிந்தித்தால் உண்மையை அறியாத ஆசைகள், அறியாமையை ஏற்படுத்தி எம்மில் பலங்கொண்டு நிற்பதே காரணம். பரிணாம வளர்ச்சியில் பல அமைப்புகளில் பல பிறவிகளில் நமக்கு ஆசையை அனுபவிக்க சந்தர்ப்பம் அளிக்கப் படுகின்றது. மனிதப்பிறவியில் உண்மையை விளங்க கிடைத்தற்கு அரிய அருமருந்தாகிய "பகுத்தறிவு" ஏற்படுகிறது. இதை மனிதர்கள் பாவித்து உண்மைப்பொருளை - ஆன்மாவை பகுத்து விளங்கியவர்கள் அடுத்த பிறவிக்கு தவம் உடையவர்கள் ஆவார்கள். மற்றவர்கள் தன்னைத்தானே அழித்துக் கொள்கிறார்கள். இதுவே இந்துமத பிரதான விளக்கம் ஆகும். ஆலயங்களில் நாம் "சிவபுராணம்" பாடும்பொழுது இதை நன்கு உணரலாம். மாணிக்கப் பெருந்தகை "புல்லாகி பூடாகி புழுவாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரமாகி பல்மிருகமாய் பறவையாய் பாம்பாகி கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய் தேவராய் எல்லாப் பிறப்பும் பிறத்திழைத்தேன் எம்பெருமான்" இனிப் பிறவி வேண்டாம் என்றார். இங்கு பல பிறப்புக்களையும் அதில் மனிதரைக் குறிக்கும் வரை பரிணாம வளர்ச்சியையும் ஒழுங்காக அமைத்து கூறாவிட்டாலும், ஒரு கல அங்கியிலிருந்து பாலூட்டிகள் வரை கூறியுள்ளார். மேலும் பாலூட்டிகளில் சிறந்த மனிதனை கூறி அதற்கு மேலான பகுத்தறிவு நிலை என்பதால் "பேயிலிருந்து - தேவர் வரை" மனிதமனம் வளரும் நிலையை காட்டுகின்றார். ஆகவே மனிதன் தன் செயல்களால், மனதை தெய்வீகமாக்கி, தேவராகி பிறவியற்ற இறைவனாகலாம் என்று அர்த்தம்.

உண்மையை நாம் சிந்திக்கவேண்டும். விஞ்ஞானம் முன்னேறிய இக்காலத்தில் மிகப் படித்த மேதைகள், விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் இறைநம்பிக்கையைப் பெரும்பாலும் இழந்து விட்டார்கள். ஆனாலும் தாங்கள் வாழ்க்கையில் நினைப்பது எல்லாம் எவ்வளவு விஞ்ஞானம் முன்னேறினாலும் எப்பொழுதும் நடப்பதில்லை என்றும் அவர்களுக்கு நன்கு தெரியும். அந்த மாற்றமில்லாத "உண்மைப்பொருளை" விளங்க அவர்கள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால் ஆலயம் இறுதியில் நாம் துன்பங்களைத் தரும் பிறவியை நீக்க எங்களில் அமைந்த ஆன்மாவை மட்டும் எல்லோரும் எல்லாவற்றிலும் உணரக் கூறுகிறது. நாம் ஆலயம் காட்டிய வழியில் பந்தபாசத்தை குடும்பத்தில், உலக வாழ்வில் குறைத்து மற்றவர்களை வெறுப்பதை விடவேண்டும். குடும்பத்திற்கு, சமூகத்திற்கு நாம் துணையிருந்து முடிந்தவற்றை செய்யவேண்டும். ஆனால் எதையும் மனதில் பதிக்கக்கூடாது. எல்லாவற்றையும் "இறையருளால் செய்கிறேன், அவர் திருவருள் இல்லாமல் இந்த உடல் செயற்படவில்லை" என்பது எமது மனதை நிறைக்கவேண்டும். இதைத் தேவாரமாகப் பாடவேண்டும். அல்லது நமது மனது தேவாரங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடவேண்டும். இதை எப்படி சிந்திக்கலாம் என்று யோசிக்கக் கூடாது. "நான்" என்ற உடல் அகங்காரத்தைக் குறைக்க நாம் இப்படி நினைத்து ஈடுபடலாம். இது முடியும். ஒரு விஞ்ஞானி தனது ஆராய்ச்சியில் ஈடுபடும்பொழுது அந்தப் பொருள் ஆராய்ச்சியைத் தவிர அவர் மனதில் வேறு சிந்தனையும் இருக்காது. அங்கு "ஆன்ம சிந்தனையும்" இல்லை. அவர் முழுமையில் ஒரு சிறு பொருளை ஆராய்வதனால் அதில் முழுக் கவனத்தையும் (Concentration) செலுத்தி அதைக் கண்டு பிடிக்கிறார். அல்லது அதை மனதில் பதித்து இறக்கின்றார். உதாரணமாக "ஐன்ஸ்டீன்" (Eienstein) வெளிக்கும், நேரத்திற்கு உள்ளும் இந்த பிரபஞ்ச நடவடிக்கைகளை, விஞ்ஞான ஆராய்ச்சிகளைக் கண்டவர், நேரத்திற்கும் - வெளிக்கும் அமையாத நேரம் - வெளி என்ற நிலையையும் உணர்ந்தார். ஆனால் இறந்து விட்டார். ஞானிகள் இதை நன்கு உணர்ந்தவர்கள். மக்களுக்கு ஆலய பூசைகள் மூலம் பரபிரம்ம சிவத்தை விளக்கமுடியாத நுண்ணிய அலைவரிசைகளை, முடிந்தவரை எடுத்துக் காட்டி உள்ளார்கள்.

மக்களாகிய நாம், இவற்றை வாழ்வில் உணர்ந்து நடக்க வேண்டும். கூன், குருடு, நொண்டியாகவோ அல்லது வருத்தங்களை கொண்ட அமைப்பிலோ யாரும் பிறக்க விரும்பமாட்டார்கள். பல பிறவிகளில் நாம் வினைப்பயனை அனுபவிக்கின்றோம் என்பதை முன்பு உதாரணம் மூலம் நிரூபிக்கப்பட்டு விளங்கினோம். ஆகையால் சமயம் தேவையா? என்று கேட்பவர்கள் இக்கருத்துக்-களை நன்கு சிந்திக்கவேண்டும். சமயம் என்பது எமது நித்திய வாழ்க்கை அது ஒரு பிரிவல்ல, மக்களை இனம் பிரிக்கக் கூடாது. இன்று மக்கள் இதில் பிரிந்து நிற்கிறார்கள். தங்கள் சமயத்தைத் தவிர மற்றவைகளைக் குறைத்துப் பார்க்கிறார்கள். இது "பிழை" எல்லாம் ஒன்று என்று நிறைவாக நாம் பார்க்க வேண்டும். இந்துமத ஆலய இராஜகோபுரம் எல்லோரையும் வித்தியாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றி வரவேற்கின்றது. ஆனால் எவரையும் கட்டாயப்படுத்த-வில்லை. எமது மதத்தில் சேருங்கள் என்று வீடுவீடாகவோ அல்லது தெருத்தெருவாகவோ சென்று எவரையும் வரச்சொல்லிக் கூறவுமில்லை. நாங்கள் ஆலயம் சென்றால் என்ன, செல்லா விட்டால் என்ன இந்துமத கிரியைகளை விரும்புபவர்களுக்கு எப்பொழுதும் நிறைவாக அவை உண்டு. ஆலய நிர்வாக நடைமுறைகளில் பல குறைகள் இருக்கலாம். அதை மக்கள் எடுத்துக்காட்டும்பொழுது அதை நிர்வாகம் சிந்தையில் கொண்டு ஆலய முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துவது மிக முக்கியம். அதற்கு இறைவன் திருவருள் என்றும் இருக்கும். ஆலயம் செல்லும் மக்கள் அங்கு தேவையற்றதைக் கதைக்காமல், சிந்திக்காமல், ஆலய நிகழ்ச்சிகளை இங்கு கூறியபடி விளங்கி அதில் மட்டும் ஈடுபடுவது சாலவும் சிறந்தது. மன அமைதியை விரும்பும் நாம் அங்கு சென்றும் ஏன் தேவையற்றதைக் கதைக்கவேண்டும்? அதை நாம் தவிர்க்கமுடியும். தவிர்க்கவேண்டும். ஆலயங்கள் எமது ஆத்ம சிந்தனையை வளர்க்கும் இடம், அங்கு ஆலய நிகழ்ச்சிகள் ஓய்வடைந்த நேரத்தில் ஓரமாக அமர்ந்து இந்த "ஆன்மாவை" தியானிக்கப் பழகவேண்டும். தேவாரங்கள் மனம் நிறையப் பாட வேண்டும். ஆலய நிகழ்ச்சிகள் இப்படி விளங்கி நிலையில் வாழ்வில் வித்தியாசங்களைத் தவிர்த்து, வெறுப்பை அகற்றி எம்மால் ஆனதை சுயநலமற்று செய்து வாழப்பழகுவோம். இன்றே வாழத் தொடங்குவோம், முயற்சிப்போம். ஆலயங்கள், பூசைகள், அர்ச்சனைகளுடன் எவரையும் "ஆத்ம சிந்தனையை" வளர்க்காமல் நிற்கக் கூறவில்லை. ஆனால் ஞான தத்துவ நிலையில் உள்ளவர்கள் பலர், மக்கள் ஆலயங்களில் ஆத்ம சிந்தையை வளர்க்காமல் நின்று விடுகிறார்கள் என்று கவலைப் படுகின்றார்கள், கவலைப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாக தத்துவஞானி "கிருஷ்ணமூர்த்தி" தனது உண்மை விளக்கங்களில் இதை எடுத்துக் காட்டியுள்ளார். மக்களும் ஆலயபூசையுடன் இறைவனை பிறிதாக்கி ஆலயத்தில் வணங்கி விட்டோம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பில் வீடு திரும்புவதை நாம் காண்கிறோம். இந்த நிலையை எம் மனதில் இருந்து அகற்றி இங்கு கூறியவற்றைச் சிந்தித்து வாழ்வில் செயற்படுவோம். நாம் பிறவியெடுத்த நிலையை விளங்கிப் புனிதமாக்குவோம். ஆலயங்கள் ஒரு பொழுது போக்கல்ல. மக்களை சந்திக்கும், உலக கருத்தரங்கு மேடையும் அல்ல. சிந்தனை சிற்பிகளை, ஏன்? எதற்காக? என்று கேட்கக் கூடியவர்களை ஆத்ம சிந்தனையை வளர்க்கக்கூடியவர்களை இதுதான் உண்மைப்பொருள், இதன் நிலையை இப்படி நாம் உலகில் சிந்திக்கலாம், என்று எடுத்துக்காட்டி இப்படி வாழுங்கள் என்று வழிவகுக்கின்றன. நாம் உணர்வோம். அதன்படி வாழ்வோம். ஆகவே ஆலயங்கள் "உண்மை" விளக்கம் மட்டுமல்ல. எமது வாழ்வின் அர்த்த மண்டபமும் விளங்கமுடியாத, புலனறிவிற்கு எட்டாத கருத்துப் பொருளை உலகப்பொருட்கள் மூலம் முடிந்தவரை எடுத்துக் காட்டி, ஞான அறிவை உணர்த்தும் தத்துவசாலை. எந்த மதத்திலும் ஆலயங்களை ஒருபொழுதும் எவராலும் அழிக்க முடியாது. சாதாரண மனிதனுக்கு ஆலய நடவடிக்கைகள் ஆனந்தத்தைக் கொடுக்கின்றன, உண்மையை எடுத்துக்காட்டி பக்தியை வளர்க்கின்றன. மனிதன் எங்கும் நிம்மதியைத் தேடி ஓடுகிறான். எங்கும் அமைதி கிடைக்கவில்லை. விஞ்ஞானமும் அதை கொடுக்கவில்லை. எங்கே நிம்மதி? ஆலயம் காட்டும் வழியில் சமயத்தை வாழ்வாகக் கொள்வோம். உண்மைப் பொருளை எல்லா வற்றிலும் ஒன்றெனக் காண்போம். அந்த ஆத்ம தியானமே வாழ்வெனக் கொள்வோம். இதுவே நிரந்தர நிம்மதிக்கு வழி. இது சிந்தனைக்கு விருந்து.

எமது வாழ்வை ஒரு படத்தைப் பார்ப்பது போல் நாம் உணர வேண்டும். மனதில் எந்தக் களிப்போ துக்கமோ இறுக்கமாகப் பதியக்கூடாது என்பதை "உண்மையை" விளக்கிய முறையில் ஆலயம் உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றது. எதுவும் "உண்மைப் பொருளை" தவிர பதிந்தால், அந்த அறியாமையால் கர்ம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையாக பல பிறவிகளில் அந்தப் பதிவுகள் உருவெடுக்கும். சிந்தனை சிற்பிகளே, சிந்தியுங்கள்! எங்கள் சிந்தனைகளே எம்மை உருவாக்கின்றன.என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது.

**********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org